
www.tamilarangam.net

# சுவடுகள்



75 வது இதழ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நிலா நடுதல்

றிஸ்வியூ முஹம்மத் நபீல்

எறிய, எறிய மறுபடி மறுபடி
என்,
கைக்குள்ளே கிடக்கிறது
அவன் மனது.

ஒளி ஓடி மறைந்த
ஓர் இராக்காலம்;
"அவன் என் நண்பன்"
குருவி நிற்க ஆடும்
சிறுகொப்பு மனத்தோன்.

அழுதால்,
இமைமயிர்
கரையும் அழகன்.

என் சோணையில் புறா பறக்க
பூவரசம் விதை தூவி,
நிலா நடுவான்.

நெருங்கி மிக நெருங்கி
என்,
முக்கின் நுனி துளிர்க்கப்
பூவால் நீரள்ளி விடுவான்.

என் முதுகுப்புற விலா என்பு
பலமுறை அவனிடம்
முறையிட்டுக் கொள்ளும்:

"உன்னை ஒருமுறை நான்
கக்கத்தில் இடுக்கும் வரம்தா" என்று


வழக்கொழிந்த என் தோட்டம்
உண்டாக,
குடலில் செமிக்கும்படியான
பெருநாற்று நடுவதும்
அவன் பொறுப்பே.

மெல்லிய ரோமம்,
நெஞ்சு மயிர்
Evocation
விலையற்ற அவன் பற்கள்;
அம்மா... அம்மம்மா...

மின்னல் ஒரு இடி
என் மார்புகளைப் பிளந்தான்.

விமானக் கோடுகள் போல்
தூரத்தில் புகையாகி அவன்;
நான்
விம்மி நிற்க.

www.tamilarangam.net



# உள்ளே நுழைய முன்.....

உள்ளே நுழைய முன்.....

சுவடுகள் 1988 பிற்பகுதியில் வெளிவரத் தொடங்கிய ஒரு சஞ்சிகை. ஐரோப்பாவில் அனேக தமிழ்ச் சஞ்சிகைகள் தொடங்கிய காலப்பகுதியில் சுவடுகளும் வெளிவரத் தொடங்கியது. பல சஞ்சிகைகள் பல்வேறு காரணங்களால் நின்றுபோன பின்பும் சுவடுகள் இன்றும் வெளிவர முடிந்திருக்கிறது. கடந்த ஆண்டு பிற்பகுதியில் சுவடுகளின் ஏழாண்டு நிறைவிதழைச் சிறப்பாக வெளியிடத் திட்டமிட்டிருந்தோம். அவ்விதழில் பல புலம்பெயர் படைப்பாளிகளது படைப்புகளையும் கொணரத் திட்டமிட்டிருந்தோம். எனினும் அது சாத்தியமாகாமலேயே போயிற்று. எனவே 75வது இதழைச் சிறப்பாக வெளியிடுகிறோம்.

கடந்த வருடப் பிற்பகுதியில் இருந்து சுவடுகளைப் பொருளாதார நெருக்கடி முன்னெப்போதையும் விடக் கடுமையாகத் தாக்கியது. இத்துடன் இதர நெருக்கடிகளும் இணைந்துகொள்ள சுவடுகள் தனது வெளியீட்டில் தாமதங்களையும், ஒழுங்கீனங்களையும் சந்திக்க நேர்ந்தது. கடந்த வருடப் பிற்பகுதியில் இருந்து தமிழ் மக்களுக்கு எதிராகத் திட்டமிடப்பட்ட இனவாதச் சிங்கள அரசின் தாக்குதல்கள், அவற்றின் பின்விளைவுகள், மக்களின் சொல்லொணாத் துயர்கள் என்பவற்றினைப் போதியளவில் சுவடுகள் பதிவாக்காததற்கும் இந்த நெருக்கடிகள் காரணமாயின. கடந்த இதழ்கள் சிலவற்றிலும் வரும் இதழ்களிலும் வெளிவரும் படைப்புகள் காலப் பொருத்தமற்று இருப்பின் அதற்கும் இதுவே காரணம். இந்த நெருக்கடிகளில் இருந்து மீள்வதற்கான முயற்சிகளைச் சுவடுகள் தொடர்ந்து மேற்கொண்டதன் விளைவே உங்கள் கைகளில் இந்த இதழ். சுவடுகள் இப்போதும் உறுதியான பொருளாதார அடித்தளத்தில் இல்லை. ஆயினும் உங்கள் கைகளிலேயே அந்தப் பொறுப்பை விடுகிறோம். அதைச் சீராக்கிச் சுவடுகளின் தொடர்ச்சியான வருகையை நீங்கள் உத்தரவாதம் செய்வீர்கள் என நம்புகிறோம்.

சுவடுகள் நிறுவிய நாள் முதல் அதன் வளர்ச்சியில் உழைத்து, இன்றும் அதன் வருகைக்கு ஆதரவு தரும் அனைத்து வாசகர்களையும் படைப்பாளிகளையும் இத்தருணத்தில் நன்றியுடன் நினைவுகூர்கிறோம்.

சுவடுகள் எப்போதும் போலவே சகல மக்களதும் அடிப்படை மனித உரிமைகளுக்காகவும், பேச்சு - எழுத்து - கருத்துச் சுதந்திரத்துக்காகவும் குரல்தரும். இதில் சமரசத்துக்கோ விட்டுக்கொடுப்புக்கோ இடமில்லை. தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமைக்காக மாத்திரமன்றி, இலங்கையில் வாழும் ஏனைய தேசிய இனங்களதும் சுயநிர்ணய உரிமைக்காக உரத்த குரல் எழுப்பும் அனைவருடனும் எப்போதும் போலவே சுவடுகள் நேசம் கொள்கிறது.

சுவடுகளை வாசியுங்கள். விமர்சியுங்கள். விமர்சனக் கடிவாளம் இல்லாமல் எந்தக் குதிரையும் திசையறியாது.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

**சுவடுகள்,**
**வைகாசி 1996,**
**ஒஸ்லோ, நோர்வே.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சுகனின் இரு கவிதைகள்

## ஒஸ்லோவிலிருந்து துரொம்சோவிற்கு



பனிக்காற்று பலமாக வீசுகிறது.
தரையிறங்கும் சூழ்நிலை விமானத்திற்கில்லை.
மேகவெளியிற்கூட
என் அற்ப உயிரை அந்தரிக்கவிட்ட
ஆண்டவரே!
நிரந்தரமாய் ஓரிடத்தில் காலை
ஆழப்புதைத்து அழுகவிடு.
விமானப் பணிப்பெண்ணே, குடிப்பதற்கு
ஏதாவது தா!
என்ன குடிக்க விரும்புகிறீர்கள்?
உனது முலைப்பால் அல்லது
ஒரேஞ் யூஸ்.
இலக்கற்றுத் திரியும் நானும்,
இலக்கோடு அலையும் நீயும்.
எனது ஊருக்கு வா.
சுடு மணலால் மூடி
முரல் சுட்டுத் தருகிறேன்.

## சார்ள் து கோல் விமான நிலையம்

உனது பாஸ்போட்டைத் தா
இந்தாருங்கள்!
நீ சிறிலங்காவிலிருந்து வருகிறாய்?
இல்லை, நோர்வேயிலிருந்து வருகிறேன்.
நீ சிறிலங்காவிலிருந்து வருகிறாய்?
இல்லை, நோர்வேயில் ஒஸ்லோ, துரொம்சோ ஆகிய இடங்களிற்கு போய்வருகிறேன்.
துரொம்சோ எங்கிருக்கிறது, ஏன் அங்கு போனாய்?
பத்து வருடங்களாக என் நண்பரைக் காணவில்லை.
பார்க்கப் போயிருந்தேன்.
அவர் அங்கு என்ன செய்கிறார்?
பூமியின் வடதுருவத்தில் காந்தப் புலம், ஓசோன்படலம்
இவற்றில் கவனம் செலுத்துகிறார்.
இல்லை, நீ சிறீலங்காவிலிருந்து வருகிறாய்?
ஒன்பது வருடங்களாக நான் பிரான்ஸில் இருக்கிறேன்.
இப்போது என்ன செய்கிறாய்?
வேலையிழந்தவர்க்கான உதவிப்பணத்தில் இருக்கிறேன்.
அதற்கான அத்தாட்சியைத் தா?
அது எனது வீட்டில் இருக்கிறது
நோர்வே பெண்கள் அழகானவர்களா?
பேரழகிகள் அல்ல, ஒரே ஒருதரம் படுத்தவுடன்
களைத்துப் போய்விடுகிறார்கள், பிரெஞ்சுப் பெண்கள்
அப்படியல்ல, ஓரிரவில் ஆறுமுறை படுத்தாலும் களைக்கமாட்டார்கள்.
சரி நீ போகலாம்.



www.tamilarangam.net

# வேறொரு நிறவாதம்

சி.சிவசேகரம்

ஐரோப்பாவில் இன்று ஓங்கிவரும் நிறவாதம் பற்றிய கவலைகள் நம்முட் பலருக்கும் உண்டு. இந்த நிறவாதத்தின் அடிப்படையில் ஒரு ஐரோப்பியத் தேசியவாதத்தை உருவாக்கும் முயற்சிகளையும் நாம் அறிவோம். ஐரோப்பிய நிறவாதத்தின் தோற்றுவாய் நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. அதன் தன்மை சமுதாய அமைப்பையும் வரலாற்றையும் ஒட்டி வேறுபட்டுள்ளது. ஆயினும், கடந்த நூற்றாண்டுகளில், அதன் வெளிப்பாடு ஸெமெற்றிக் இனவிரோதம், அடிமை வியாபாரமும் அடிமை முறையும் என்ற வடிவங்களிலேயே முக்கியமாக அமைந்திருந்தது. ஸெமெற்றிக் (semetic) எனும் பதம் அராபியரையும் யூதரையுங் குறிக்கும் என்றபோதும், யூதவிரோதமே ஐரோப்பாவில் முக்கியத்துவம் பெற்றது. இதற்கான காரணம் புலம்பெயர்ந்த யூதர்கள் ஐரோப்பிய நகரங்களிற் கணிசமானளவுக்குக் குடியேறியதையொட்டியது. ஷேக்ஸ்பியர் நாடகங்களிற்கூட இந்த யூத விரோத உணர்வின் சாயல்களை நாம் காணலாம். இதைக் கலாசார, மத அடிப்படைகளிற்கூட நியாயப்படுத்துவது இயலுமாயிருந்தது. இதுபோலவே நாடோடி இனத்தவருக்கு எதிரான உணர்வும் ஐரோப்பாவிற் பரவலாகியது. நாடோடிகளது தரிப்பிடங்களும் பயணப் பாதைகளும் நிலக்கிழார்களது தனியுடைமையாகியதையொட்டி அவர்கள் அத்துமீறிப் பிரவேசிப்போராகக் கருதப்பட்டனர். ஐரோப்பாவின் சமுதாய மாற்றம், நாடோடிகள் தமது வாழ்க்கை முறையைத் தொடர்வதைக் கடுமையாக்கிற்று. இதன் விளைவாக நாடோடிகள் ஒரு சமுதாயத் தொல்லையாகவே கருதப்பட்டனர். முதலாளித்துவத்தின் வருகை ஏற்படுத்திய பொருளாதார வளர்ச்சி, அந்த முறைக்கு அயலான வாழ்க்கை முறைகளைத் தாழ்வானவையாகவும் அயலான மனிதர்களைப் பிற்பட்டோராகவும் கருத இயலுமாக்கிற்று.

ஐரோப்பிய வல்லரசுகளது தோற்றமும் வளர்ச்சியும் புதிய அடிமை முறையின் வளர்ச்சிக்கு வசதி செய்தன. இந்த ஐரோப்பிய நாகரிகங்களது இன்றைய விருத்தியின் ஆதாரம் அதற்கு வெளியேயிருந்து பெறப்பட்ட அறிவும் தொழில்நுட்பமும் என்பதை மறைக்கும் முயற்சிகள் இன்னுந் தொடர்கின்றன. இதுபற்றி முற்போக்குச் சிந்தனையாளர்களும் ஆய்வாளர்களும் மிகவும் எழுதியுள்ளனர். சில மாதங்கள் முன்பு சுவடுகளில் வந்த சமுத்திரனின் கட்டுரையில் நிறவாதம் தொடர்பாகப் பல பயனுள்ள குறிப்புகள் இருந்தன. ஐரோப்பிய முதலாளித்துவத்தின் வளர்ச்சி கொலனி முறையுடன் இணைந்த சூழலில், ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகள், முதலாளித்துவ முறைக்கு உட்படாத நாடுகளைத் தம் ஆதிக்கத்திற்குட்படுத்தி அவற்றைக் கொள்ளையடித்ததுடன் அவற்றின் இயல்பான சமுதாய வளர்ச்சியைப் பல வகைகளில் மறித்தனர். இதன் விளைவுகளை இங்கு விவரிக்க அவசியமில்லை. அவுஸ்திரேலியாவிலும்

www.tamilarangam.net

அமெரிக்காவிலும் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு முதல் ஆபிரிக்க மக்களை அடிமையாக்கி ஆசியாவின் சமுதாயங்களைச் சீர்குலைத்தது வரையிலான நடவடிக்கைகளை நியாயப்படுத்த, ஒரு புறம், இந்தக் □காட்டுமிராண்டிகட்கு□ நாகரிகம் கற்பிக்கும் நன்னோக்கமும், மறுபுறம், இனமேம்பாடு பற்றிய கருத்தாக்கமும் பயன்பட்டன. எல்லா ஐரோப்பிய நாடுகளது கொலனி ஆட்சிகளும் ஒரே விதமாக நடந்துகொள்ளவில்லை. ஆயினும் அவற்றின் நோக்கமும் செயல்களின் விளைவும் ஆசியா, ஆபிரிக்கா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய கண்டங்களின் வாழ்க்கை முறைகளுக்கு அழிவையே குறித்தன. இக் கண்டங்களில் இருந்து வந்த வாழ்க்கை முறைகள் மாற்றமின்றித் தொடர்ந்திருக்கக் கூடுமென்பதோ அவையே இன்றைக்கும் உவந்தவை என்பதோ என் எண்ணமல்ல. சமுதாய மாற்றங்கள், சமுதாயங்கட்கு வெளியிலிருந்து, அச்சமுதாயங்களது நலன்களை ஆதாரமாகக் கொள்ளாமற் புகுத்தப்படுவதன் விளைவுகளையே நான் விமர்சிக்கிறேன். பலரும் இதுபற்றி விரிவாகப் பேசுவதும் எழுதுவதும் பயனுள்ளது. இப்போதைக்கு என் கவனத்திற்குரிய விஷயம், குறிப்பாக நமது சமுதாயத்திலும் பொதுவாகத் தென்னாசியாவிலும் நிலைகொண்டுள்ள ஒரு நிறவாதத்தைப் பற்றியது. இது ஒரு ஆதிக்க வல்லரசின் ஆளும் வர்க்கத்தின் நிறவாதமாக இல்லாமல் அதை வசதிப்படுத்தும் முறையில் ஒரு அடக்கப்பட்ட சமுதாயத்தினுள் இயங்கும் நிறம் தொடர்பான சிந்தனையாக உள்ளது. நமது அரசியல் சமூகப், பொருளாதார விடுதலைகட்கு இவ்வாறான அடிமைத்தனமான சிந்தனைகளின் தகர்வும் முக்கியமானது.

நிறம் பற்றி நம்முள் இருக்கும் விருப்பு வெறுப்புகள் பற்றிப் பாசாங்குக்கு இடமில்லை. கருமையான தோல் அழகில்லாததாகவும் மங்கலான நிறமுள்ள தோல் அழகானதெனவுமே நம்முட் பரவலாகக் கருதப்படுகிறது. நல்ல சிவலை, பொதுநிறம், சரியான கறுவல் என்பன போன்ற பதங்கள் அழகின் அளவுகோல்களாகப் பயன்படுவது பற்றி அறிவோம். இதுபோலவே, நம்மவர் எவரேனும் ஒரு வெள்ளை ஐரோப்பிய ஆணையோ பெண்ணையோ மணமுடிப்பவரை ஏற்பது ஒரு கறுப்பு ஆபிரிக்க வம்சாவழியினரை மணமுடிப்பதை ஏற்பதைவிட இலகுவானதாகவே நமக்கு உள்ளது. கறுப்பு இனத்தவரைத் தாழ்வாகக் கருதும் மனோபாவம் நடுத்தர வர்க்க ஆசியர்களிடையே உள்ளளவுக்கு அதே நிலையில் உள்ள ஐரோப்பிய வெள்ளையரிடம் இல்லை என்று சொல்லும் விதமாக, நிறம் பற்றிய மனத்தடைகள் ஆசியரிடையே உண்டு. இதற்கான பல வரலாற்றுக் காரணங்களும் சமுதாயக் காரணங்களும் இருக்கலாம். ஆயினும், அடிப்படையான ஒரு காரணம், கடந்த சில நூற்றாண்டுகளாக நமது சமுதாய வாழ்க்கை ஐரோப்பிய ஆதிக்கத்தின் கீழ்ப்பட்டு இருந்தமை எனலாம். நிற அடிப்படையிலான மேம்பாடு பற்றிய கொலனி ஆதிக்கவாதிகளது கருத்தைவிட அதை உள்வாங்கிக் கொண்ட நமது சிந்தனைகள் ஆபத்தானவை. இது பல்வேறு மட்டங்களிற் செயற்படுகிறது.

நமது ஆற்றல் பற்றித் தனிப்பட்ட முறையில் நாம் ஒவ்வொருவரும் பெருமை பேசினாலும், ஈற்றில் ஐரோப்பியரது அங்கீகாரமே நமது சாதனை அளவுகோலாக அமைகிறது. ஒரு தமிழர் மேனாட்டு இசை பயின்றால் அது தமிழருக்குப் பெருமை சேர்க்கிற விஷயம். ஒரு ஆங்கிலேயர் கர்நாடக இசை பயின்றாலும் அது தமிழருக்குப் பெருமை சேர்க்கிற விஷயம். ஒரு தமிழர் எழுதிய சிறுகதை ஜேர்மனிய மொழிபெயர்க்கப்படுவது ஒரு சாதனை. தமிழர் ஒருவர் டச்சு மொழியில் எழுதினால் அது சாதனை. கெஞ்சி மன்றாடி ஒரு டச்சுக்காரரிடம் முன்னுரையும் வாங்கிவிட்டால் அது அசுர சாதனை. இந்த மனோபாவம் காரணமாகவே ஒரு தமிழாராய்ச்சி மாநாட்டில் பங்குபற்றும் எந்தத் தமிழறிஞரையும்விட மேற்கிலிருந்து வரும் கற்றுக்குட்டி ஆய்வாளர் எவருமே அந்த மாநாட்டின் சிறப்புப் பிரமுகராகக் கருதிக் கொண்டாடப்படுவது இயலுமாகிறது.




இப்போதெல்லாம் தமிழ்நாட்டில் கஷ்டப்பட்டு சபாக்களில் இடம்பிடித்து நிகழ்ச்சியில் பங்குபற்றுவதைவிட அமெரிக்காவுக்கோ இங்கிலாந்துக்கோ பிரான்ஸ்க்கோ போய்வருவது பெரிய விஷயமாகிவிட்டது. ஏனென்றால், தமிழகத்தில் உள்ள சகல இசை அறிஞர்களையும்விட முக்கியமான கர்நாடக இசைஞானிகள் லண்டன், பிரான்ஸ். நியூயோக் ஆகிய இடங்களில் இருக்கிறார்கள் என்று தமிழகம் ஏற்கப் பழகிவருகிறது. இதனாலேதான் இளையராஜாவின் எல்லாப் பங்களிப்புகளையும்விட லண்டனிலே வந்து தனது ஒத்திசை (ஸிம்பனி) நிகழ்ச்சியை நடத்தியது முக்கியமான விஷயமாகி விடுகிறது. மஹாராஜபுரம் சந்தானம் லண்டனிலும் அமெரிக்காவிலும் இசை நிகழ்ச்சிகளை நடத்திய விஷயம் அவரது மரணத்தின் பின்பு எழுதப்பட்ட கட்டுரைகளில் முக்கிய இடம் பெற்றது. இங்கெல்லாம் பணமும் ஐரோப்பிய மோகமும் தமது செல்வாக்கைக் காட்டுகின்றன. (இந்த ஐரோப்பிய மோகம் என்கிற நாணயத்தின் மறுபக்கமெனும் விதமாக சுய

www.tamilarangam.net

கறுப்பாகத் தோன்ற முடிகிறதோ என்னவோ.) இவற்றை நாம் தற்செயலானவை என்று தட்டிக் கழிக்க இயலாது. ஏனெனில் மதமும் சமுதாயமும் ஒன்றோடொன்று நெருக்கமாகவே இருந்து வந்தவை. மதத்தில் உள்ள ஆணாதிக்கம் போன்று வர்ண ஆதிக்கமும் சமுதாய நடைமுறையைச் சார்ந்ததே.

கருமையைத் தாழ்த்த ஏதுவாகும் இன்னொரு காரணி உடலுழைப்புடன் தொடர்புடையது. உடலுழைப்பில் ஈடுபடுவோர் வெய்யிலில் அதிகநேரம் காயவேண்டியிருப்பதால் உழைப்பை உறுஞ்சுவோரைவிடக் கரியவர்களாக இருக்க நேருகிறது. உழைப்போரைத் தாழ்த்தி உழையாதோரை உயர்த்தும் சமுதாயங்களே நம்மிடையே இவ்வளவு காலமும் இருந்து வந்துள்ளன. இதன் விளைவாக, ஆசியாவில், மங்கலான நிற மேனி உயர்வான சமுதாய அந்தஸ்துடன் சேர்த்துக் கருதப்பட வசதியாகிவிட்டது. (அமெரிக்காவில் வெள்ளைத் தொழிலாளர்களைச் சிவப்புக் கழுத்தர்கள் என்று கேவலமாகக் குறிப்பிடும் வழக்கம் அண்மைவரை இருந்தது. வெள்ளைத் தோல் வெய்யில் பட்டுச் சிவந்துவிடுவதையே அது குறித்தது.)

இன்று ஐரோப்பாவில் மேனியைக் கொஞ்சம் பொன்னிறமாகவோ மணல் நிறமாகவோ கருக்கிக் கொள்ளும் மோகம் உள்ளது. இந்நிற மாற்றம், வெய்யிலில் ஓய்வைக் கழிக்கும் வசதியைக் குறிக்கிறதால் சமுதாய உயர்வைக் காட்டுகிறது. ஆயினும், இதை நிறபேதத்தை ஒழிக்கும் திசையிலான நகர்வாக நாம் கொள்ள இயலாது.

நிறவாதம் ஒரு முக்கியமான பிரச்சனையாகவே இன்று இருக்கிறது. இதை எவ்வாறு எதிர்கொள்வது என்பது பற்றி நாம் மேலும் சிந்திக்க வேண்டும். ஐரோப்பிய வெள்ளை நிறவாதம் மட்டுமன்றி நாம் உள்வாங்கிக் கொண்டுள்ள நிறவாதக் கூறுகளையும் அவற்றையொட்டிய தாழ்வு மனப்பான்மையையும் நாம் மேலும் விவாதத்திற்கு உட்படுத்த வேண்டும். கறுப்பு இன மக்களின் விடுதலை எழுச்சிகளின்போதும் உரிமைப் போராட்டங்களின் போதும் உருவான சிந்தனைப் போக்குகள் சில நம் கவனத்துக்குரியன. கறுப்பு அழகானது என்ற சுலோகம், கறுப்பு அதிகார இயக்கம் போன்றவை 60களில் கறுப்பின மக்களது சுய அடையாளத்திற்குத் தன்னம்பிக்கை சேர்த்தன. தம்மளவிலேயே இவற்றால் கறுப்பு அமெரிக்கர்களது உரிமைகளை வென்றெடுக்க முடியாவிடினும், இன்று கறுப்பு இனத்தோர் பெற்றுள்ள உரிமைகளுக்கு இவற்றின் பங்கு புறக்கணிக்க இயலாதது.

தமிழ்ச் சமுதாயத்தினுள் சுயமரியாதை இயக்கம், தனித்தமிழ் இயக்கம் போன்றவை எல்லாம் வர்ணாசிரமத்தால் தமிழரது சுய அடையாளத்திற்கு ஏற்பட்ட பாதிப்புடன் தொடர்புடையவைதான். ஆயினும் இந்த இயக்கங்கள் ஆரிய எதிர்ப்பு என்ற பார்வையுடன் வடமொழியையும் பார்ப்பனரையும் தாக்கிய அதேவேளை, ஆங்கில ஆதிக்கம் பற்றிப் போதிய கவனஞ் செலுத்தத் தவறிவிட்டன. ஆங்கில மோகம் இன்று வசதி படைத்த தமிழரைப் பீடித்துள்ள ஒரு நோய். இதற்கும் நமது நிறச்சார்பான சிந்தனைக்கும் ஒரு உறவு இருக்கிறது. எனவே நமது சமுதாய விடுதலைக்கான சிந்தனைகள் ஆங்கில மொழியாதிக்கம் பற்றியுங் கவனஞ் செலுத்த வேண்டியுள்ளது. கலைஇலக்கியம், விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொருளாதார விருத்தி, சமுதாய விருத்தி என்பன தொடர்பான விழுமியங்களை நாம் சமத்துவத்தின் அடிப்படையில் நமது சூழலின் யதார்த்தத்திற்கிணங்கச் சுயமாக மீள வகுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஒடுக்குதலுக்குட்பட்ட பிற சமுதாயங்களின் விடுதலைப் போராட்டங்களினின்று நிறையக் கற்க வேண்டியுள்ளது. நமது சுய அடையாளத்தை ஒடுக்கப்பட்ட உலக மக்களது சுய அடையாளங்களுடன் சமாந்தரமாகவும் சமமாகவும் கருதுவது உலகளவில் மனித விடுதலைக்கும் ஒடுக்கப்படும் ஒவ்வொரு சமூகத்தினதும் விடுதலைக்கும் பயனுள்ளது. இது, நிற அடிப்படையிலோ இன அடிப்படையிலோ பகைமையான உணர்வுகளைத் தூண்டும் முறையிலல்லாது, சமத்துவத்தையும் சுயமரியாதையையும் வலியுறுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்படக்கூடும்.

இந்தியாவில் வலிமை பெற்றுவரும் தலித் இயக்கங்கள், பெண்ணுரிமைச் சிந்தனைகள், சுற்றாடல் பற்றிய அக்கறை போன்றன சோஷலிசம் வலியுறுத்தும் சமத்துவத்துக்கு மிக உடன்பாடானவை. இவற்றின் வளர்ச்சி நம்முட் பொதிந்துள்ள நிறவாதத்தை உடைப்பதற்கு உதவும் என எதிர்பார்க்கலாம்.

> நிறவாதம் ஒரு முக்கியமான பிரச்சனையாகவே இன்று இருக்கிறது. இதை எவ்வாறு எதிர்கொள்வது என்பது பற்றி நாம் மேலும் சிந்திக்க வேண்டும். ஐரோப்பிய வெள்ளை நிறவாதம் மட்டுமன்றி நாம் உள்வாங்கிக் கொண்டுள்ள நிறவாதக் கூறுகளையும் அவற்றையொட்டிய தாழ்வு மனப்பான்மையையும் நாம் மேலும் விவாதத்திற்கு உட்படுத்த வேண்டும்.

அதேவேளை, ஒடுக்கப்பட்ட மக்களைத் தனிமைப் படுத்திக் கூறுபோடும் குறுகிய பார்வைகள் பற்றியும் நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.

என்றுமில்லாதளவுக்கு இன்று மனித சமுதாயத்தின் நிலைப்பு மனித சமத்துவத்தின் மீது தங்கியுள்ளது. சமத்துவம் என்பது வேறுபாடுகளே இல்லாதவாறு மனித இனத்தை ஒரு சீரான வண்ணக் கலவையாக்கும் செயலல்ல. மனித சமுதாய வாழ்வின் பல வேறு சாத்தியப்பாடுகளைச் சமத்துவமாகப் பேணுவதற்குப் பிறப்பின் அடிப்படையிலான ஏற்றத் தாழ்வுகள் களையப்பட வேண்டும். இன்று மனிதரை அடக்கி அழிக்கும் கருவியாக நிறவாதம் உள்ளது என உணரும் நாம் அதன் கூறுகளை நம்முள்ளிருந்தே களையவேண்டியுள்ளது. சாதியம், ஆணாதிக்கம் போன்றவை பற்றியும் நம்மை நாம் மிகவும் கடுமையாக விமர்சிக்க வேண்டியுள்ளது. இல்லாதளவில் ஐரோப்பிய நிறவாதம் பற்றிய நமது கூக்குரல் அர்த்தமற்றது.

www.tamilarangam.net



கீலம் கீலமாய்க் கிழிந்த யோனியோடும்
வெறிநாய்களின் கோரப்பற்கள்
பதிந்த முலைகளோடும்
கொடுப்புக்குள்ளிருந்து குருதி வழிய
ஒரு துண்டுத் துணியின்றிப் பிறந்த மேனியாய்
மூச்சிரைக்க,
இளைக்க
இழுபட்டு, முட்டி மோதி
திசைகளெல்லாம் அதிர ஓலமிட்டபடி
ஓடி வருகிறாள் ஓர் அழகிய இளம்பெண்.

வெட்டப்பட்ட அங்கங்கள் தொங்குகின்றன
ஓராயிரம் நகங்கிழித்த தழும்புகள் உடலெங்கும்
உதட்டுத் தசை வெடித்து வழிகிறது வீணீர்
இரண்டு பொலிஸ் ஓநாய்கள்
விடிய விடிய அங்கங்களைச்
கடித்துக் குதறி
உருக்குலைத்துப் போட்டுவிட்டன.

அவள் சோனகப் பூ
இந்த இனத்திற்கே கடவுள் ஈந்துபோட்ட
வெள்ளைத்தோல்
முக்காட்டு நிலா
ஒவ்வொரு ஈழப்போரிலும்
கட்டாயமாகக் கசக்கப்பட்டே வந்திருக்கும்
அப் புழுதிபடர்ந்த ஏழை ஊரின்
ஏறாவூரின் மகள்
இந்த நூற்றாண்டின் அவலம்.

**காத்தான்குடி றபாய்டீன்**

*அடையாளத்தை வலியுறுத்துகிறோம் என்ற பேரில் நடக்கும் புலம்பெயர்ந்த பம்மாத்துகள் அமைகின்றன.)*

*மேற்குறிப்பிட்ட விதமான உதாரணங்களுக்கு அளவில்லை. எனவே இன்னும் எழுத அவசியமில்லை என நினைக்கிறேன். மறுபுறம், நம்முள் இருக்கிற நிறம் பற்றிய உணர்வின் இன்னுமொரு முக்கிய அம்சம் இந்தியத் துணைக்கண்டத்தின் வர்ணாசிரம மரபு தொடர்பானது. இந்தியச் சாதிமுறை வர்ண அடிப்படையிலானது. பிராமணர் வெண்ணிறமானவர்களாகவும் க்ஷத்திரியர் சிவந்த நிறத்தவர்களாகவும் வைசியர் பழுப்பு நிறத்தவர்களாகவும் சூத்திரர் கரிய நிறத்தவர்களாகவும் அடையாளங் காணப்பட்டுள்ளனர். இது இந்தியாவின் சாதிமுறை இந்தியப் பூர்வகுடிகள் மீது இந்தியாவுக்குள் வந்த வெள்ளை இனத்தவரது ஆதிக்கத்தின் விளைவான ஒரு சமுதாயத் தோற்றத்தையொட்டியதாக இருக்கலாம். இன்று இந்தியாவில் வேறுபடுமளவுக்கு இனக் கலப்பு ஏற்பட்டுள்ளது. அயலார் வருகையும் இந்தியச் சமுதாயத்தின் நிறத்தின் தன்மையை மாற்றியுள்ளது. ஆயினும் வெண்மையான தோல் கருமையானதைவிட மேம்பட்டது என்ற எண்ணம் தனது சுவட்டை ஆழப் பதித்துள்ளது. இதன் விளைவாகவே விஷ்ணுவும் விஷ்ணுவின் பிரதானமான இரண்டு அவதாரங்களான ராமரும் கிருஷ்ணரும் கறுப்பு நிறத்தவர் என்ற விஷயத்தைத் திரித்து அவர்களது நிறம் (வடமொழியில் நீலம் என்பது கறுப்பையும் குறிக்கிறது என்னும் வசதியால்) நீலம் என்றும் அதையே பின்பு பச்சை என்றும் மாற்றிவிட்டார்கள். விஷ்ணுவின் சகோதரியாகக் கூறப்படும் பார்வதியின் கருமையும் இவ்வாறே மாற்றப்பட்டுள்ளது. கருவேள் எனத் தமிழர் குறிப்பிட்ட மன்மதன் கண்ணுக்குத் தெரியாமலே இருக்கவேண்டி வந்துவிட்டது. (காளி மட்டும் பயங்கரி என்ற காரணத்தினாலோ என்னவோ இடையிடையே*

www.tamilarangam.net



**-வ.ந.கிரிதரன் -**

இரண்டு நாட்களாக இலேசாகயிருந்த வலி இன்று அதிகமாகி விட்டிருந்தது. முருகேசனுக்கு இந்த மூட்டுவலி ஒன்றும் புதிதானதொன்றல்ல. இலங்கையில் இருந்த சமயத்திலிருந்தே அடிக்கடி வந்து வந்து தொந்தரவு செய்துகொண்டிருந்ததொன்றுதான். உடம்பு பலவீனப்பட்டுப் போகும் சமயம் பாத்து வந்து மூட்டுகளைப் பிடித்துவிடும். முக்கியமாக கால்மூட்டுக்களையும், முழங்கால் மூட்டுகளையும்தான் தாக்குவது வழக்கம். இலேசாகத் தொடங்கி மூட்டுக்கள் கொதிக்கத் தொடங்கிவிடும். நடக்க முடியாது. காரணமில்லாத எரிச்சலும், வலியும் அதிகமாகி மூட்டுக்களைட் பிளந்து விடலாமாவென்றிருக்கும். ஆரம்பத்தில் கீல்வாதமென்று தான் சந்தேகப்பட்டார்கள். பலவித இரத்தப் பரிசோதனைகளுக்குப் பிறகு அவனிற்கிருப்பது கீல்வாதமல்ல ஒருவிதமான மூட்டுவலிதான் என்பது நிருபணமாகியது. இதற்காக எந்தநேரமும் அவன் கைவசம் விட்டமின் பி குளிசைகளையும், டெட்ராசைக்கிளின் கப்சூல்களையும் வைத்திருப்பது வழக்கம். கனடா வந்த புதிதில் ஆரம்பத்தில் ஒருமுறை வந்த பொழுது அவனது குடும்ப வைத்தியரான டாக்டர் பொங் அக்யூபங்சர் முறையிலான ஒரு முறையைக் கடைப்பிடிக்கும் படி அறிவுரை கூறியிருந்தார். பொதுவாக மூட்டு வலிக்கத் தொடங்குவதற்கு முன்னர் அப்பகுதியைச் சுற்றி ஒருவித உளைவு தொடங்கிவிடும். மூட்டுவலி வருவதற்கான முன்னெச்சரிக்கை அத்தகைய சமயங்களில் எல்லாம், எந்தக்கால்மூட்டு வலிக்கத் தொடங்குகிறதோ அந்தப் பக்கத்துக் கையின் கட்டை விரலுக்கும் அடுத்த விரலுக்கும் இடைப்பட்ட பகுதியை அழுத்தி அழுத்தி விட்டுவர வேண்டுமென்பது டாக்டர் பொங்கின் ஆலோசனை. அதற்குட் பிறகு முருகேசன் டாக்டரின் ஆலோசனையே பின்பற்றி வந்தான். ஐந்து வருடங்களாக வலி தலைகாட்டவேயில்லை. டாக்டர் பொங் உண்மையிலேயே கெட்டிக்காரன்தான். சைனாக்காரங்கள் கட்டையன்கள் என்றாலும் சரியான விண்ணன்கள் தான். ஐந்து வருடங்களாக தலைகாட்டாதிருந்த வலி மீண்டும் கடந்த இரண்டுநாட்களாக தலைகாட்டத் தொடங்கிவிட்டிருந்தது. இதற்கு முருகேசன்தான் காரணம். வழக்கமாக மூட்டு உளையத் தொடங்கியதுமே பின்பற்றவேண்டிய டாட்டரின் ஆலோசனையை பின்பற்ற அவன் தவறிவிட்டான். கடந்த இரண்டு கிழமைகளாக சரியான ஓவர்டைம்.

www.tamilarangam.net

ஒழுங்காக நேரத்திற்கு சாப்பாடில்லை. உடம்பு நன்கு பலவீனப்பட்டுப்போய் விட்டிருந்தது. வலியை வரவிடக்கூடாது. வந்துவிட்டாலோ குறைந்தது இரண்டுநாட்களாவது அடம்பிடித்து இருந்துவிட்டுத்தான் செல்லும். அஸ்பிரினை நான்கு மணித்தியாலத்திற்கு ஒருமுறை இரண்டிரண்டாகப் போட்டுவர வேண்டும். சாதாரண அஸ்பிரின் அல்ல, எக்ஸ்ட்ரா ஸ்ரென்த் அஸ்பிரின். அஸ்பிரினைப் பாவிக்க ஆலோசனை கூறியதும் டாக்டர் பொங்தான்.

சோபாவில் படுத்திருந்தபடி டி.வி யைப் பார்த்துக்கொண்டிருந்தான். கடந்த நான்கு மணித்தியாலங்களாக வலி அதிகமாகி நடக்கமுடியாத நிலைமைக்குத் தள்ளப்பட்டிருந்தான். அஸ்பிரினை ஒழுங்காக எடுத்துவந்தால் இரவு வலி குறைந்துவிடும். இதுமட்டும் பொறுமையாகயிருக்க வேண்டும். இத்தகைய சமயங்களில் அவனுக்கு ஊரிலிருக்கும் அம்மாவின் ஞாபகம் வந்துவிடும். அவனை அப்படி இப்படி அசையவிடமாட்டாள். வெந்நீரால் மூட்டுக்களுக்கு ஒத்தடம் கொடுத்து விடுவாள். அவளுக்கு எப்பொழுதுமே அவனென்றால் செல்லம்தான். இத்தகைய சமயங்களில் அத்தகைய ஆறுதலும் வேண்டித்தான் இருக்கிறது. அதையெல்லாம் இங்கு எதிர்பார்க்க முடியாது. அவன் தனித்து இந்த பச்சிலர் அப்பார்ட்மெண்டில் வாழ்கிறான். காங்கிரீட் காட்டினுள் ஒரு பொந்து வாழ்க்கை. ஒவ்வொரு பொந்திலும் ஒவ்வொரு தனிப்பட்ட வாழ்க்கை. அவனிற்கு எதிர்ப்புறமாகவுள்ள பொந்தில் ஆங்கிலக் குடும்பம், இடப்புறம் ஒரு சீனக்குடும்பம். வலப்புறமாக.... ஒரு யமேக்கன். "இந்த யமேய்கன் கறுவல்களையெல்லாம் அடித்துக் கலைக்கவேண்டும். குடியும், பெட்டையும் மருந்தும் இருந்தால் இதுகளிற்குக் காணும். ஒழுங்காக உழைத்துப் படித்து வாழ இதுகளாலை முடியாது. களவெடுக்கிறதும் சுட்டுத்திரியிறதும்.... சீ...." இது முருகேசனின் கறுப்பினத்தவர்களைப் பற்றி குறிப்பாக யமேய்க்கன் நாட்டுக் கறுப்பின மக்களைப்பற்றி எண்ணப் போக்கு. இவ்விதம் முத்திரை குத்தும் பழக்கம் அவனது தொட்டிற்பழக்கம், சுடுகாடுவரை போகாமல் விடாது. தொப்பி பிரட்டிகள், மோட்டுச் சிங்களவன் என்ற கருதுகோள்களின் பரிணாம வளர்ச்சி.

நேரம் சென்றுகொண்டிருந்தது. எத்தனை நேரம்தான் டி.வியைப் பாத்துக்கொண்டிருப்பது. அலுத்துவிட்டது. டி.வி சத்தமே எரிச்சலையும் தலையிடியையும் தரத்தொடங்கியது. டி.வியை நிற்பாட்டினான். நோய்வருமட்டும் நோயற்றவாழ்வின் அருமை தெரிவதில்லை. இத்தகைய சமயங்களில்தான் தெரிந்துவிடுகிறது. இனி ஒழுங்காக உடம்பைக் கவனித்துக் கொள்ளவேண்டும். சாப்பாட்டைச் சரியாக நேரத்திற்கு எடுக்க வேண்டும். இந்தச் சமயம்பார்த்து பயர் அலாம் அடிக்கத்தொடங்கியது. இந்த அலாம் அடிப்பதே இங்கு ஒரு முக்கியமான பிரச்சனை. எல்லாமிந்த கறுவல்களின்ற சேட்டைதான். விளையாட்டுக்கு அடித்துவிட்டு, பயர்பிரிகாட் ஓடித்திரிவதைப் பார்ப்பதில் இவங்களிற்கொரு திரில். இவ்விதமாக முருகேசன் எண்ணினான். வழக்கமாக அலாம் அடித்துவிட்டு சிறிதுநேரத்திலே ஓய்ந்து விடும். ஆனால் இம்முறை ஓய்வதாகத் தெரியவில்லை. விடாமல் அடித்துக்கொண்டே இருந்தது. வெளியில் மனிதர்கள் ஓடித்திரியும் நடமாட்டம் அதிகரித்தது. ஏதோ ஒரு புளோரில் இருந்து பெண்கள் சிலரின் கூக்குரல் கேட்டது. முருகேசன் சிறிது கலவரமடைந்தான். வெளியில் பயர்பிரிகாட்டின் சைரன் பலமாக ஒலிக்கத் தொடங்கியது. ஏதொ உண்மையாகவே நடந்திருக்க வேண்டும்போல்முதன் முறையாக முருகேசன் உணர்ந்தான். இன்னும் அலாம் விடாமல் அடித்துக்கொண்டே இருந்தது.

முருகேசன் எழும்புவதற்கு முயன்றான். மூட்டு பலமாக வலித்தது. அசைய முடியவில்லை. இலேசான மணமொன்று மூக்கைத் துளைத்தது. எங்கோ, ஏதோ எரியும் வாசனை. முருகேசனின் கலவரம் அதிகரிக்கத் தொடங்கியது. இந்த இக்கட்டிலிருந்து எப்படித் தப்புவது? ""கடவுளே! எப்படியாவது என்னைக் காப்பாற்றிவிடு."" பொதுவாக முருகேசனுக்கு கடவுள் நம்பிக்கை அதிகமில்லை: ஆனால் இத்தகைய சமயங்களில் தான் கடவுள் நம்பிக்கை அதிகமாகி விடுகின்றது. எரியும் வாசனையைத் தொடர்ந்து பல்கனிப் பக்கமாக இலேசான புகை பரவிக் கொண்டிருந்தது தெரிந்தது. வெளியில் ஓடிக்கொண்டிருந்த மனிதநடமாட்டம் குறைந்து மெல்ல மெல்ல ஓய்ந்துபோய் விட்டது. எல்லோரும் ஓடிப்போய் விட்டார்கள். முருகேசன் தனித்துப்போய் விட்டான். இப்படியே முடிந்துவிட வேண்டியதா? எப்படி தானிருப்பதை வெளியில் தெரியப்படுத்துவது. முருகேசனுக்கு ஒருவழியும் தென்படவில்லை. ஊர் நினைவு உடனடியாக எழுந்தது. ஆவலும் எதிர்பார்ப்புமாக அம்மா, அக்கா, தங்கச்சிமார், தம்பி.... "ஒரு லைப் இன்சூரன்ஸ் கூட எடுத்துவைத்திருக்கவில்லையே. எடுத்திருந்தாலாவது கொஞ்சக் காசாவது அவர்களுக்குக் கிடைக்கும்" ' முருகேசன் முடிவைநோக்கித் தன்னைத் தயார்ப்படுத்துவதில் ஈடுபட்டான். "வருவது வரட்டும். எதிர்கொள்ள வேண்டியதுதான்." புகையின் காரம் அதிகரிக்கத் தொடங்கியது. கண்கள் எரியத் தொடங்கின. தொண்டை செருமத் தொடங்கியது. இறுதிமுறையாக எழும்புவதற்கு முடிவசெய்தான். முடியவில்லை. முயற்சியைக் கைவிட்டவனாக சோபாவில் ஆயாசத்துடன் சாய்ந்தான்.

இந்தச் சமயம் பார்த்து கதவு பலமாகத் தட்டப்பட்டது. அதனைத் தொடர்ந்து பலமான குரல். "எனிபொடி இன்?"
அந்தக் குரல் அவனுக்கு நன்கு விளங்கியது. பக்கத்து வீட்டு யமேக்கனின் குரல். பலமுறை அந்தக் குரலை இவன் கேட்டிருக்கிறான். முருகேசனுக்கு தென்பு மீண்டும் அதிகரித்தது. கடவுள்தான் யமேக்கனின் உருவில் வந்ததாகப் பட்டது. பதிலிற்குப் பலமாக இவன்

www.tamilarangam.net

கத்தினான்:

""ஐ ஆம் கியர்: ஐ ஆம் கியர்.
ஐ கனட் வோக் மான் காவிங்
ஜாயின்ட் ப்ராப்ளம்.""

யமேக்கனுக்கு இவனது உச்சரிப்பு சரியாக விளங்கவில்லை. பலமாக மீண்டும் கதவைத் தட்டினான்.

""ஓப்பின் யுவர் டோர் மான்:
குயீக் குயீக் பில்டிங் இஸ் இன் பிளேம்ஸ்.""

முருகேசன் மீண்டும் பலமாகக் கத்தினான்.

"பிரேக் த டோர்: பிரேக் த டோர்.""

யமேக்கனுக்கு இவன் ஏதோ இக்கட்டில் இருப்பது விளங்கியது. பலமாக கதவை மோதினான். அவனுடைய உருக்கு உடம்பு வலிமைக்கு முன்னால் கதவு ஈடுகொடுக்க முடியவில்லை. உள்ளே உடைத்து வந்தவனைப் பார்த்து

"ஐ காண்ட் வோக் மான்" என்றபடி தன் மூட்டைக் காட்டினான் முருகேசன். வெளியில் புகையின் செறிவு அதிகரிக்கத் தொடங்கியது. உள் நடைபாதையிலும் புகை பரவத் தொடங்கியது. யமேக்கன் கொஞ்சமும் தாமதிக்கவில்லை. முருகேசனை அலாக்காகத் தூக்கியவனாக வெளியேறினான்.

"ஏ மான் யு லுக் ஸ்கின்னி, பட் டூ ெவி மன்" என்று அந்தச் சமயத்திலும் ஜோக் அடித்துவிட்டுப் பலமாகச் சிரிக்கவும் அந்த யமேக்கன் தவறவில்லை. முருகேசனுக்கு அதிசயமாகவிருந்தது. அவன் முதல் முதலாக கறுப்பர்களைப் பற்றிய தன் கணிப்பீட்டை மாற்றியது அன்றுதான். அந்த மாற்றம் கூடச் சுயநலத்தால் விளைந்ததொன்றாக இருந்ததையெண்ணி முருகேசன் உண்மையிலேயே வெட்கித்துப்போனான். எந்த ஒரு விசயத்தையுமே சுயநல ரீதியிலல்லாது சரியாக அணுகவேண்டும் என்ற சபதத்தை முருகேசன் எடுத்துக்கொண்டதும் அன்றுதான்.

(யாவும் கற்பனை)

---

• வாசன்



# போரும் வீரமும் நன்றே!

கவிதை பாடும் கவிஞர்களுக்கு வணக்கம்.
புலமை மிக்க புலவர்களுக்கு வணக்கம்.
அஞ்ஞானத்தை அகற்றி மெஞ்ஞானத்தை தரும்
விஞ்ஞானத்தை கற்ற புலவருக்கும் வணக்கம்.

காக்கிச் சட்டை சாடுகிறீர் சாடும்
எழுத்தாணி கொண்டு துரோகிகளை தாக்கீனீர்
தாக்கும்
பலத்த குரல் கொண்டு போர்ப்பரணி பாடினீர் பாடும்.

படுபாவிகள் அங்கே மக்களைக் கொன்று குவிக்க,
பாதுகாப்பாக இங்கே வெள்ளையன் நாட்டிலிருந்து
நாம் போர்க்குரல் கொடுக்க!


வீறுகொண்ட புலவரே வீட்டிலிருந்து புலம்புகிறீர்
வீரமிக்க தமிழரின் நாடு காக்க கிளம்புவீர்
காக்கிச் சட்டை பட்டாளத்தை தாக்கி வென்று வாரும்
தாண்டிக் குளம் தாண்டிச் சென்று தகர்த்தெறிந்து
பாரும்.

நாட்டுப் பற்றை நா கிழிய கத்திப் பாடியது போதும்
காகிதக் கட்டில் கவிதை எழுதி அலுத்துக் கொட்டியது
காணும்.

வீட்டுப்பற்றை உதறிவிட்டு ஊருக்குப் பயணம் ஆகும்
தனித்து நின்று எதிரியை ஒழிக்க பொறிமுறை
அமைத்துத் தாரும்.
உமது சேவை எம் தேசத்திற்குத் தேவை. இதுவே
மக்களின் கோரிக்கையாகும்.

போரும் வீரமும் நன்றே
யாரோதானே சாகினம்
சைவக்கடவுள் கிருபையால்
நானும் நீரும் தப்பினோம்.

கோழியும் சோறும் ஆறுது
இரவுப் போசனம் ஆகுது
ஆனியும், ஆடியும் கறுப்பா,
ஆவணியில் எனக்கு பே(ர்)மணண்ட விசா!



"தாத்தா செத்துட்டாராம்"
அழுதபடி ஓடிவந்த தம்பி
அவசரமாய்ச் சொன்னான்.
சொன்னவன்
விழிகளிரண்டும் கங்கையை
உற்பத்தி செய்துகொண்டிருந்தது.

தேம்பி அழுததின்
அடையாளமாய் கன்னங்கள்
வீக்கம் கொடுத்திருந்தது.

செய்தியை கேட்ட எனக்குள்
ஒரு பிரளயமே வெடித்தது
மாதிரியான உணர்வு....

நுரையீரலில் மட்டும் ஏனோ
காற்றுப் புக மறுத்தது.
கை, கால்கள் மரப்பு விசையால்
கட்டுண்டு போனது...

தாளாத துக்கத்துடன்
தாத்தாவைப் பார்க்கச் சென்றேன்.

நாற்காலியில் அமரவைத்து
மாலைகள் அணிவிக்கப்பட்டு
அலங்கரித்திருந்தார்கள்...
நொடிகள்... நிமிசங்களாயின
நிமிசங்கள்... மணிகளாயின...

"சீக்கிரம்... நாழியாவுது"
கூட்ட மனிதர்கள்
குரல் கொடுத்தார்கள்...

தாத்தாவின் உயிரற்ற உடலை
தண்ணீரில் குளிப்பாட்டி
தாங்கிப் பிடித்தார்கள்....
வரிசையாய் சென்று
எண்ணெய் தொட்டு வைத்து
சீக்கையும் வைக்கச் சொன்னார்கள்....

பல்லக்கை போல் அலங்கரித்திருந்த
பாடை தாத்தாலை சுமந்துசெல்ல
ஆயத்தமாகிவிட்டது....

அந்நேரம் பார்த்து மழை கொட்ட
தாத்தாவின் இழப்பையெண்ணி
வானமும் கண்ணீர் வடிப்பதாய்
எனக்குப் பட்டது.

ஊர்வலம் மயானம் நோக்கி
ஊர்ந்து சென்றது...
சிதைக்குத் தீமூட்ட
சின்னமாமா முன்வந்தார்...

தீயின் நாவுகள் தாத்தாவை
தீண்ட, கனத்த உடல்
எரிந்து சாம்பலானது...

"காரியம் முடிஞ்சுபோச்சு
எல்லாம் வீட்டுக்கு வாங்க.."
குரல்கொடுத்தபடியே
வந்தவர்கள் கரைந்து
போனார்கள்....

என் கால்களும் முன்னேறியது
என் மனசு மட்டும் ஏதோவொன்றை
இழந்துவிட்டதையெண்ணி...
உள்ளுக்குள்,
அழுதுகொண்டேயிருந்தது.

பட்டுக்கோட்டை ஆத்மநாதன்
தமிழ்நாடு

www.tamilarangam.net

இலங்கையில் வெளிவந்த சிறுசஞ்சிகைகள் பற்றிய ஆய்வுகள் இன்றுவரை போதியளவு தமிழில் நடைபெறவில்லை என்று துணிந்து கூறலாம் இதனால் நவீன தமிழியல் ஆய்வு வளர்ச்சிலும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. ஏனெனில் சிறுசஞ்சிகைகள் பற்றிய ஆய்வுகள் இல்லாதபோது நவீன இலக்கியம் பற்றிய ஆய்வுகளும் முழுமையடையா. மேலும் இலங்கை சிறுசஞ்சிகை பற்றிய ஆய்வுகள் நிகழும்போது தமிழகம் உள்ளிட்ட பொதுவான தமிழ் சஞ்சிகை வரலாற்றுக்கு இலங்கை காத்திரமான பங்களிப்பினை வழங்கியுள்ளமையும் வெளிவர வாய்ப்புள்ளது. இவ்விதத்தில் பாரதி என்றொரு சஞ்சிகை பற்றி அறிந்துகொள்வது அவசியமாகும்

பாரதி 1946 இல் கொழும்பிலிருந்து வெளிவந்த முற்போக்கு சஞ்சிகை ஆகும். இன்னும் குறிப்பாகக் கூறுவதானால் 1946ம் ஆண்டு தைமாதம் தொடக்கம் சித்திரை மாதம் வரை நான்கு இதழ்கள் வெளிவந்துள்ளன. கொழும்பு கொட்டா ரோட்டில் இருந்த பாரதி பிரசுராலயம் அவற்றை வெளியிட்டுள்ளது. கே.ராமநாதன், கேகணேஸ் ஆகியோர் அதன் கூட்டாசிரியர் ஆவர். பாராதி சஞ்சிகையின் இலட்சியம் யாது? அது தன் முதல் இதழில் இவ்வாறு குறிப்பிடுகின்றது.


பாரதி அணுசக்தி யுகத்தின் சிருஸ்டி. விஞ்ஞான முடிவுகளில் புரட்சி ஏற்படுத்திய அணுசக்தி போல, தமிழ் மொழிக்கு புதுமை போக்களித்த மகாகவி பாரதியாரின் பெயர்தாங்கி வருகின்றது. அவர் தமிழுக்குப் புதுவழி காட்டியது போலவே "பாரதி"யும் "கண்டதும் காதல்" கதைகள் மலிந்த இன்றைய தமிழிலக்கிய போக்கிற்கும் புதுவழி காட்டும்

தமிழ் தமிழுக்காகவே என்று தம் கூட்டத்துக்குள்ளேயே மொழியைச் சிறைப்படுத்திக் கொண்ட பண்டிதர்களின் இரும்பு பிடியினின்று அதனை மீட்டு மக்கள் சொத்தாக்கினார் பாரதியார். இன்று "பாரதி பரம்பரையில் வந்தோமென்று தம்பட்டம் அடிக்கும் எழுத்தாளர் கோஸ்டி "கலைகலைக்காகவே" என்று அப்பண்டிதர் பல்லவியையே வேறு ராகத்தில் பாடுகின்றது. தமிழை சிறைமீட்ட பாரதியார் செய்த சேவையே "பாரதி"யின் லட்சியமும்

ஏகாதிபத்தியத்தை அழிக்கக் கவிபாடிய பாரதியார், "முப்பது கோடி ஜனங்களின் சங்க முழுமைக்குப் பொதுவுடைமையான ஒப்பில்லாத சமுதாயத்தை ஆக்கவும் கவி பாடினார்.

அவர் காட்டும் அந்த பாதையில் "பாரதி" யாத்திரை தொடங்குகின்றது. சுருங்கக் கூறின் பாரதியின் இலட்சியமும் சமூகநோக்குடைய முற்போக்கான படைப்புகளை தருவதே எனலாம்

பாரதியில் வெளிவந்த ஆக்கங்களை வசதி கருதி கவிதை, சிறுகதை, கட்டுரை, புத்தக விமர்சனம் என வகுத்து நோக்குவது பொருத்தமானது.



**செ.யோகராஜா**
கிழக்குப் பல்கலைக்கழகம்

# இலங்கை சிறுசஞ்சிகை வரலாற்றில் பாரதி

www.tamilarangam.net

பாரதி நான்கு இதழ்களிலும் மொத்தமாக பதினான்கு கவிதைகள் வெளியாகியுள்ளன. எழுதியோர் கலாநேசன், யோகி சுத்தானந்த பாரதியார் க.இ.சரவணமுத்து, சோ.நடராஜன், ஜிட்டு, ஆகியோர் ஆவர். இவர்களுள் மூவர் படைப்புக்கள் விதந்துரைக்கப்பட வேண்டியவை. இவற்றுள் கவீந்திரன் இயற்றிய தேயிலை தோட்டத்திலே முதலில் குறிப்பிடத்தக்கது.

காலையிலே சங்கெழுந்து பம்மும்! ""நேரம்
கணக்காச்சு! எழுந்துவா! தூக்கம் போதும்.
வேலை செயவேண்டு" மெனச் சொல்லும.்து!
வேல் விழியாள் உடன் விழித்தாள்! துடித்தெழுந்தாள்!
பாலையுண வேண்டுமெனப் பாலகன் தான்
பதறுமன்றோ! என நினைத்தாள் பாய்மேற் பாலன்
காலைமெல வருடினாள் கமலப் பூபோல்
கண்விழித்துக் காலையுதைத் தெழுந்தான் பாலன்.

என ஆரம்பிக்கும் அக் கவிதையின் முக்கித்துவம் இரண்டு. தொழிலாளி பற்றி இலங்கையில் முன்பு பாடப்பட்டிருப்பினும் முற்போக்கு கட்சி சார்ந்த ஒருவர் முதன்முதலாக பாடினார் என்பது ஒன்று. மலைநாட்டுத் தொழிலாளர் பெண்ணொருத்தி பாடப்பட்டுள்ளாள் என்பது மற்றொன்று. அந கந்தசாமியே இந்த கவீந்திரன் என்பதனை நீங்கள் சிலர் அறிந்திருக்கலாம். பண்டிதர் என்பவர் மகாகவி என்று நினைக்கின்றேன். எழுதிய "மாரி" என்பதும் குறிப்பிடத்தக்க இன்னொரு கவிதை. இலங்கையில் நவீன கவிதைக்குரிய தனித்துவப் பண்பான பேச்சோசை தன்மை என்பது தோற்றம் பெறுவதனை வெளிப்படுத்தி நிற்கிறது அப்படைப்பு. இன்று மொழிபெயர்ப்பு கவிஞராக பலராலும் அறியப்பட்டுள்ள கே.கணேசின் ஆரம்பகால சுயகவிதைகளில் ஒன்றான "எங்கள் நாடு" என்பதும் கவனிக்கப்பட வேண்டியதே. அவரது கவிதையை மலையகத் தொழிலாளர் பற்றி கூற தவறவில்லை. அதன் ஒரு பகுதி பின்வருமாறு.

வான்நோக்கி உயர்கின்ற மாமலைகள் யாவும்
மதுவொக்கும் எனப்புகழும் தேயிலைகள் மேவும்
கான் ஒழித்துச் சோலைநிகராக இதைச் செய்தோர்
கடல் கடந்த தொழிலாளர் வியர்வை நீர் பெய்தோர்.

மலையாள நாட்டில் கையூர் கிராமத்தில் அவ்வேளை தூக்கிலிடப்பட்ட தொழிலாளர் நால்வர் நினைவு பற்றி கே.கணேஸ் எழுதிய கவிதையும் குறிப்பிடத்தக்கது.

இவ்விடத்தில் மொழிபெயர்ப்பு கவிதை ஒன்றுபற்றி குறிப்பிடாமல் இருக்க இயலாது. ""ரணபூமியில் இளந்தியாகிகள்" என்ற தலைப்பில் வங்க மாணவர் ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொண்டு உயிர் நீத்த சிறுவர்கள் பற்றி கௌதம சட்டோ பாயத்தி யாயா இயற்றிய மொழிபெயர்ப்பே அது. மொழிபெயர்ப்பிலே கூட தேசபக்தி ஆவேசமும் அசையாத உறுதியும் அணையாத வீரமும் ததும்புகின்றதன்றோ. சுருங்கக் கூறின் இலங்கையில் நவீன தமிழ் கவிதை வளர்ச்சிக்கு பாரதியின் பங்களிப்பும் முக்கியமானதே எனலாம் அதே காலப்பகுதியில் வெளிவந்த மறுமலர்ச்சி உருவ ரீதியில் நவீன கவிதையை வளம்படுத்தியது என்றால் பாரதி உள்ளடக்க ரீதியில் அதனை வளம்படுத்தியது என்று கூறத் தோன்றுகின்றது.

பாரதியில் வெளிவந்த சிறுகதைகள் நான்காகும். அ.ந.கந்தசாமி, அ.செ. முருகானந்தன், சுப்புலட்சுமி ஆகியோர் அவற்றின் சிருஷ்டி கர்த்தாக்கள். அ.செ.முருகானந்தத்தின் ""உழவு யந்திரம்" யாழ்ப்பாண விவசாயி ஒருவரின் அன்றாட வாழ்க்கையைசித்தரிப்பதாகி மண்வாசனை கமழ்வதாகும். அ.ந.கந்தசாமியின் கதைகளில் ஒன்று வழிகாட்டி. குருட்டு பிச்சைக்காரனின் உருக்கமான வாழ்க்கையை அது சித்தரிக்கின்றது. ""உதவி வந்தது" என்ற படைப்பின் களம் கொய்யாங்கோ நகராகும் ஆசிரியரின் நடை தனித்துவமிக்கது. மார்க்சிம் கோர்க்கி, முல்க்ராஜ் ஆணந்த் ஆகிய இரு உன்னதமான எழுத்தாளர்களின் மொழிபெயர்ப்புக் கதைகள் ஒவ்வொன்றும் மகத்தானது.

பாரதி தந்த கட்டுரைகள் மருத்துவம், விஞ்ஞானம், வரலாறு, பயணம், ஈறாக பன்முகப்பட்டவை. இவற்றுள் குறிப்பிடத்தக்கவை கிருபா என்பவர் எழுதிய ஓர் ஆங்கில ஆசிரியர் பற்றிய ""வாழத் துணிந்தவன்" என்ற கட்டுரை வீரன் "பகசிங்" பற்றிய கே.கணேஸ் எழுதிய வாழ்க்கை வரலாறு , "பாட்டாளி பாரிசிலே" என நா.சண்முகதாசன் எழுதிய இன்னொரு பயணக் கட்டுரை. ஆயினும் கவிதை, சிறுகதை, ஆகிய படைப்புக்களுடன் ஒப்பிடும்போது கட்டுரைகள் என்ற ரீதியில் பாரதியின் படைப்பு குறைவே.

பாரதி தனது இலட்சிய வேகத்தில் இளஞ்சிறார்களை மறக்கவில்லை. சிறுவர் கதைகள் சிலவும் பாரதியில் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் ஒரு கதை சிங்கள மொழிபெயர்ப்பு எழுதியவர் குமாரி. ஒருவேளை அன்னார் இன்றைய கலாநிதி குமாரி ஜெயவர்த்தனாவோ தெரியவில்லை. புத்தக மதிப்புரை விமர்சனரீதி என்ற பெயரில் ஓரிதழில் மட்டும் இடம்பெற்றுள்ளது. மூன்று நூல்கள் பற்றிய சுருக்கக் குறிப்புக்களே அ்து. அவற்றுள் ஒன்று யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரத் தொடங்கிய மறுமலர்ச்சி முதழிதழ் பற்றியது. மற்றொன்று இலங்கையில் வாடும் இந்தியர் என்ற தலைப்பில் கவியா சிதம்பரநாத பாவலர் பாடிய பாடல்கள் பற்றியது. விமர்சன குறிப்புகள் கடுகு. ஆனாலும் காரம் மிகுந்தவை. மேற்கூறிய நூல் பற்றிய ஒரு குறிப்பு இதற்கு சான்று. இந்திய தொழிலாளியின் உண்மை விரோதியான ஏகாதிபத்தியத்தை பற்றி கவி விரலசைக்கவில்லை.

பாரதியின் அட்டைப்படங்கள் பற்றி கூற மறந்துவிட்டேன். வயலில் வேலைசெய்யும் உழவர் வீரன்பகசிங், சோவியத் நாட்டிலுள்ள உழைப்பாயர் சிற்பம் என்பன முறையே முதல் மூன்று நூல்களையும் அழகுபடுத்தியுள்ளன. பாரதியின் நான்காது இதழ் அடுத்த இதழில் முல்ராஜ் ஆனந்த் மலையாள கவிஞர் குமாரன் ஆகியோரின் படைப்புக்களும் ஜனநாட்டியசாலை இயக்குனர் நாடகம் பற்றிய விமர்சனமும் தாங்கி வெளிவருகின்றது. ஆனால் அது செயலுருப்படவில்லை. இவ் விளம்பரம் கொண்ட இதழே பாரதியின் இறுதி மூச்சு.

சிறு சஞ்சிகையின் ஆயுள் குறுகியது என்ற விபரம் இது. மீறப்படாத தலைவிதிக்கு பாரதியும் தலைவணங்கிற்று போலும் அது எவ்வாறாயினும் ஆரம்பத்தில் கூறியிருப்பது போன்று

www.tamilarangam.net

பாரதி இலங்கையின் முதல் முற்போக்கு சஞ்சிகை என்பதில் தவறில்லை. இதே வேளையில் தமிழகம் உள்ளிட்ட தமிழில் முதல் முற்போக்கு சஞ்சியையும் தான். ஏனெனில் தமிழகத்தில் முதல் முற்போக்கு சஞ்சிகையான சாந்தி 1954 இல் அல்லவா வெளிவந்திருக்கின்றது.

"மூர்த்தி சிறிது, கீர்த்தி பெரிது என்பது பாரதி சஞ்சிகைக்கும் பொருந்துகிறதல்லவா?

வந்தாறுமூலை,
செங்கலடி

---


# ஆனை

என் தாத்தாவிடம் இருந்த யானை
ரொம்பவும் பெரிசாம் -
எதிரே இருந்த வேப்பமரத்தில்
கட்டியிருப்பாராம் -
அதன் கோரப் பசிக்கு
தென்னை மட்டை வெட்டிப்போட
தெருவழியே ஓட்டிப்போகும்
காட்சியை
ஆப்பக் கிழவி அற்புதமாய்ச்
சொல்வாள் கண்ணில் மின்னலோடு -
சுருண்டு படுத்து புலம்பிக்கொண்டிருந்தவள்
செத்துப்போனாள் ஒரு சனிக்கிழமை -
ஓரமாய் நின்று பயத்தோடு பார்க்க
சிறுசுகளெல்லாம் பெரிசாகி
மடிந்துபோனதும் மறந்துபோனது -
காலச்சுழற்சிகூட
கண்ணுக்குத் தெரியும் அற்புதம்
எனக்கு மட்டும்தான் -
செம்மண்சாலை கறுப்பு பூசி
கலகலப்பானது -
யானை கட்டிய
மரத்தின் இடத்தில்
தாகம் தணிக்க
தண்ணீர்த் தொட்டியொன்று
கம்பீரமாய் -
தெரிந்த முகங்கள் தொலைந்துபோக
தெரியாத முகங்கள் தூரம்போயின
ஓட்டுதல் தவிர்த்து -
யானைக்கார வேலுநாயக்கன்
பேரனென்ற பட்டப்பெயரும்
காற்றில் பறந்தது கேலியாய் -
சொல்லிப் புலம்பவும் யாருமில்லாச்
சோகம்கூட பழக்கமாயிற்று -
திண்ணை ஒரு வசிதி
குந்தி யோசிக்க - அதுவும்
தொலைந்தது அவசரமாய் -
யானையை மருட்டிய
அங்குசம் மட்டும் பத்திரமாய்
கூரும் மழுங்கி துருவும் ஏறி
என்
பூசையறையில் சாமிகளோடு -



நா.விச்வநாதன்

www.tamilarangam.net



வேலணையூர் நவமகன்

# எதிலியாய் எல்லைகளில்

முகில் போர்வை போர்த்தி
நிலவு குளிர் காய்கிறது.
வானம்
வெறுமையாய்,
என் தாயின் நெற்றியைப் போல.

ஏனாம் வெள்ளிகளும்
எனது வரவை
எதிர்த்தா தொலைந்தன.

மூசிக்கூவுகிற காற்றும்
கண்ணுக்கெட்டாத தொலைவுவரை
வாழ்விழந்து கிடக்கிறது
சுவீடன் வயல்வெளியும்.

நானும்,
எனது நம்பிக்கையின் நாற்றான கால்களை
சேற்றில் புதைக்கின்றேன்
எல்லை தாண்டிப் படர....

கடவுச் சீட்டற்ற
எனது கள்ளத்தனத்தை
காற்றும் மழையும், கடுங்குளிரும்
கண்டனம் செய்கிறது.

குந்தியிருக்கவொரு
குடில்கூட இல்லாத
பரப்பின் படுதொலைவில்
முந்தியிருந்த யாழ்ப்பாணம் போல்
பந்திபந்தியாய் பல வெளிச்சங்கள்
கால்களுக்கு உரமேற்றுகிறது.

தனிமைப்படுத்தப்பட்ட ஒரு தேசத்தில்
இன்னும்
தனிமைப்படுத்தப்பட்ட ஒரு அறையில்
வட்டுத்தாவி
வழுக்கிவழுந்த அணில் குஞ்சைப்போல
மூச்சிரைத்து செயல் முடங்கி
கட்டிலுக்குப் பாரமாய் போனதொரு
மனிதக்குஞ்சு நான்.

பாவத்திற்கு அஞ்சி
விரித்த படுக்கையில்
குத்துக்கரணம் அடிக்கிறது
வாலறுந்த பட்டம்போல்
தூக்கத்தை அறுத்துவிட்ட மனசு.

கடவுச்சீட்டு இல்லாமலேயே
கனவுச்சிறகு கட்டி
வேலிக் கிளுவையில்
பொன்வண்டு பிடிக்க
புறப்பட்டுப் போய்விட்டேன்.

மீண்டுமொரு
அதிகாலையில் பிரசவம்
வாழ்க்கை துரத்தவும்
வாழ்நாட்கள் மிரட்டவும்,
முதுகெலும்பு உடைந்த உல்லாசியாய்
ஊரத் தொடங்கினேன்
இன்னொரு எல்லைக்கு....


கிட்டவராதே!
எட்டி நில்லென்று
நோர்வேஜியக் காற்றும்
உதைக்க உதைக்க.....

www.tamilarangam.net

யமுனா ராஜேந்திரன்

# குழந்தைகள் உலகு பற்றிய மூன்று திரைப்படங்கள்

*மீரா நாயரின் சலா பாம் தெருக்குழந்தைகள் பற்றியவை. தமிழில் வந்த அழியாத கோலங்களும் அ சலியும் மத்தியதர வர்க்கக் குழந்தைகள் ப்றறியவை*




தெருக்குழந்தைகள் பற்றி மத்தியதர வர்க்கக் குழந்தைகள் பற்றி அவர்களின் பால்யகாலம் பற்றி நிறையப் படங்கள் வருகின்றன. ஈரானியப் படமான Runners, மீரா நாயரின் சலாம் பாம்பே தெருக்குழந்தைகள் பற்றியவை. தமிழில் வந்த அழியாத கோலங்களும் அஞ்சலியும் மத்தியதர வர்க்கக் குழந்தைகள் ப்றறியவை. ஸ்பீல்பேர்க்கின் E.T. வெள்ளைக் குழந்தைகள் பற்றியது. தொழிலாளி வர்க்கம் சார்ந்த குழந்தைப் படங்களை மாக்சியவாதிகளே எடுத்திருக்கிறார்கள். அவ்வாறான படங்களில் மூன்று படங்களைப் பற்றி மட்டுமே நான் இப்போது பேசக் கருதுகிறேன்.

1. புயலின் மையம் (Storm centre)
2. ஸீலியா (Ceilia)
3. கெஸ் (Kes)

புயலின் மையம், கெஸ் இரண்டு படங்களும் இங்கிலாந்து படங்கள். ஸீலியா படம் ஆஸ்திரேலிய நாட்டைச் சேர்ந்த படம். புயலின் மையம் படத்திலும் ஸீலியாவிலும்

www.tamilarangam.net

கம்யூனிஸ்ட் மனிதர்களும் கம்யூனிஸ்ட் சித்தாந்தம் சார்ந்த பிரச்சனைகளும் நேரடியாகச் சித்தரிக்கப் படுகிறார்கள்/ சித்தரிக்கப் படுகிறது. கெஸ் படம் தொழிலாளி வர்க்க வீட்டுச் சிறுவனின் அங்கீகரிக்கப்படாத தனிமையான வாழ்வு பற்றிச் சொல்கிறது.

முதலில் நான் பேசக் கருதுவது கெஸ் படம் பற்றி. கெஸ் படத்தின் இயக்குனர் கென்லோச். கென்லோச் பற்றிப் பேசுகிறபோது மனசில் சிலிர்ப்பு வந்துவிடுகிறது. சமகாலத்தில் இங்கிலாந்தில் வாழ்கிற மனச்சாட்சியுள்ள இடதுசாரிக் கலைஞன் கென்லோச். எளிமையும் ஆளுமையும் போராட்ட உத்வேகமும் நிறைந்த கலைஞன்.

மிகச் சமீபத்தில் இவர் எடுத்திருக்கும் படம் Land and freedom. ஸ்பானிஸ் உள்நாட்டுப் போரில், பிராங்கோவுக்கு எதிரான போரில் ஈடுபட்ட பிரிட்டிஷ கம்யூனிஸ்ட் ஒருவரின் டைரியை அடிப்படையாகக் கொண்ட கதையாக இது நிகழ்கிறது. தனது தந்தையின் டைரியைத் தேடிப் பார்க்கும் மகனின் நினைவுகள் இக்கதை. ஸ்பானிஸ் பாசிசத்துக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்ட கம்யூனிஸ்ட்டுகளிடமிருந்த குறுங்குழுவாதப் போக்குகளை அம்மனிதர்களின் தியாக வாழ்வுடன் சித்தரிக்கும் படம் இது. கானஸ் திரைப்பட விழாவில் தங்கச் சிங்கம் விருது பெற்ற படம் இது. கென்லோச் உணமையில் இடதுசாரிகளுக்கு ஒரு சிங்கம் (இவர் பற்றி விரிவான கட்டுரையொன்று எழுதத் திட்டமிட்டிருப்பதால் இங்கு விரிவைத் தவிர்க்கிறேன்).

கெஸ் படம் 1969ம் ஆண்டு எடுக்கப்பட்டது. இங்கிலாந்தின் தொழில் நகரமான தெற்கு யார்க்ஸயரில் நிகழ்கிறது. பில்லி எனும் 12 வயதுச் சிறுவன்தான் கதாநாயகன். பேரி ஹின்ஸ் ((Barry hins) எழுதிய A kestrel for a knave என்ற நாவலின் திரைவடிவம் இப்படம். Kestral என்பது ஒரு பருந்துவகை. சின்னப் பருந்து அது. பில்லி அந்தச் சிறு பருந்துக்கு வைத்த செல்லப் பெயர்தான் கெஸ்.

இருட்டில் புரண்டு படுக்கும் ஸப்தம். கடிகாரம் அலாரம் அடிக்கிறது. நீண்டநேரம் அடித்து முடிகிறது. யாரும் எழுந்திருக்கவில்லை. மறுபடி போர்த்துப் படுக்கும் மனிதர்கள். நேரமாகிவிட்டது. நிலக்கரிச் சுரங்கத்துக்கு வேலைக்குப் போகவேண்டும்.

பில்லியின் அப்பா ஒரு நிலக்கரி சுரங்கத் தொழிலாளி. எழுந்து சட்டை போட்டுக்கொண்டு தலைவாரிக் கொள்ளாமல் வேலைக்குப் புறப்படுகிறார். பில்லி எழுந்து பார்த்துவிட்டு மறுபடி போர்த்துப் படுக்கிறான். அவனுக்கு பொழுதுபோனது தெரியவில்லை. அவசரமாகப் போகவேண்டும். விடிகாலை பால்வண்டி வருமுன் அதோடு சேர்ந்து வீடுகளுக்குப் பேப்பர் போடவேண்டும்.

கலைந்த தலை. நைந்த வின்ரர் கோட்டு. விடிந்தும் விடியாத தொழில் நகரத்தின் காலைநேரம் அது. சந்துபொந்துகள் கடந்து நாய்கள் துரத்த பின்னங்கால் பிடறிபட ஓடுகிறான். கடையில் பேப்பர்பை எடுத்துக் கொண்டாகிவிட்டது ஒரு வீடு. பேப்பர் திணித்தாயிற்று. பால்வண்டி நிற்கிறது. பால்காரன் மறுவீட்டில். ரெண்டு பால் போத்தல்கள் பில்லியின் பைக்குள் போகிறது. அடுத்த வீடு. பால்வண்டி நகர்கிறது. நகர்கிற பால்வண்டியின் முன்புறம் ஏறும் பில்லி பால்காரருடன் நட்பாக வணக்கம் சொல்கிறான். பால்காரன் பில்லிக்கு நண்பன். பில்லி இறங்கி வண்டி நகர, பின்னிருந்து மறுபடியொரு பால் போத்தல் அபேஸ். பாலைக் குடித்துவிட்டு பக்கத்து குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டு ஓட்டம்.

பேப்பர் பெரும்பாலும் போட்டாகிவிட்டது. கொஞ்சம் ஓய்வு வேண்டும். புல்திட்டில் உட்கார்ந்து கார்ட்டூன் பார்க்கிறான். வீடு திரும்பி பிற்பாடு பள்ளிக்கூடம் போகவேண்டும்.

அப்பாவுக்கும் அவனுக்கும் எப்போதும் சண்டை. அப்பா தொழிலாளர் Pubக்குப் போய் தினமும் குடிப்பார். அம்மாவுக்கும் அப்பாவுக்கும் எப்போதும் விவாதம். சிலவேளை அம்மா, அப்பா ரெண்டு பேரும் சேர்ந்து பப்புக்குப் போய்க் குடித்துவிட்டு சந்தோஷமாகத் திரும்பிவந்து மறுபடி சண்டை போடுவார்கள். பில்லியைக் கவனிக்க பில்லியின் உலகம் பற்றிக் கவலைப்பட இருவருக்குமே நேரமில்லை. அப்பா அடிக்கடி பில்லியை அடிப்பார்.

பிற மாணவர்களோடு ஒப்பிட பில்லியின் தோற்றத்திலேயே ஏழ்மை தெரியும். சிலவேளை கிழிந்த உள்ளாடைகள், நைந்த படம் முழுக்கப் போட்ட வின்ட்டர் கோட்டு, 12 வயதானாலும் எட்டு வயதுச் சிறுவனின் வளர்ச்சி. ஒல்லியான உடல். (இப்படம் என்னை மிகவும் பாதித்ததற்கான காரணம் எனது பள்ளி நாட்களை இது ஞாபகமூட்டியதுதான். அம்மா பஞ்சாலைத் தொழிலாளி. அப்பா தொழிற்சங்கவாதி. பஞ்சாலை வேலைநிறுத்தம். தீராத வறுமை. மட்டுப்படுத்தப்பட்ட உடைகள். அங்கீகரிக்கப்படாத பிள்ளைப் பருவம்) பில்லிக்கு பள்ளிக்கூடத்தில் படிக்கவோ சந்தோஷப்படவோ ஆய்வு செய்யவோ ஏதுமில்லை.

சிகரெட் பிடித்ததாக சந்தேகிக்கப்பட்டு அரைமணி நேர உபதேசத்துடன் பிரம்படி வாங்குகிறான் பில்லி. உடல் பருத்த பையன் பில்லியை உருட்டி உருட்டி அடிக்கிறான். கால்பந்து ஆசிரியர் தானே கோல் போட்டு தானே சந்தோஷப்படுகிறார். பில்லிதான் கோல்கீப்பர். பில்லியிடம் சரியான யூனிபார்ம் இல்லாததால், பீப்பாய் மாதிரி கால்சட்டை தரப்படுகிறது. பில்லி போர்த்துக்கொண்டு குட்டிக்கரணம் அடிக்கிறான். கோல் போஸ்ட்டில் தலைகீழாக டைவ் அடிக்கிறான். தண்டனையாக வெகுநேரம் சுடுநீரில் குளிக்கவைக்கப்படுகிறான். பள்ளிக்கூட அறையைவிடவும் அவனுக்குத் தெரிந்துகொள்ள ஈடுபட வெளியுலகம்தான் ஈடுபாடாயிருக்கிறது.

கால்போனபடி திரிவதில் அவனுக்குச் சந்தோஷம். பற்றைகளில் மரங்களுக்கிடையில் அலைவதில் சந்தோஷம். ஒருநாள் அப்படி அலைகையில் வானில் அலையும் பருந்தைப் பார்க்கிறான். அதன் லயம், எழுந்து விழுந்து மேலேறும் லயம் அவனைக் கவர்கிறது. அதற்கு அங்கிருக்கும் பழைய கட்டிடம் ஒன்றில் கூடு இருக்கிறது. அதனோடு அவனுக்கு ஆத்மார்த்தமான உறவு வந்துவிடுகிறது. அது என்ன பறவை? அதன் வரலாறு என்ன? அதற்கு என்ன பிடிக்கும்? அதனோடு எப்படிப் பேசுவது?

நூலகத்தில் சென்று கேட்கிறான்.

www.tamilarangam.net

நூலகப் பெண்மணி ஒரு விண்ணப்பம் கொடுத்துத் தந்தையின் கையெழுத்து வேண்டும் என்கிறாள். நானே போடுவேன் என்கிறான் பில்லி. உறுப்பினராக முடியவில்லை. என்ன செய்வது? எல்லோரும் தீவிரமாக புத்தகத்தைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். படித்துக் கொண்டிருக்கிறார்கள். பில்லி kestrel பற்றிப் புத்தகங்களில் தேடிக் கண்டுபிடித்துவிட்டான். சின்னப் புத்தகம்தான். விண்ட்டர் ஜக்கெட்டில் மறைத்துவிடலாம். பிரச்சினையில்லை. புத்தகம்தான் முக்கியம். அதற்கு எதுவும் செய்யலாம். பதுங்கிப் பதுங்கி வெளியே வருகிறான் பில்லி. தீவிரமாகப் படிக்கிறான். கெஸ்ட்ரல் பற்றிய கலைக்களஞ்சிய அறிவு அவனுக்குள் இருக்கிறது. கெஸ்ட்ரல் பற்றிய கலாநிதி அறிவு அவனுக்குள் இருக்கிறது.

ஒரு நள்ளிரவில் கட்டிடத்தில் ஏறி கெஸ்ஸை வீட்டுக்குக் கொண்டுவந்து அதற்கென்றொரு பெரிய மரவீடு அமைக்கிறான். கெஸ்சுக்கு என்னென்ன பிடிக்கும்? எலி மாமிசமும் குருவி மாமிசமும். நன்றாக நசுக்கி விரல்களுக்கிடையில் பிடித்தால் கெஸ் கொத்திக் கொத்தி சாப்பிடும்.


வகுப்பறை ஆசிரியர் அக்கறையாகப் போதித்துக் கொண்டிருக்கிறார். பில்லி வெளியே வானத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறான். நடத்தப்பட்ட பாடத்தில் கேட்கப்பட்ட கேள்விக்கு பில்லி பதில் சொல்ல முடியவில்லை. ஆசிரியர் அவன் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான் எனச் சொல்லச் சொல்கிறார். பில்லியின் விரிவுரை மிகுந்த ஈடுபாட்டுடன் முழு வகுப்பறையும் மாணவர்களும் ஈடுபட நிசப்தமாகத் தொடர்கிறது. ஆசிரியர் ஆச்சரியமுறுகிறார். பில்லி கெஸ்ட்ரல் பற்றிய ஆராய்ச்சியாளன். பில்லியின் அழைப்பின்படி புரிதலுள்ள ஆசிரியர் ஒருநாள் கெஸ்ட்ரல் பார்க்க வருகிறார். பரந்த புல்வெளி. மிகப் பரந்த புல்வெளி நடுவில் கையில் கயிறுடன் பில்லி. நான்கு திசைகளிலும் அலையலையாகக் கயிறு வீசுகிறான். அந்தக் கயிற்றின் லயத்துக்கு ஏற்பக் காற்றில் எகிறிக் கீழே இறங்கி மறுபடி மேலே எகிறி விளையாடுகிறது கெஸ். கெஸ்ஸினதும் பில்லியினதும் உலகம் புரிதலுள்ள சம்பாஷணையுள்ள முரண்கள் இல்லாத அன்பான உலகம். ஆசிரியருக்கு கெஸ்ஸின் பழக்க வழக்கங்கள் விருப்பங்கள் பற்றி பில்லி நீண்ட விளக்கங்கள் தருகிறான். ஆசிரியருக்கு கெஸ்ஸைப் பிடித்தாலும் எலி மாமிசத்தின் மணம் பிடிக்காது போகிறது. கெஸ்ஸை உற்சாகமூட்டுகிறார். பில்லியைப் பாராட்டுகிறார்.

கெஸ்சுடனான உறவில் பில்லி வீட்டையே மறந்துவிட்டான். தாய் தந்தையை மறந்துவிட்டான். பில்லி ஒளிந்து ஒளிந்து அப்பாவிடமிருந்து தப்பி பள்ளிக்கூடத்தை விட்டே ஓடுகிறான். அவனுக்குப் படிப்பில் விருப்பமில்லை. அந்த வயதில் அவனுக்கு வேலை செய்வது தொடர்பாகப் பேச வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து அதிகாரி வருகிறார். பில்லிக்கு அவருக்கு மரியாதை தரத் தெரியாமல் போகிறது. அவர் விவரிக்க எல்லாவற்றையும் மேஜையில் படுத்தபடி தாடையில் கைவைத்தபடி கேட்கிறான். பிற்பாடு அறிவுரைகளைத் தாங்க முடியாமல் வெளியேறுகிறான்.

கெஸ்ஸைப் பார்க்க வருகிறான். கெஸ்ஸைக் காணவில்லை. புல்வெளிக்குப் போய்ச் சாப்பிடுகிறான். கெஸ் வரவில்லை. எங்கெங்கு புல்வெளியும் மரங்களும் பழைய கட்டிடங்களும் இருக்கிறதோ அங்கெல்லாம் போய்க் கத்துகிறான். கெஸ் வரவில்லை.

என்ன ஆயிற்று கெஸ்சுக்கு? எங்கே என் கெஸ்? எங்கே என் செல்லப் பறவை?

கடைசியில் வீட்டுக்கு வருகிறான். அவனுக்கு அப்பாவின்மீது சந்தேகம். அப்பா மோசமானவர். அவன் வீட்டுக்குள்



நுழையும்போதே சண்டை நடந்துகொண்டிருக்கிறது. பில்லி பேசப்போக அவன் தகப்பன் அடிக்கத் தொடங்குகிறான். தாய் தடுக்கிறாள். அழுது குழறியபடி வெளியே போடும் பில்லி குப்பைத் தொட்டிகளினடியில் குப்பைகளின் இடையில் தனது பறவைக் குஞ்சைத் தேடுகிறான்.

கொடுமை. குப்பைகளுக்குள் கிடக்கிறது பறவையின் உடல். கழுத்துத் திருகிக் கொல்லப்பட்டிருக்கிறது. ஒடிந்த தொய்ந்த தலை. மூடிய அலகு. நனைந்து நைந்த சிறகுகள். பில்லியின் தலைமுடியைக் கோதி மார்பில் சாய்த்துக்கொள்ள வேண்டும். அழாதே மகனே. அழாதே.

அப்பாவிடம் நியாயம் கேட்கிறான் அழுதபடி கோபமுற்ற பில்லி. மறுபடி அடி. பில்லி வீட்டை விட்டு ஓடுகிறான். கெஸ்ட்ரல் பறந்து திரிந்த புல்வெளி நோக்கி ஓடுகிறான்.

இறுதிக் காட்சி பற்றி இங்கிலாந்தின் புகழ்பெற்ற பாடகர் ஜார்விஸ் காக்கர் (Jarvis Cocker) சொல்கிறார்.

"இறுதிக் காட்சியை ஒவ்வொரு முறை பார்க்கும்போதும் நான் அழுதுவிடுகிறேன். இக்காட்சியை வேறேதேனும் வகையில் வைத்திருக்கக் கூடாதா என்று நான் நினைக்கிறேன்".

குழந்தை பில்லி நிழல் படர்ந்த அடர்ந்த மரத்தினடியில் தன் செல்லப் பறவைக்காக புதைகுழியைத் தோண்டி கெஸ்ட்ரலை அழுகையுடன் புதைகுழியில் வைக்கிறான்.....

இருள் படிகிறது. படம் முடிகிறது.

திணிக்கப்பட்ட கல்விமுறை. விலக்கி வைக்கப்படும் ஏழமைச் சிறுவர். அங்கீகரிப்புக்குள்ளாகாத ஜீவன். மறுக்கப்பட்ட குழந்தைமை. விலகிய உலகம். பருந்து இங்கு சுதந்திரத்தின் குறியீடு. கொல்லப்படும் சுதந்திரத்தின் குறியீடு. நெறிப்படுத்தச் சரியான வழிகாட்டுதலின்மை. தனிமையில் திரிந்த மனம் போன்றவற்றை இப்படம் பேசுகிறது.

இப்படத்தில் நடிகர்கள் மிகக் குறைவு. பெரும்பாலான காட்சிகளில் வருபவர்கள் நடிகர்களல்ல. அன்றாட வாழ்வு மனிதர்கள். இப்படம் குறிப்பிட்ட சுரங்கத் தொழிலாளர் குடியிருப்புக் குழந்தைகள் பற்றியது. அவர்களின் துக்ககரமான வாழ்வு பற்றியது. இப்படம் அமெரிக்காவின் தொழில் நகரங்களில் மாபெரும் வெற்றி பெற்றது. இப்படம் சுட்டும் யதார்த்தம் தமிழகத்தின் கொழும்பின் இந்தியாவின் ஈழத்தின் எந்த தொழில் நகரத்தினதும் விவசாயி மக்களதும் குழந்தைகள் பற்றிய யதார்த்தம்தான்.

இப்படம் 1995ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் இலண்டனில் தி நேஷனல் பிலிம் தியேட்டரில் திரையிடப்பட்டபோது நான் சென்றிருந்த காட்சிக்கு வந்திருந்தவர்கள் பெரும்பாலும் மாணவர்களும், இடதுசாரி அமைப்பைச் சார்ந்தவர்களும்தான். ஒரு மணி நேரம் முந்திச் சென்றிருந்தும்கூட நுழைவுச் சீட்டுகள் விற்றுத் தீர்ந்துவிட்டன.

நான் பார்த்தே ஆகவேண்டும் என்று நினைத்த படமது. எனக்கு நுழைவுச் சீட்டு கொடுத்து உதவியவர்கள் சோஷலிஸ்ட் தொழிலாளர் கட்சியைச் சேர்ந்த இரு பெண் தொழிலாளர்கள். தாம் book செய்திருந்தவரில் ஒரு தோழருக்கு வேறு shift என்பதால், அவர் வர இயலாததால் எனக்குக் கிடைத்த நுழைவுச் சீட்டு அது. படத்தைப் பார்த்து முடித்தபோது அரங்கமே உணர்ச்சி வசப்பட்ட நிலையிலிருந்தது. இந்த வாய்ப்பை எனக்குத் தந்ததற்காக மறுபடி மறுபடி அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துவிட்டு வந்தேன்.

இப்படம் வீடியோவில் கிடைக்கிறது. ஆனால் வீடியோவில் கிடைக்கும் வடிவம் அமெரிக்கன் ஆங்கிலத்தில் dub பண்ணப்பட்ட வடிவம். நான் பார்த்தது National film archiveலிருந்து வந்திருந்த பிரதி. அசல் பிரதி. ஒடுக்கப்பட்ட வர்க்கத்தைச் சார்ந்த மனிதரெல்லோருமே தம் குழந்தைகளின் உலகம் பற்றி கவலைப்பட வேண்டும். மேல்நிலைக்கு வந்துவிட்ட தொழிலாளி வர்க்கம் சார்ந்தவர்கள் தமது கடந்த காலத்தை மறந்துவிடக் கூடாது. ஒடுக்கப்பட்ட குழந்தைகள் இருக்கும்வரை, நிராகரிக்கப்பட்ட குழந்தைகள் இருக்கும்வரை உலகின் ஒரு அடி நிலமோ வானமோ விடுதலை பெற முடியாது.

கென்லோச் எனும் மேதை அதை திரையில் சொல்லியிருக்கிறான்.

## II

புயலின் மையம் (Stormcentre) திரைப்படத்தை டானியல் டாரதாஸ் (Daniel Taradash) இயக்கியிருந்தார். படம் கொலம்பியா நிறுவனத்தின் தயாரிப்பு. அநேகமாக 1930கள் 40களில் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். நான் பார்த்த பிரதியில் வருடம் குறிப்பிடப்படவில்லை. படம் கம்யூனிஸ்ட் எதிர்ப்பு பிரிட்டிஷ வாழ்க்கை முழுக்க நிறைந்திருப்பதைச் சொல்கிறது. கம்யூனிஸத்துக்காக இப்படம் வாதாடவில்லையானாலும் திரைக்கதையும் , காட்சியமைப்புகளும் "கம்யூனிஸக் கனவு" (The communist dream) புத்தகமே புயலின் மையமாவதைச் சித்தரிக்கிறது.


அலீஸா ஹால் எனும் மத்யதர வர்க்கப் பெண் இங்கிலாந்தில் ஒரு நகராட்சியில் (council) இயங்கும் இலவச பொது நூலகத்தில் தலைமை நூலகர். அவருக்கு குழந்தைகள் பிரிவை அற்புதமாக நிர்மாணிக்க வேண்டும் என நிறைய கனவுகள்.

பிரெட்டி ஒரு பத்து வயதுச் சிறுவன். தாய் தந்தை சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்தான். பிரெட்டிக்கு புத்தகங்கள் உயிர். சாப்பாடு தூக்கம் அவனுக்கு ரெண்டாம் பட்சம். பிரெட்டிக்கும் அலிஸாவுக்கும் இருக்கும் அன்பு கட்டற்ற அன்பு. அவன் தாய தந்தை மற்றும் தன்னுடைய லைப்ரரி கார்டு (Library card) எல்லாவற்றையும் ஒன்றாகப் பாவிப்பவன்.

ஒருமுறை கவுன்சிலர் ஒருவர் நூலகத்தின் குழந்தைகள் பிரிவுக்கு விஜயம் செய்கிறார். அவர் எடுக்கும் புத்தகம் The communist dream. இந்தப் புத்தகத்தில்தான் படத்தின் புயல் மையம் கொள்கிறது.

அலிஸா கவுன்ஸில் கூட்டம் ஒன்றிற்காக குழந்தைகள் நூலகம் பற்றி விவாதிக்க அழைக்கப்படுகிறார். அலிஸா சந்தோஷத்துடன் கலந்துகொண்டு வரைபடத்தை வைத்து தனது கனவுகளை உற்சாகமாக விளக்கிக்கொண்டிருக்க கவுன்ஸிலர்களின் நோக்கம் வேறாயிருக்கிறது. The communist dreaw பற்றி நிறையப் பெற்றோர்களிடம் இருந்து தொலைபேசி வருவதாகவும் அதை நூலகத்திலிருந்து வெளியே

www.tamilarangam.net




எடுத்துவிட வேண்டும் என்றும் சொல்லப்படுகிறது. அந்த ஒரு புத்தகத்துக்கு மாற்றாக நூற்றுக்கணக்கான புத்தகங்கள் தரப்படலாம் என்று சொல்லப்படுகிறது.

அலிஸாவுக்கு உடன்பாடில்லை. தனது 25 வருட நூலக வாழ்வில் புத்தகங்கள் அவருக்குக் குழந்தைகள். நூலகம் அவரது வீடு. கனவு. இத்தனை ஆண்டும் பணியில் அவரை புத்தகத்தை நீக்கச் சொல்லி சோதனை வந்ததே கிடையாது.

அவர் உறுதியாகச் சொல்கிறார். புத்தகத்தை நீக்க முடியாது. அறிவை நேசிப்பவள் எனும் அளவில் அது சாத்தியமில்லை. புத்தகத்தை நீக்க வேண்டுமானால் என்னை நீக்க வேண்டும். இதில் ஏதேனும் ஒன்றைச் செய்தால் மட்டுமே மற்றது நடக்கும். புத்தகத்தை நீக்கக்கூடிய அதிகாரம் உங்களிடம் இருக்கிறது. என்னை நீக்கக்கூடிய அதிகாரமும் உங்களிடம் இருக்கிறது. உசிதம்போல் செய்யுங்கள்□

வெளியே வருகிறார் அலிஸா.

கவுன்ஸில் அலிஸாவை விட்டுவிடுவதாக இல்லை. இது அவர்களுக்கு ஒரு சவால். அலிஸா மறுபடி கூப்பிடப்படுகிறார். அலிஸா முன்னெப்போதோ கம்யூனிஸட் கட்சியோடு தொடர்புள்ள வெகுஜன அமைப்புகளில் உறுப்பினராயிருந்த ஆவணங்கள் வைக்கப்படுகிறது. சமாதான அமைப்பு/ பெண்கள் அமைப்பு/ சுதந்திரத்துக்கான அமைப்பு என விவரங்கள் முன்வைக்கப்பட்டு அலிஸாவிடம் விவரம் கேட்கப்படுகிறது.

அலிஸா தான் கம்யூனிஸ்ட் இல்லை என்கிறாள். கம்யூனிஸத்தைத் தான் விரும்பவும் இல்லை என்கிறாள். அதே சமயம் தமது நம்பிக்கைகளோடு உடன்படுபவர்களோடு தான் உடன்படுவேன் என்கிறார். குற்றச்சாட்டுகள் வலியுறுத்தப்படுகிறது. புத்தகம் நீக்கப்படாததற்கான காரணம் அலிஸாவின் கம்யூனிஸ்ட் கட்சி உறவுதான் எனப் பெரும்பான்மையாகத் தீர்மானிக்கப்பட்டு அலிஸா நூலகத்திலிருந்து வேலை நீக்கம் செய்யப்படுகிறார்.

காலையில் எழுந்து "பேப்பர் கட்டிங்ஸ்" செய்து கொண்டிருக்கும் பிரெட்டிக்கு தினசரிப் பத்திரிகையின் மூலம் செய்தி தெரியவருகிறது. குழந்தை கொதித்துப் போகிறான். புத்தகம் கிழிந்து விட்டதற்காக அழுது புலம்பியவன் அவன். அலிஸாவைத் தேடிப்போய்க் காரணம் கேட்கிறான். "கம்யூனிஸம் என்றால் என்ன?" என்கிறான். "அது மிகமோசமான பூதமா?/ பயங்கரமானதா?" என்கிறான்.

அலிஸா ஏன் அதை எங்கேனும் ஒளித்து வைத்துவிட்டு. நீக்கிவிட்டேன் என்று சொல்லியிருக்கக்கூடாது என்கிறான். புத்தகங்களைத் துருவித்துருவிப் படிக்கும் குழந்தை அவன். கம்யூனிஸக் கனவு பற்றித் தெரிந்துகொண்டே ஆகவேண்டும் அவனுக்கு கனவுகள் அவனுக்கு விருப்பம். அலிஸா அவனுக்கு விஷயங்களை விளக்க முடியாததால் அலிஸாவின் மீது அவனுக்கு வெறுப்பும் கோபமும் வருகிறது.

அலிஸாவின் நிலை துக்ககரமானது.

அப்பாவைக் கேட்கிறான். அம்மாவைக் கேட்கிறான். கம்யூனிஸக் கனவு என்றால் என்ன? எவரும் பதில் சொல்லவோ விளக்கவோ தயாரில்லை. முழுச் சமூகத்தையும் கம்யூனிஸப்

www.tamilarangam.net

பிராந்தி (Communist phobia) பிடித்தாட்டுகிறது.

தெரிந்துகொள்ள வேண்டும் எனும் ஆர்வம் பிரெட்டியை உன்மத்தம் பிடித்தவனாக்குகிறது. நூலகம் பூட்டப்பட்ட பின்னும் உள்ளிருந்து புத்தகங்களைத் தேடிப் பார்க்கிறான். தேடித் தேடிப் பார்க்கிறான். கிடைக்கவில்லை. இரவுகளில் துர்ச்சொப்பனம் கண்டு அலறுகிறான்.

அது என்ன கம்யூனிஸக் கனவு?

குழந்தைகள் நூலகம் விரிவுபடுத்திக் கட்டப்பட்ட விழா நடைபெறுகிறது. அலிஸா இல்லை. பிரெட்டிதான் அதிகப் புத்தகங்கள், பெரிய புத்தகங்கள் படித்த குழந்தை. அவன் படித்தவற்றுள் மாயக் கதைகளும் பைபிளும் அகராதியும் அடங்கும்.

பிரெட்டியை மேடையில் கூப்பிட்டுப் பாராட்டுகிறார்கள். அலிஸாவை கவுன்ஸில் தலைவர் சென்று அழைத்து வருகிறார். (உண்மையில் இக்காட்சிகளில் தர்க்கம் என்பது இல்லை. கவுன்ஸில் தலைவர் பெரும்பான்மையானவர்க்குக் கட்டுப்பட்டாலும் மனச்சாட்சி உள்ளவராகச் சித்தரிக்கப்படுகிறார். அலிஸாவைத் தன் பொறுப்பில் கூட்டி வருகிறார். கூடியிருப்போர் விருப்பமின்றி மௌனமாயிருக்கின்றனர். கவுன்ஸில் தலைவர் பின்விளைவுகளை யோசித்துத்தான் செய்தாரா? எதிர்ப்பு இருக்குமே? மாறாக கவுன்ஸில் தலைவர் செய்தது ஒப்புக்கொள்ளப் படுகிறது. எப்படி? இத்தகைய கேள்விகளுக்கு விடையில்லை. தர்க்கபூர்மான விடையில்லை. இது திரைக்கதையாசிரியரில் இருக்கும் தீர்க்கப்படாத முரண். ஐரோப்பிய தாராளவாதத்தின் தீர்க்கப்படாத முரண்)

அலிஸாவை மேடையில் பார்த்ததும் பிரெட்டி கத்துகிறான். புத்தகத்தை தனக்கு மறுத்துவிட்டதாகக் கத்துகிறான். அலிஸா அவனை அழுகையுடன் அடித்துவிடுகிறாள். பிரெட்டி ஓடிப் போகிறான். இரவு முழுக்க அவன் வீட்டுக்கு வரவில்லை. வீட்டில் அவனைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

குழந்தைகள் நூலக விழா நாற்காலிகள் வெறுமையாக இருளில். அமைதியில் தனித்தபடி நாற்காலியில் யோசனையுடன் பிரெட்டி. கமெரா நகர்ந்து நூலகம் நோக்கிப் போகிறது.

நூலகச் சன்னல்களில் புகை. கொழுந்துவிட்டு எரியும் தீ ஜ்வாலைகள் பரவுகிறது. பிரெட்டி உள்ளிருந்து புகை மூட்டத்தினிடையில் தடுமாறி விழுந்து ஓடி தடுக்கி மயங்கி விழுகிறான். தீயணைப்புப் படை வருகிறது. மக்கள் கூட்டம் கூட்டமாக ஓடி வருகிறார்கள்.

ஜன்னல்களை உடைத்து பிரெட்டியை வெளியே எடுத்து வருகிறார்கள் தீயணைப்புப் படையினர். பிரெட்டிக்குக் காயங்கள்தானே ஒழிய அவன் உயிருக்கு ஆபத்தில்லை.

மக்கள்/ கவுன்ஸில் உறுப்பினர்களின் முகங்களில் சவக்களை. தீச்சுவாலையின் வெம்மையில் அடிக்கடி கூசும் சவக்களை.

ஷேக்ஸ்பியர் புத்தகங்கள் எரிகிறது. ஹென்றிக் இப்ஸன் எரிகிறார். தத்துவம் - ஆன்மாவின் ஆய்வு எரிகிறது. பொருளியல் - நடைமுறை ஆய்வு எரிகிறது. இயேசுகிறிஸ்து எரிகிறார். பீத்தோவன் எரிகிறார். லியோ டால்ஸ்டாய் எரிகிறார். பைபிள் எரிகிறது. சடசடவென எரிந்து விழுகிறது புத்தக அலுமாரிகள்.

முழு நூலகமும் எரிகிறது. கம்யூனிஸக் கனவை நீக்கிய முழு நூகமும் எரிகிறது.

அலிஸா ஹால் வருகிறார். துக்கம். கோபம். முன்பு தனக்குக் குரல் கொடுக்க வந்த நண்பர்களை மறுத்து போராடாமல் விரட்டியவர் அவர். தனிமனித விஷயம் இது என்றவர் அவர்.

அலிஸா சொல்கிறார் "நான் எதிர்த்துப் போராடாமல் விட்டது தவறு. இனி என் வாழ்நாளெல்லாம் இந்தக் குழந்தைகள் நூலகத்தைக் கட்டியெழுப்பப் போராடுவேன். அறிவைத் தடை செய்வதை எதிர்த்துப் போராடுவேன்"

தீச் சுவாலைகள் வான்முட்டி எரிந்துகொண்டேயிருக்றது.

## III

ஸீலியா (Ceilia) படம் 1988ம் ஆண்டுப் படம். ஆன் டர்ணர் (Ann Turner) இதன் இயக்குனர். ஆஸ்திரேலியப் படம் இது. பல்வேறு திரைப்பட விழாக்களில் விமர்சகர்களின் விருதைப் பெற்ற படம் இது.

படத்தின் கதை டிசம்பர் 1957ம் ஆண்டு நிகழ்கிறது.

ஸீலியா தனது பாட்டிக்கு (Granny) காலையில் பிரேக்பாஸ்ட் கொண்டுதரப் போகிறாள். திரைச் சீலைகளை விலக்கிவிட்டு பாட்டியைத் தொட்டு உலுப்ப, எழும்பவில்லை. முகத்தைப் புரட்டுகிறாள். பாட்டி பேசவில்லை. பாட்டி இறந்துவிட்டாள்.

ஸீலியாவுக்கும் பாட்டிக்குமான உறவு திரைக்கதையில் முக்கிய பங்கு வகிக்கிறது. அலீஸாவுக்குள் இயங்கும் முக்கிய உந்துசக்தி பாட்டியின் நினைவுகள். பாட்டி அவளுக்கு ஆதர்சம். பாட்டியின் சிவப்புப் புத்தகங்கள் (Red books) அவளுக்குப் புனிதம்.

அலீஸா 6 வயதுப் பெண்குழந்தை. அலீஸா தனது சிநேகிதியோடு பள்ளிக்கூடம் போய்விட்டு வருகிறாள். பக்கத்து வீட்டுக்கு யாரோ குடிவந்திருக்கிறார்கள். அப்பா அம்மா இரண்டு பொடியன்கள். நாலு வயதிருக்கும் ஒரு பெண்குழந்தை. அலீஸாவுக்கு முக்கியமாகத் தெரிவது அவர்கள் நிறைய சிவப்புப் புத்தகங்கள் வைத்திருக்கிறார்கள் என்பதுதான்.

ஆம். புதிதாகக் குடிவந்தவர்கள் ஆஸ்திரேலிய கம்யூனிஸ்ட்டுக் கட்சியைச் சேர்ந்தவர்கள். மிக எளிமையான வாழ்வு அவர்களுடையது. உடைதான் வர்க்கத்தின் அடையாளம். பளபளப்பற்ற முகம். துடிப்பான குழந்தைகள். அலீஸாவுக்கு அவர்களை உடனடியாகப் பிடித்துப் போகிறது. அடுத்தநாள் காலையிலேயே தானாகவே பக்கத்து வீட்டுத் தோட்டத்துள் நுழைந்து அவர்களோடு விளையாடத் தொடங்குகிறாள்.

அப்போதிருக்கும் அரசாங்கம் கம்யூனிஸ்ட்டு எதிர்ப்பு அரசாங்கம். அலீஸாவின் அப்பாவுக்கும் கம்யூனிஸ்ட்டுகளைப் பிடிக்காது. தன்தாய்/ அலீஸாவின் பாட்டி கம்யூனிஸ்ட் கட்சியில் செயல்பட்டவர். தனது தாயின் அனுபவங்கள் அவருக்கு ஆக்கபூர்வமான சிந்தனையைத்

www.tamilarangam.net

தரவில்லை. கம்யூனிஸ்ட் கட்சி பற்றி எதிர்மறையான சிந்தனைப் போக்கையே கொண்டிருக்கிறார் அவர்.

ஆஸ்திரேலிய அரசாங்கம் அப்போது முயல் வேட்டைக்காகப் பிரச்சாரத்தை உக்ரமாகச் செய்துவருகிறது. முயல்களைத் தேடிக் கொன்றொழிக்க வேண்டும். முயல்கள் நிறையச் சாப்பிடுகிறது. இனிமேல் முயல்களுக்கு சாப்பாடு போட்டு கட்டுப்படியாகாது. ஆகவே முயல்களை வேட்டையாடச் சொல்கிறது. பொலிசுக்கும் இக்கடமை இருக்கிறது.

படத்தில் சமாந்தரமான நீரோட்டங்களாக (Parallal stream) மூன்று வாழ்க்கை நிலைகள் சொல்லப்படுகின்றன.

1. குழந்தைகளுக்கிடையில் செயல்படும் அடிப்படை வர்க்க உணர்வு.
2. ஸீலியாவின் தகப்பனுக்கும் குடிவந்த கம்யூனிஸ்ட் பெண்ணுக்குமான பழைய காதல்.
3. அதிகாரத்திலிருக்கும் வர்க்கம் சார்ந்தவர்க்கும், எதிர்த்துப் போராடும் வர்க்கம் சார்ந்தவர்க்கும் அன்றாட வாழ்வில் நிலவும் பதட்டம்.

படத்தில் வரும் இன்னும் சில முக்கியமான கதாபாத்திரங்கள். ஒரு பொலிஸ்காரர். அதிகாரத் திமிர் பிடித்தவர். அதே திமிரோடு ஆதிக்கத்தோடு வன்முறை உணர்வோடு வளரும் அவர் குழந்தை. பெண் குழந்தை. நல்ல உயர்ந்த வளர்ச்சியுள்ள பெண் குழந்தை. அவளது நண்பர்கள். வசதியான வீட்டுப் பையன்கள். இவர்கள் நான்கு பேர். இவர்கள் நான்கு பேரும் ஒரு குழு.

முரண்பாடுகள் வாழ்வின் வழி ஒவ்வொரு காட்சியிலும் இப்படி நிலவுகிறது. ஒவ்வொரு cinema frameeWp இப்படி நிலவுகிறது.

ஸீலியா மற்றும் மூன்று கம்யூனிஸ்ட் குழந்தைகள் எ போலீஸ் குழந்தை மற்றும் மூன்று வசதியான குழந்தைகள்.

படம் ஸீலியாவின் அனுபவங்களின் வழியேதான் சொல்லப்படுகிறது. ஸீலியா ஒரு கலகக்காரக் குழந்தை. அவளுக்கும் அவள் நண்பர்களுக்கும் போலீஸ்காரர் மகள் மற்றும் அவள் நண்பர்களோடு எப்போதும் பகை. போலீஸ்காரன் மகளும் அவள் நண்பர்களும் எப்போதுமே ஸீலியாவை தேடித்தேடித் துன்புறுத்திக்கொண்டே இருப்பார்கள், அடிப்பார்கள், விரட்டுவார்கள்.

ஸீலியா சின்னக் குழந்தை. நோஞ்சான் மாதிரியான எளிமையான குழந்தை. ஆனால் சிந்திக்கும் குழந்தை. எதிர்த்துநின்று போராடும் கலகக்காரக் குழந்தை. பாட்டியின் பேத்தி.

ஒரு காட்சி ஸீலியாவும் அவள் நண்பர்களும் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். விளையாடும் இடத்தில் முதலில் பாறைகள் வெட்டப்பட்டிருக்க வேண்டும். அரைமைல் பரப்பளவு குழிந்த பகுதி. கைவிடப்பட்ட பலகையிலான ஷெட் ஒன்று. சிமெண்டுப் புழுதி. ஆள் அரவமற்ற இடம். தண்ணீர் தேங்கியிருக்கும் குட்டை இது ஸீலியாவின் பிரத்யேக விளையாடுமிடம். அவள் பாட்டியோடு விளையாடிய நினைவுகள் கவிந்த இடம்.

அங்கு வருகிறார்கள் போலீஸ் குழந்தைகளும் அவள் நண்பர்களும். வந்ததுமே தொடங்குகிறது வன்முறை. கற்களையெடுத்து வீசுகிறார்கள். துரத்தித் துரத்தி அடிக்கிறார்கள். ஸீலியா எதிர்த்துத் திரும்பி நின்று போலீஸ்காரன் மகளைத் திருப்பி அடிக்கிறாள். ஒரே வன்முறை. அந்த வழியே போலீஸ் கார் வருகிறது. போலீஸ் குழந்தையின் தந்தை அது. அவருக்குக் கோபம்.


நிறுத்தச் சொல்லி அதட்டுகிறார். தன் மகளையும் நண்பர்களையும் வீட்டுக்குப் போகச் சொல்கிறார். ஸீலியாவையும் நண்பர்களையும் மட்டும் அதட்டி பொலிஸ் ஸ்டேஷனுக்குத் தள்ளிச் செல்கிறார். அக்குழந்தைகள் மீது குரோதம். ஸீலியா பயப்படுகிற குழந்தை இல்லை.

போலீஸ் ஸ்டேஷனுக்கு கம்யூனிஸ்ட் பெண் வருகிறார். "எங்கள் மேல் உனக்கு வெறுப்பு/ பிரச்சனை என்றால் அதை எங்கள் மேல் காண்பி. குழந்தைகளோடு விளையாடாதே" என்று போலிஸ்காரரோடு சண்டை போட்டுவிட்டுக் குழந்தைகளோடு அழைத்துக்கொண்டு போகிறாள்.

அப்போது ஸீலியாவின் துள்ளலையும் சந்தோஷத்தையும் நீங்கள் பார்க்க வேண்டும்!

திரும்பிப் போலிஸ்காரனை ஒரு பார்வை பார்ப்பாள் ஸீலியா. கொள்ளை அழகு அக்காட்சி.

ஸீலியாவின் உலகு கற்பனைகள் நிறைந்த உலகு. தனது பாட்டியை பூதங்கள் வந்து தூக்கிக்கொண்டு போய்விட்டதாக அவள் நினைக்கிறாள். அடிக்கடி பேயின் கைகள் தன்




உருண்டை உலகம் இது உறுதியாய்
இருள் வந்து மூடாமல் உலாவரும் ரவி
அலைகடல் அருவி
மலைமுகட்டில் உறங்கும் முகில்
குளத்துநீரில் முகம் பார்க்கும்
குளிர் நிலவு
கதிர்வரவை எதிர்நோக்கி
களியாடும் தெம்மாங்கு
எங்கும் போர்வையாய்
எழுதாத பச்சை வண்ணம்
இயல் இசை நாடகம்
இலவச இணைப்பாய் இன்னும்
எத்தனை
இருந்தும் என்ன
ஒருமனதாய் ரசிக்கவிட மனமின்றி
படைத்தானோ
குறுக்கே இந்த பசிக்கும் வயிறு

எஸ்.ஒண்டிவீரன்
தமிழ்நாடு

www.tamilarangam.net

ஜன்னலில் நீட்டப் படுவதாகக் கனவு காண்கிறாள். தன் பாட்டியைப் போலவே பூதங்கள் தன்னையும் கொன்றுவிடப் போகிறதா?

ஊகூம், அவள் பயப்பட மாட்டாள்.. ஒருமுறை பயந்து அலறும்போது அவள் தாய் வந்து அவளை இருளில் அழைத்துப்போய், மரத்திலிருந்து சத்தம் போட்ட புனுகுப் பூனையைக் காண்பிக்கிறாள். பேய் ஸீலியாவை விட்டு விலகிப் போய்விடுகிறது. ஆனாலும் ஸீலியாவுக்கு பயப்படாமலிருக்க, இன்னும் நிறையப் பேய்களுண்டு.

ஒருமுறை குழந்தைகள் விளையாடிக் கொண்டிருக்க கம்யூனிஸ்ட் கட்சிக் கிளைக்கூட்டம் நடக்கிறது. சோவியத்துகள் ஸ்டாலினியம் பெண்கள் பங்கெடுப்பு புதிய பொருளாதாரத் திட்டம் எல்லாம் விவாதிக்கப்படுகிறது. விவாதத்தில் கோபமுற்று கம்யூனிஸ்ட் பெண் சமையலறைக்குப் போய்விடுகிறாள். இதைப் பார்த்துக் கொண்டிருந்த ஸீலியா பின்னாடியே போகிறாள். கம்யூனிஸ்ட் கட்சி ஸர்க்குலரிலேயே ஏரோப்ளேன் ஒன்றை இருவரும் செய்து வீச ஸீலியா அதைப் பிடிக்கிறாள். ஸீலியா அப்பெண்ணுக்கு அறியாத சிநேகிதி.

ஏரோப்ளேனை வீட்டுக்குக் கொண்டு வருகிறாள் ஸீலியா. சாப்பாட்டு மேஜையில் அதைப் பார்த்துவிட்டுக் கோபப்படும் அப்பா, உடனே சென்று



ஸீலியாவின் பாட்டி அறையிலிருக்கும் எல்லா சிவப்புப் புத்தகங்களையும் (மார்க்ஸ், லெனின் வால்யூம்கள் விவாதங்கள்) வாரிக்கொண்டு வந்து தோட்டத்தில் தீமூட்டுகிறான்.

ஸீலியா கதறுகிறாள். "பாட்டி புத்தகங்கள், பாட்டி புத்தகங்கள்" அழுது புலம்புகிறாள். அவளுக்கு பாட்டியின் புத்தகம் கட்டில் அவளது அறைச் சாமான்கள் திரைச் சீலை அவளது போராட்டப் புகைப்படங்கள் எல்லாம் புனிதம். சிலவேளை பாட்டியின் கட்டிலில் போய் தனியே படுத்துக் கொள்ளவும் செய்வாள்.

அப்பா நேராக கம்யூனிஸ்ட் பெண்ணிடம் போகிறார். அப்பெண் அப்பாவை முதலே தெரிந்தவள். அவனுக்கு அவளில் ஈடுபாடுண்டு. அவளுக்கும் உண்டுதான். என்ன செய்ய? கல்யாணமாகிவிட்டது. இரண்டு பேருக்கும் குழந்தைகள் உண்டு. கம்யூனிஸ்ட் சர்க்குலர் ஸீலியாவிடம் வந்தது பற்றி ஆத்திரப்பட்டுப் பேசுகிறான். முத்தமிடப் போகிறான். முத்தமிடுதல் நடந்தும்கூட இருவருக்கும். குழந்தைகள் கதவு தட்டுகிறார்கள். இருவரும் விலகுகிறார்கள்.

ஸீலியாவுக்கு முயல்கள் விருப்பம். அப்பா முயல் வாங்கித் தந்துவிட்டு நிபந்தனை விதிக்கிறார். "பக்கத்து வீட்டுக் குழந்தைகளோடு பழகாதே. அவர்கள் கம்யூனிஸ்ட்டுகள். கெட்டவர்கள் (They are communists. Bad people.)" என்கிறார். ஸீலியாவும் அரை மனதோடு தலையாட்டுகிறாள். அப்பா அன்பானவர். என்ன செய்ய?

ஸீலியா முயலோடு நேராக தன் நண்பர்களிடம்தான் போகிறாள். முயலைக் கொஞ்சுகிறார்கள். அங்கு வருகிறது போலிஸ் குழந்தைக் குழு. வந்தவுடன் இக் குழந்தைகளை ஷெட்டுக்குள் பூட்டிவிட்டு பழுக்கக் காய்ச்சிய இரும்புத் துண்டில் முயலுக்குச் சூடு போடுகிறார்கள். கொடூரமான அமைப்பு மனிதர்கள் உருவாக்கிய கொடூரமான குழந்தைகள். குழந்தைகள் இவ்வாறாய் ஆவது எத்துணை கொடுமை?

முயல்வேட்டை தொடர்ந்து நடக்கிறது. பிரச்சனை என்னவென்றால் நிறையக் குழந்தைகள் தங்கள் செல்ல முயல்களை வளர்க்கிறார்கள். போலீஸின் மகளுக்குக்கூட செல்ல முயல் இருக்கிறது. ஆனால் அவளுக்கு அவள் முயல் மட்டும்தான் செல்லம். இளைத்தவர் முயலைக் கொல்வதில் அவளுக்குப் பிரச்சனையில்லை.

பூர்வகுடி ஆஸ்திரேலியப் (Aboriginal people) படம் பார்க்கிறாள் ஸீலியா. பில்லி சூனியம் ஸீலியாவுக்குத் தெரிகிறது. போலீஸ் மாதிரி பொம்மை, போலீஸ் மகள் மாதிரி பொம்மை செய்கிறார்கள் ஸீலியாவும் நண்பர்களும். ஸீலியாவின் சிமெண்டுச் சமவெளியில் நள்ளிரவில் யாகம் ஓங்கி வளரும் தீ. குழந்தைகள் மந்திரம் சொல்கிறார்கள். பொம்மைகள் உடல் முழுக்க ஊசியேற்றுகிறார்கள். தீயைச் சுற்றி வலம்வந்து காறித் துப்பிவிட்டு பொம்மைகளை போலீஸ் வீட்டுக்குள் வீசிவிட்டு ஓடிவிடுகிறார்கள் குழந்தைகள்.

ஸீலியாவுக்கு அவள் அப்பாவிடம் நல்ல அடி. ஸீலியா கவலைப்படப் போவதில்லை. அவள் கோபமெல்லாம் அப்பா மீதுதான். ஏன் அடிக்க வேண்டும்? ஏன் அப்பா கம்யூனிஸ்ட் குழந்தைகளோடு சேரக்கூடாது என்கிறார்? தன் பாட்டி கம்யூனிஸ்ட்தானே? பாட்டி என்ன அழகான பெண்மணி!

பக்கத்துவீட்டுக் கம்யூனிஸட்டுகள் குடிபெயர்ந்து வேறு இடம் போகிறார்கள். தம்

குடும்பத்தையும் குலைத்துக் கொள்ளாமல் ஸீலியாவின் குடும்பத்தையும் குலைத்துவிடாமல் நகரும் பெண்ணின் முடிவு அது. எல்லோரும் விடைபெறுகிறார்கள். ஸீலியாவின் அப்பா தூரத்தில் புல்லுக்குத் தண்ணீர் பாய்ச்சிக்கொண்டு நிற்கிறார். அவருக்கும் அவரது முதல் காதலிக்கும் இருக்கும் மனமூட்டத்தை அவர்கள் இருவர் மட்டுமே அறிவர்.

ஸீலியா தனது கட்டை விரலில் முள்ளால் ஒரு குத்துக் குத்தி கட்டைவிரல் இரத்தத்தை பிற குழந்தைகளின் கட்டை விரல் இரத்தத்தோடு ஒத்துகிறாள். அது தோழமை. இரத்த சொந்தம் சார்ந்த குழந்தைச் சடங்கு இது படம் முழுக்க பத்து முறையாவது வருகிறது.

முயல்வேட்டை தொடர்கிறது. வீட்டுக்கு வரும் போலீஸ்காரர் முயலைக் கேட்கிறார். ஸீலியாவின் அப்பா மறுத்துவிடுகிறார். நள்ளிரவில் முயலைக் கடத்திக்கொண்டு போகும்போது விழிக்கும் ஸீலியா போலீஸோடு சண்டை போடுகிறாள். முயல் பிடிப்பது அரசு உத்தரவு. அடுத்தநாள் நாயைக் கொண்டு வந்துவிட்டு முயலைக் கொல்கிறான் போலீஸ்காரன். முயல் செத்தது ஸீலியாவுக்குத் தெரியாது. முயல் காணவில்லை என்றே திகைக்கிறாள். முழு சமூக அமைப்புமே ஸீலியாவுக்கு எதிரி. ஸீலியாவின் உலகை நொருக்குகிறது. வன்முறை, கொலை. எங்கும் வன்முறை. ஸீலியா அரசுக்குக் கடிதம் எழுதுகிறாள். அரசு முயலை வந்து எடுத்துச் செல்லலாம் எனக் குழந்தைகளுக்குக் கடிதம் எழுதுகிறது.

ஸீலியா ஆசைகளோடு தன் முயல்குட்டியைப் பார்க்க ஓடுகிறாள். தேடித்தேடிப் பார்க்கிறாள். காணவில்லை. அவளுக்கு அவள் முயல் வேண்டும். குண்டான முழு வெள்ளை முயல் குட்டி. அப்பா அம்மா தருகிற முயல்களை மறுக்கிறாள். முயல் அவள் செல்லக் குழந்தை. கடைசியில் தனது முயல் செத்துக் கிடக்க ஒரு தண்ணீர்த் தொட்டியில் காண்கிறாள். அதை எடுத்துக்கொண்டு வீடு வருகிறாள்.

அவளோடு அவளது மற்றொரு சிநேகிதியும் தனது செத்த முயலை எடுத்துக்கொண்டு வருகிறாள். போலீஸ்காரன் மகள் முயல் கொல்லப்படவில்லை. தொழிலாளி மக்கள் குழந்தைகள் முயல்களே கொல்லப்பட்டிருக்கிறது.

அவளது சிநேகிதி பற்றி இங்கு சொல்லவேண்டும். அவள் ஏழை வீட்டுப் பெண். அவளைப் போலீஸ்காரன் மகள் எப்போதும் மிரட்டியே வைத்திருப்பவள். அவள் ஆசையும் மனமும் ஸீலியாவோடுதான். ஆனால் போலீஸ்காரன் மகள் வன்முறை மூலமே அவளைக் கட்டுப்படுத்துகிறாள். இப்போது கொல்லப்பட்ட இரு முயல்களுமே இரு கீழ்த்தட்டுக் குழந்தைகளுடையவை. இயல்பான தோழமை வந்துவிட்டது. தோட்டத்தில் குழிதோண்டி இரு முயல்களையும் புதைக்கிறார்கள் குழந்தைகள். தமது முகத்துக்கு வேஷம் போட்டுக் கொள்கிறார்கள். பயமூட்டும் பல வண்ணங்கள் தீட்டப்பட்ட முகங்கள். அவர்கள் பேய்களை பூதங்களை பழிவாங்கப் போகிறார்கள். இரண்டு குழந்தைகளும் போலீஸ்காரன் வீட்டுக்கு வந்து, ஸீலியா மறைந்திருந்து, தன் பாட்டியைக் கொன்ற பூதம் மாதிரியான போலீஸ்காரனைச் சுட்டுக் கொன்றுவிடுகிறாள். துப்பாக்கி போலீஸ்காரனுடையது.

எல்லாம் விளையாட்டு மாதிரி. குழந்தைகளின் உலகு சிதறுண்டு போகிறபோது கொலையும் விளையாட்டாகவே அதன் தர்க்க வளர்ச்சியில் விளைகிறது. கொலை செய்துவிட்டு, வெள்ளைக் கையுறைகளைத் தான் குளத்தில் தான் மறைத்து வைத்த சின்னப் பெட்டிக்குள் மூடித் தண்ணீரில் மூழ்க வைக்கிறாள் ஸீலியா. கட்டை விரலில் முள்குத்தித் தன் சிநேகிதியின் முள்குத்திய கட்டை விரல் இரத்தத்தில் ஒத்துகிறாள். அது குழந்தைகளின் தோழமை உலகு. சத்தியம்.

போலீஸ்காரன் நாய் வருகிறது. வல்வல்எனக் குரைக்கிறது. ஸீலியா நாய்க்குட்டியை மரத்தில் கட்டிப் போட்டுவிட்டு ஓடிவருகிறாள். ஸீலியாவைத் தேடிவரும் தாய் ஸீலியாவையும் சிநேகிதியையும் அணைத்துக்கொள்கிறாள். போலீஸ்காரர் கொல்லப்பட்ட செய்தி பரவிவிட்டது. ஸீலியாதானென எவருக்கும் தெரியாது. ஆனால் ஸீலியாவின் தாய்க்கும் தகப்பனுக்கும் ஸீலியாவின் சிநேகிதிக்கும் தெரியும் உண்மை. ஸீலியாவுக்கு மரம் செடி கொடிகளுக்குள் ஓடி வந்ததில் சிராய்ப்புக் காயம். அவளுக்குக் காய்ச்சல் வந்துவிட்டது. போலீஸ் விசாரணை நடக்கிறது. ஸீலியா கவலைப்படவோ பயப்படவோ இல்லை. அவள் உலகில் அதற்கு நியாயங்கள் உண்டு. ஏன் முயலைக் கொன்றான்? ஏன் கொல்ல வேண்டும்?

நாய்க்குட்டியை ஸீலியாவின் வீட்டுக்குக்

## வெள் உரு

என்னைக் கழட்டி வைத்துவிட்டு
நானாக வீதிக்கு வந்தேன்.

புதிதாய் பார்த்தது உலகு.

என் ரோமம் பூத்த
மயிர்தலை அருவருத்தார்கள்.

என் கருப்பு உடம்பு கண்டு
அந்த வெள்ளை மனிதர்கள்
சிரித்தனர்.

தம் கூன்முதுகு நிமிர்த்தி
என்னை குனியச் செய்து
தாண்டி தாண்டிப் போனார்கள்.

நான் எச்சிலாய்ப் பட்டேன்.
அவர்களின் போலிச் சிரிப்புகள்
என்னை வறுத்தன.
மறுபடியும் வீட்டுக்குவந்து
என்னை மாட்டிக்கொண்டு
நிமிர்ந்து வீதியில் நான்......

மு.மாங்கனேஸ்வரன்
தமிழ்நாடு

www.tamilarangam.net

கொண்டுவந்து விடுகிறாள் ஸீலியாவின் தாய். தன் மகள் கொலை செய்துவிட்ட செயலை நினைத்துத் தனிமையில் குமுறிக் குமுறி அழுகிறான் தந்தை. அந்த அழுகை கோபத்தினால் வந்த அழுகை அல்ல. தன் குழந்தையின் உலகு நொருக்கப்பட்டதால் வந்த அன்பின் வெளிப்பாடு. வகுப்பறைக்கு வரும் போலீஸ்காரனின் குழந்தைக்கு அனைவரும் பிரார்த்தனை செய்யும்படி சொல்லப்படுகிறது. அனைவரும் பிரார்த்திக்க ஸீலியா பிரார்த்திக்கவில்லை. ஸீலியா பிரார்த்திக்கப் போவதில்லை. வருந்தப் போவதில்லை. முழுத்திரையில் ஸீலியாவின் அழுத்தமான உறுதியான முகம்.

இறுதிக் காட்சி. சிமெண்டுச் சமவெளி. ஸீலியா. அவள் சிநேகிதி. போலீஸ்காரன் மகள். அவள் சிநேகிதர்.
ஸீலியா எலெக்ட்ரிக் கம்பத்தின் மீதேறி சுருக்குக் கயிற்றைத் தொங்கவிடுகிறாள். அவள்தான் நீதிபதி. குற்றம் செய்தவருக்குத் தண்டனை தரவேண்டுமாம். கடவுள் தண்டிப்பார் நீதி வழங்குவார் என்றார் வகுப்பில் ஆசிரியை. இங்கு ஸீலியாதான் நீதிபதி, கடவுள்.
ஸீலியாவின் சிநேகிதியின் கழுத்துக்குச் சுருக்கு மாட்டப்படுகிறது. தூக்கப்படும் சந்தர்ப்பத்தில் கயிறு அறுந்து விழச் செய்கிறாள் ஸீலியா. இது விளையாட்டு. போலீஸ்காரன் மகள் ஓடிப் போகிறாள்.
"தீர்ப்பு முடிந்தது" என்கிறாள் ஸீலியா. ஸீலியாவும் அவள் சிநேகிதியும் திரையில் சின்னதாக அழுதுகொண்டிருக்கிறார்கள்.......

## IV

ஸீலியா படத்தை எடுத்தவர் ஒரு பெண். கெஸ் பட இயக்குனர் ஒரு மாக்ஸிஸ்ட். புயலின் மையம் பட இயக்குனர் ஐரோப்பிய தாராளவாதி. அடிப்படையில் இம்மூன்று படங்களும் அரசியல் படங்கள்தான். மிகமிக ஆழமான அரசியற் படங்கள். உயிரியல் பண்புகளும் குழந்தைகளின் மனோவியலும் பற்றிய ஆய்வுகள் கொண்ட படங்கள்.

திரைப்படங்கள் என்னும் அளவில் இத்தகைய படங்கள் இந்திய தமிழ்ச் சூழலில் துப்பரவாகவே இல்லை. நமது குழந்தைப் படங்கள் பெரும்பாலானவை பாலுறவு விழிப்புணர்ச்சி தொடர்பானவை. விவாகரத்தான பெற்றோர்களின் குழந்தைகள் பற்றிய படங்கள். பெரியவர்களைத் திருத்தும் ஞானக் குழந்தைகளைக் கொண்ட படங்கள். நிறைய அதிகப் பிரசங்கித்தனம் செய்யும் குழந்தைகள்தான் நம் படங்களில் அதிகம்.

இப்படங்களில் வரும் குழந்தைகள் மிகச் சாதாரணமான குழந்தைகள். இவர்களின் நடவடிக்கைகள் முற்றிலும் குழந்தைகள் உலக நடவடிக்கைகள்தான். செல்லப் பிராணிகள் பூதங்கள் பேய்கள் கற்பனைக் கதைகள் கனவு உலகங்கள்தான் இக்குழந்தைகளின் உலகங்கள். ஆனால் இருக்கும்/ நிலவும் உலகம் (Existing world) எவ்வாறாய் இக்குழந்தைகளின் நிர்மல வாழ்வை அன்பு வாழ்வைக் கள்ளமற்ற வாழ்வைக் களங்கப்படுத்தி விடுகிறது!

களங்கப்பட்ட குழந்தைகளின் நிர்மல வானத்தைச் சுத்தப்படுத்துவதென்பது முழு வாழ்வையும், முழு உலகையும் சுத்தப்படுத்துவதுதான். குழந்தைகள் இல்லாது போயிருப்பின் இந்த உலகும் வாழ்வும் என்றோ வாழத் தகுதியற்றதாகிப் போயிருக்கும்.

அக்குழந்தைகளின் உலகை அழகியதாகக்க கட்டமைப்போம் அது எமது பிற போராட்டங்களோடு ஒன்றிணைந்தது என்பதைத் தவிர வேறென்ன இப்போதைக்குச் சொல்வது?
உலகின் சகல வர்க்க/ இன/ மத/ மொழிக் குழந்தைகளுக்கு நமது முத்தத்தைச் சேகரித்துக் கொள்வோம்.




www.tamilarangam.net

இல்லடா இண்டக்கி ஒரத்தன் அக்காவின்ற கையைப் புடிச்சு இழுத்தான். அப்பாவையும் அறைஞ்சி போட்டான். இதற்குப் பொறகு வாழ்ற அப்பாக்கள். அக்காக்கள் சந்தோஷமா இருக்கனும்டா. அதற்காக நாம உதிர்ந்து போனா என்ன மெழுகுவாத்திபோல.

ஓட்டமாவடி-அறபாத்

# எனக்குள் உதிர்ந்த அவன்



நீண்ட நாட்களுக்குப் பின் அவனை நான் சந்திக்க நேர்ந்தது. தீவிர அரசியலில் அவன் குதித்திருந்த காலம், அவனுடனான உறவுகள் அறுபடத் தொடங்கிற்று. ஆர்த்மார்த்தமாகப் பேசவோ, குசலம் விசாரித்து கைகுலுக்கிக் கொள்ளவோ இயலாமல் போயிற்று. சுழிக்காற்று மாதிரி சரேலென எங்கேயாயினும் தோன்றுவான். தோன்றிய மறுநிமிடமே மறைந்தும் விடுவான். "ஹலோ மச்சான் எப்படியடா இருக்கிறாய், உனக்கென்னடாப்பா செல்லப்பிள்ளை, உன்ற ஷகீலாவின்ற பாடென்ன இழுத்தடிக்காமல் தாலியைக் கட்டிப்போடு, நாங்க கொடுத்து வைக்கல்ல, அப்பநான் வாரன் மச்சான். எங்கட கூட்டாளிமார விசாரிச்சன் எண்டு சொல்லு."

இப்படித்தான் எந்த மூலையில் முட்டிக்கொண்டாலும், தமாசாக பேசுவான், இருந்தும் அவனுக்குள் இலேசான ஏக்கங்கள் மண்டிக் கிடக்கும். ரணங்களால் அவன் சூழப்பட்டிருப்பதாய் அந்தக் கண்களும் முகமும் இருண்டிருக்கும். முன்பென்றால் அவனுக்கும் எனக்கும் ரகசியம் என்று ஒன்றில்லாமல் இருந்தது. குளத்தோர பனிச்சமர நிழலில் உட்கார்ந்துகொண்டு மணிக்கணக்காய் பேசுவோம். பேசுவதற்கென்று அவனுக்கும் எனக்கும் நிறைய விஷயம் இருந்தது. வார்த்தைகளுக்கு "கமா" போட்டுவிட்டு, மறுநாளைக்கான எதிர்பார்ப்புடன் கலைந்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

செல்வோம், முடிவில் யோசித்துப் பார்க்கையில் அவன் காதலியும் என் காதலியும் மாறிமாறி எங்கள் நேரங்களைத் தின்றிருப்பார்கள்.

இன்று அவனை சந்தித்ததிலிருந்து நிறைய வித்தியாசமாய் உணர்ந்தேன். அவன் வாழ்க்கை பற்றிய தெளிவான தீர்மானத்துடன் பேசினான். நன்றாய் இளைத்திருந்தான். கருத்து மெல்லிதாய் உடம்பு வறண்டிருந்தது. தோளைத் தொடும் முடியும் அடர்ந்த தாடியுமாய் அவனைப்பார்க்கையில் - மனசுக்குள் ஈரம் கசிந்தது. குறுகுறுத்த அவன் விழிகளைப் பார்க்கையில் சிரித்தான். விரக்தியும் வேதனையுமாய் அது உலர்ந்து போயிற்று. "டேய் மகேஷ் யாருக்குடா இப்படி கஷ்றப்பர்றாய்?" ஆதங்கமாய் கேட்டேன். என் மக்களுக்காக மச்சான். அங்க சுதந்திரமாக வாழனும். அடக்குமுறைகள் இல்லாத சுத்தமான வாழ்க்கை. ஆனா எங்களின்ற கருத்துக்களை மதிக்காத தலைமைத்துவம் பற்றித்தான் கவலையா இருக்கு மச்சான், "என்னடா சொல்லுறாய்? என்னோட உசிரும் நாளைக்கோ இண்டைக்கோ எண்டுதான் ஊசலாடுது. மாற்றுக் கருத்துக்களை மதிக்கவேனும் மச்சான். நம் எதிரியா இருந்தாலும் சரி, இல்லாண்டா போரார்துல புண்ணியம் இல்ல. சிங்கள இனவாதிகள் எங்கடசனத்த நசுக்குறத போல, எங்கட ஆட்கள் மற்ற இனத்தவரான அப்பாவிகளையோ, மாற்று இயக்கத்தினரயோ நசுக்கினா இதில என்ன அர்த்தம் இருக்கு? உனக்கு விளங்கும் எண்டு நெனக்கன். சரி மச்சான் என்ட வீட்டுப்பக்கம் போனா அக்காவ கேட்டன் எண்டு சொல்லு - என்கரங்களை பிடித்துக் கொண்டான். விரல்கள் நடுங்கின. "அப்ப நான் போய்ட்டு வாரன் மச்சான்."

அவன் சென்றதின் பின்பும் சில கணங்கள் அவ்விடத்திலேயே உறைந்திருந்தேன். ஒரு கனவு போலவந்து மறைந்து விட்டான். நெஞ்சில் சுருக்கென்றது. நினைவுகள் அவனுடன் ஒட்டிக்கொண்டு சென்றன. அவனுடனான பால்ய காலங்கள் பளிச் பளிச்சென வெட்டி மறைந்தன.

வாக நேரிக்குளம் அலைகளால் நிரம்பி கரை முழக்க நுரையாய் கக்கியிருந்தது. விடியற் காலையில் தோணிகளைச் தள்ளிச் சென்றவர்கள் கரைக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர். அலைகளின் மடியில் தோணிகள் மிதந்துவரும் ஒய்யாரம் சுகமாய் இருந்தது. நனையா வெராட்டிகள் கரையொதுங்கி செத்துக் கிடந்தன. ஆக்காண்டி முட்டை தேடி கற்குவியலின் உள்ளே கைகளை நுழைப்பதும் எடுப்பதுமாய் அலைந்துகொண்டிருந்தான். குளத்து கட்டில் நெடுகவும் வளர்ந்திருந்த பனை மரங்களில் ஏறி நான் நொங்கு இறக்கிக் கொண்டிருந்தேன். முட்டைகள் அகப்படாத முசுறுக் கோபத்தில் அவன் வந்தான். நொங்கை குடித்து விட்டு கொக்கடிக்கப் போவம் என்பான். புனானை அணைக்கட்டை தாண்டி சோதயன் கல்லில் தங்கவரும் வெள்ளை நாரைக் கூட்டம். வன்னியனாரின் மாந்தோப்பை கடந்து செல்கையில் ஓர் ஆலமரம் தென்படும். மத்தியானத்தில் தனிவழிப் பயணம். அதுவும் இந்த ஆலமரத்தால் போகப்படாதென்ற எச்சரிக்கை ஊரில் இருந்தது.

"பைரவன் இருக்குதாம் "என்றேன்.

"பைரவன் என்னடா பைரவன், இண்டக்கி ஒருகை பாப்பம் வாவென். ஆலமரத்தாலதான் போவம். நெஞ்சு திக்கென்றது. நிறை வெய்யில் வேறு அடித்துக் கொண்டிருந்தது. பின்னால் திரும்பினேன் கொட்டார் மாமாவின் தோட்டத்தையும் தாண்டி வரும் - அலைகளின் மினுக்கம் கண்ணுக்குத் தெரிந்தது.

மகேஷிடன் உரசினாற் போல் அச்சத்தை காட்டிக் கொள்ளாமல் செல்கையில் "தடா" லென்றது. அவ்வளவுதான் அவனை விட்டுவிட்டு வரம்புகளில் விழுந்தடித்து ஓடித் திரும்பிப்பார்த்தேன். அவன் நின்ற இடத்திலே நின்று கொண்டு முழங்காலில் அடித்து குலுங்கிக் குலுங்கி சிரித்துக் கொண்டிருந்தான்.

"டேய் பயந்தாங் கொள்ளி குரங்குடா அது, பயப்பிடாம வா"என்றான். அசடுவழிய அவனுடன் ஒட்டிக்கொண்டு கொக்குகள் பிடித்து சமைத்து தின்றுவிட்டு, அவன் திரும்பும் போது, செக்கலாகி விடும். சிலநேரங்களில் என்வீட்டிலேயே தங்கி விடுவான்.


சின்ன வயசிலிருந்தே அவன் தைரியனாய் வளர்ந்துவிட்டான். எதற்கெடுத்தாலும் கேள்வி கேட்கும் சுபாவம் அவன் ரத்தத்தில் ஊறியிருந்தது. "அரப்படிச்சவன்" என்ற பெரியோர்களின் ஒதுக்கலில் அவன் வைராக்யம் குலைந்து விட்தாய் தெரியவில்லை. சிலநேரங்களில் "சேர்குட" பங்களாவின் உச்சியில் நின்று பேசிக்கொள்வோம். ரமீஸ் ஒரு நாளக்கெண்டாலும் நான் இயக்கத்திக்கு போவேன் ஒரு எதிரியெண்டாலும் என் கையால சாகனும்.

"டேய் ஏன்டா இப்படிச் சொல்கிறாய்?"

" இல்லடா இண்டக்கி ஒரத்தன் அக்காவின்ற கையைட் புடிச்சு இழுத்தான், அப்பாவையும் அறைஞ்சி போட்டான். இதற்குப் பொறகு வாழ்ற அப்பாக்கள், அக்காக்கள் சந்தோஷமா இருக்கனும்டா. அதற்காக நாம உதிர்ந்து போனா என்ன மெழுகுவர்த்திபோல".

நினைவுகள் தறிபட்டன. தலையைச் சிலுப்பிக்கொண்டேன். அன்று சொன்னதை மகேஷ் செயற்படுத்திவிட்டான் என்பதை நினைக்கும் போது, அவனைப் பற்றிய நினைவுகள் மிக உயர்ந்ததாய் எனக்குள் மலர்ந்தன. எரிமலைகளின் கொதிப்பினூடே புறப்பட்ட அவனின் கால்களின் திண்மையும், நெஞ்சுறுதியும் மனசுக்குள் அவன் பற்றிய நெடிய காதலை முளைப்பித்தன. அவனை சந்தித்த இரண்டொரு தினங்களின் பின் அவன் வீடு சென்றிருந்தேன். அவன் அக்காவின் பிள்ளைகள் முற்றத்தில் விளையாடிக்கொண்டிருந்தன. வெளியே நின்று "அக்கா" என்றேன்.

www.tamilarangam.net



"ஆரது தம்பி ரமீஸா வாங்க எங்கள பாக்க வேனுமென்டு இப்பவாகினும் நெனப்பு வந்திச்சா?"" வழக்கமாய் நான் போகும் போதெல்லாம் குறும்பாய் வரவேற்கும் பவளம் அக்கா.

"எங்கயக்கா நேரம் கிடைக்கிற, புள்ளயும் குட்டியுமா சோளிகூட ஆசதான் அப்படி சொல்லிப்பாக்க"

" ஏன் உங்கட அப்பாவிக்கும், அம்மாவிக்கும் விஷயத்த சொல்லி ஒரு கலியாணத்த கட்டவேண்டியது தானே. இப்படி வாய் ஊறித்திரியாம." இப்படித்தான் நானும் பவளம் அக்காவும் கலகலப்பாய் பேசிக் கொள்வோம். மகேஷின் அப்பா வெளி விறாந்தையில் சாக்குக் கட்டிலில் படுத்துக் கிடந்தா. மகேஷைப் பற்றித்தான் அதிகமான பிதற்றல் என்றாள் பவளம். திடீரென இரவில ஐயோ மகேஷ் வாடா என்று அரற்றார்.

அவனும்வந்து ஒருக்கா பாத்துட்டு போனான். அண்டக்கெல்லாம் சந்தோஷமா இருந்தார். பிறகு பழைய நெலமைக்கு திரும்பிட்டார். ஒரேபடுக்க.""

முந்தநாள் மகேசைக் கண்டதையும் அவனுடன் பேசியதையும் கூறினேன் சுவாரஸ்யமான கதையொன்றை கேட்கும் ரசனையுடன் கேட்டனர். அவன் பெயரைச் சொல்ல அத்தனை முகங்களும் பிரகாசித்தன. சாக்குக் கட்டிலில் உதிர்ந்து கிடந்த அவன் அப்பா கூட காதுகளை கூர்மையாக்கி அவன் பற்றிய செய்திகளை உள்வாங்கிக் கொண்டு சற்றுநேரத்தில் உறங்கிப் போனார்.

"என்ன செய்யிர ராசா உள்ளதே ஒரு ஆம்புளப் புள்ள அவன்ட விதி இப்பிடிபோச்சி, எந்த தெருவுல எப்படி அலையுறானோ சாப்பிர்றானோ நினைக்க நினைக்க என்ற பெத்த மனம் பத்தி எரியுது, இஞ்ச தம்பி மறுகா அவன கண்டா அம்மா வரச் சொன்னன் என்டு சொல்லிப்போடு, அவன் மகேஷும் நீயும் ஒண்டாத்தானே சுத்தினநீங்க - ஒன்னப் பாக்குரப்போ சந்தோஷமா இருக்கு அடிக்கடி இந்தப்பக்கம் வா. வாராசா தெம்பா இருக்கும். மகேஷின் அம்மாவின் ஒப்பாரி என் நெஞ்சுக்குள்ளும் நீட்டி நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டது. அரிவாளால் அறுப்பதான வலி. குண்டூசியால் குத்தி காயப்படுத்தியதான எரிவு. கனத்த மனத்துடன் விடைபெற்றேன்.

பின் வந்த நாட்களில் அவன் பற்றிய ஞாபகக் கோடுகள் அழிந்து பொயிற்று. வாழ்க்கைச் சாலையில் சில நிகழ்வுகள் தூர்ந்துபோவது போலன்றி ஒரு தற்காலிக மறதியாக - அவனின் - ஞாபகங்களும் கரையொதுங்கி இருந்தன. ஏதொ ஒன்றின் நிகழ்வில் இடரும் அவன் நினைவுகள், இடையிடையே எனக்குள் சிலிர்த்துக் கொள்ளும். மனசை விட்டும் துப்பரவாக அவனை துடைத்துவிட நீர்குமிழி போலாவது தினமும்

www.tamilarangam.net

அவன் எனக்குள் எழுந்து அமுங்கிப் போவான். சூரியன் சரிந்த ஒரு மாலை நேரம். வம்மியடி சந்திக்கு சைக்கிளை உழத்திக்கொண்டு போனேன். சனங்கள் எதையோ பரபரப்பாய் வாசித்துக்கொண்டிருந்தனர். ஒருவரை ஒருவர் தள்ளி முண்டியடித்து வாசிக்கத்துடிப்பதில் இருந்து அது முக்கியமானதாய் பட்டது. சைக்கிளை நிப்பாட்டி, நானும் வாசிக்க நிமிர்ந்தேன். மண்டை ஓட்டில் மாடுகள் மிதித்தன. மகேஷ் புன்னகைத்தவனாய் துப்பாக்கியுடன் நிற்க, கீழே வீரவணக்கத்துடன், அஞ்சலிக்கவிதையும் தடிப்பமாய் தெரிந்தது.

சாக்குக்கட்டிலில் படுத்துக்கிடக்கும் அவன் அப்பா முகம் காணத்துடிக்கும் அம்மா, பாசமுடன் எதிர்பார்க்கும் அக்கா ஒற்றைக் குயிலான நான் எல்லாமே குழம்பிக் கொண்டு முடிச்சுகள் விழுந்தன. "மாற்றுக் கருத்துக்களை மதிக்க வேணும் மச்சான"' மகேஷ் அன்று சொன்னது மனசில் தைத்தது. போஸ்டரை மீண்டும் நிமிர்ந்து பார்கிறேன் அவன் மெல்லமெல்ல எனக்குள் கரைந்துகொண்டிருந்தான்.

இலங்கை 95.7.23

ஒரு பூவின் உதிர்வு,
நிலவின் மறைவு....,
இதுபோன்ற சின்ன இழப்புகள்
ஏற்படுத்துகின்ற சலனத்தின் அளவாவது
உன் மரணத்தால் ஏற்படவில்லை.....
மிக மிகச் சாதாரணமானவனாய்த்தான்
எனக்கு... நீ
உன்னைப் பற்றி "அசாதாரண"
வார்த்தைகள் பரவிக்கொண்டிருந்தாலும்கூட!
எல்லோராலும் கேட்டுக்கொள்ளப்பட்ட நீ
யாரும் கேட்பாரற்று.....,
மரணித்து..... அல்லது தற்கொலையாகி.....
அல்லது கொல்லப்பட்டுக் கிடந்திருக்கிறாய்
ஆரவாரங்கள்கூட இப்படித்தான்
எதையாவது விலைக்கு அல்லது தலைக்கு
வாங்கிக்கொண்டு.....
வாழ்தலிலும்,
இறப்பிலும்
அரத்தமிழந்து போனாய்.....
ஓர் அப்பாவி மனிதனைப் போல்
செத்திருக்கலாம்...நோய்வாய்ப்பட்டு,
ஒரு குடிகாரனின் காரில் மோதுண்டு.....
அல்லது கொஞ்சம் மதிப்பாய்
"ஷெல"லடி பட்டு....
கொடுத்து வைக்காதவன் நீ.

உனக்கு ஒன்று சொல்லலாம்
"கலைஞன் வியபாரியாகும்போது
தோற்றுப் போவது மாத்திரமல்ல
உன்னைப்போல்
இறந்தும் போகிறான்.



(கே.எஸ்.ராஜா நினைவாக - 050994)

எம்.கே.எம்.ஷகீப்

www.tamilarangam.net



# வசந்த தோட்டம்

வசந்தத்துக்குரிய
அம்சம் பொருந்திய கால நாட்கள்
நான் மிகச்சிறுவனாயிருந்தபோது
அரண்மனையொத்தவீட்டிலிருந்து
ஒரு யன்னற்கம்பி வாயிற்கதலூடாக
தெருவுக்கு வந்தேன்.

4மணி வெய்யில் என்னில் பட
இங்கு நான்
நித்திரைத் துயரில் கொஞ்சம் கொஞ்சமாக மீள்கிறேன்.
இன்னமும் கொஞ்ச அசதியில் நான்
வேனில் தோட்டத்தில் கரயாம்பொடியள்
சாலை, ஒழுங்கைகள், வளவுகள் எல்லாம்
பட்டிகலைந்த மாடுகளைப் போல
பலசாதி விளையாட்டுகள் விளையாடுறாங்களாம்.
யாடு, சடுகுடு, கள்ளன்பொலிஸ்
சூரன்போர் ஆட்டத்திற்கு ஏற்ற ஒத்திகையும்
வீச்சுக்கார வலிய ஆண்களால்
அது எப்போதோ ஒரு மாரிக்கால மாலையில்
புல் சதசதக்க நடந்தது.

எனது கல்கிளம்பிய ஒழுங்கையிலிருந்து
வசந்த தோட்டம்
முருங்கைகள், பாவட்டம் காடுகள்
தேமா, கிணறு, அலரி மரங்கள்
ஆ அந்தா பாழ் மண்டபங்கள்
பொலனறுவைக் காலத்து
பழைய அரண்மனைகள் சிவாலயங்களைப் போல
இவ்விடங்களில் செம்மண் இடைவெளிகளுமிருக்கிறது.
புல்வெளி; சங்குப் புற்கள் ஆடும்
சாலைக்குயில்கள் கூவும்
செண்பகப்பறவைகள் மயிர்கொட்டிகளைத் தேடித்தாவும்
பசுமாடுகள் புல்மேயும்
.....அன்ரி கடுஞ்சாயம்போட்ட தேத்தண்ணிக்குக் கூப்பிட்டா -
தயான்ன்ன்ன்....

பிற்காலத்தில்
"கண் தெரியா இசைஞன்"* வாசித்தபோது
வந்தது வேனில் தோட்டம்
வெளியில் இப்போதுமிருக்கிறது
அங்கிப்போது
கழுதைக்கும் குதிரைக்கும் பிறந்த
கோவேறு கழுதை மேயவில்லை
பாலைவனமாகிவிட்டது; கொங்கீரீட் எழும்புகிறது
பஜூரோ ஒன்று புழுதி கிளப்பி புறப்படுகிறது.

*நட்சத்திரன் செவ்விந்தியன்*
*020595*

* *கண்தெரியா இசைஞன்: சோவியத் நாவலொன்று*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அப்பாவும் சைக்கிளும் நானும்

செயின் அறுந்து
வால்டியூப் உருகி
காற்றுப் போயிருந்த
சைக்கிலை
அப்பா
டேய் பெரியதம்பி!
இது இனி உனக்குத்தான்
என்றுவிட்டு
கனகலிங்கம் சுருட்டோடு
கிணத்தடிப் பக்கம்
போக

அம்மாவிடம்
காசு வேண்டி
பம்மியடியானின்
சைக்கில் கடைக்குப் போய்
பழைய செயின் எடுத்துப்
போட்டு,
புது வால்டியூப் போட்டு,
பெடலுக்கு சன்னம் வைத்து
மெயின் றோட், கோயிலடி
சுற்றி
ராஜனிடம் காட்டிவிட்டு
வீட்டவர
அப்பா
ஏன்டா இவ்வளவு நேரம் என்றார்.
(வழமைபோல)

புதுவருடத்தின் போது
கிடைத்த
கைமுழுத்தக் காசில்
பம்மியடியான் கடையில்
சைக்கிலை
கழுவிப் பூட்டி
ஜப்பான் பாட்ஸ் போட்டு
16மைல் சைக்கில் ஓடி
பள்ளிக்கூடம்
போய்வந்தபோது
அப்பா பார்த்துச் சிரித்தார்.

தம்பி சைக்கில் பழகக் கேட்டு
பழக்கி
அவன் விழுந்து
சைக்கில் மட்காட்
நெழிந்து
எங்களுக்குள்
சண்டை வந்தது.

அப்பாவை
சித்தாண்டி முருகன் கோயிலுக்கு
டபிள் ஏத்திக் கூட்டிக்கொண்டு
போன போது
தம்பி!
இது 1962இல்
150 ரூபாவுக்கு
பொன்னையாவிடம்
இருந்து வாங்கினது
இன்டைக்கு மட்டும்
ஒரு ஒட்டும் (வெல்டிங்)
ஓட்டேல்ல
கவனமாய் பாவிக்கோணும்
என்றபோது
அந்த
"றலி" சைக்கிலுக்கும்
எனக்கும்
நெருக்கம் கூடியது
போல் இருநத்து.

அப்பா 1980இல்
800 ரூபாய்க்கு
கறுப்புப் பெயின்ற் அடிப்பித்து,
புது றிம்,
மட்காட்,
றிங் பெல்,
றிம்முக்கு பூ
எல்லாம் வாங்கி
பூட்டியும் தந்தார்.

அடுத்த வருடம்
அப்பா
மாரடைப்பால்...
போனபோது
ஐயரிட்டயும்,
கடைக்கும்,
அதுக்கும், இதுக்கும்
ஓடித்திரிந்தது
அதிலதான்

தயா
சைக்கில் ரேஸ் ஓடக்
கேட்டு
குடுத்தபோது
முதல் 3 மைலுக்கு
முதலாவதாய்
வந்து
பிறகு
கடைசியாய் வந்தான்
காரணம்
என்ட சைக்கில் ஓடேல்லயாம்
(ஆடத் தெரியாதவனுக்கு
மேடை...)
ஆனால்
அடுத்த வருடம்
தம்பி ஓடி
மூன்றாவதாய்
வந்தான்.

16 வயதில்
□வயதுக்கோளாறு வந்தபோது
றோட்டுகள், ஒழுங்கைகள்
கோயில்கள், திருவிழாக்கள்
எல்லா இடத்துக்கும்
அந்த
சைக்கிலில்தான்
ஓடி ஓடி
அவளைப் பார்த்தது.

தங்கச்சிய
பள்ளிக்கூடம்
கூட்டிக்கொண்டுபோய்
கூட்டிக்கொண்டு வந்ததும்
83ம் ஆண்டு
சிங்களப் பெடியங்களோட

www.tamilarangam.net

பாடுமீன்.
150995

தயாவும், நானும்
மூதூர்வரை போய் வந்ததும்
அந்த சைக்கிலில தான்

புலி ஸ்டிக்கர் ஒட்டி
ஓடித் திரிந்ததை
அம்மா
கண்டு
பேசி
கிழித்து, எறிந்த
போது
அம்மாவுக்கும்
எனக்கும்
சண்டை வந்தது.

1985 இல்
சைக்கில பூட்டி வை
களவெடுக்கிறாங்களாம்
என்று
அம்மா சொன்னபோது
ஓம் என்று சொல்லி
பூட்ட மறந்து
காலையில்
ஊரெல்லாம தேடி
பொலிஸில் என்ட்றி போட்டு
நடந்து
வீட்ட வந்தபொழுது
கனத்துக் கிடந்தது
மனமும், காலும்.

அப்பா மன்னிப்பீங்களா?

முல்லை அமுதன்

# ஒரு கவிதை

அவனது மரணம்
தற்செயலாக நடந்து முடிந்தது.
நீயும்
நானும் எதிர்பார்த்திருக்கவில்லை.
எனிமேலும்
அசட்டையாக இருந்துவிடாதே.
இருளில் -
திரியும் மின்மினிப் பூச்சியுடனும்
எச்சரிக்கையாக இருந்துகொள்.
விடிந்து
இத்தனை நேரமாகியும்
அடையாளம் காணப்படாமலும்
கொலையா தற்கொலையா
என்று
முடிவு செய்யப்படாமலும்
பிணமாய் அவன்.....
நேற்று மாலை
நடந்த சுற்றிவளைப்பில்
கைது செய்யப்பட்டது
கண்ணால் பார்த்த உண்மை
இப்போது பிணமாய்...
எனவே -
மெதுவாக பகலை நேசிக்கப் பழகு,
இருளை விசாரித்து வை!
பயிற்சி
உனக்குச் சாத்தியமாகும்.
மரணம்
தன் தோல்விதழுவும்.

www.tamilarangam.net

# எமன் தேசத்திலிருந்து....

*சம்மாந்துறை ஏயெம்மே நிஸாம்*



அது
எல்லாத்திலுமிருக்கிறது.
சுடலையில் தூங்கிக்கொண்டிருக்கிறது.
என் விரல் துண்டுகளிலும்
நரம்புக் கால்வாய்களிலும்
எலும்பு மச்சைக்குள்ளும்
ஓடித் தெரிகிறது.
நாயின் மூக்குத் துவாரத்திலும்
அதில் ஊரும்
தெள்ளிலும்
தென்னந்தோப்பின்
இளநீர் குலைகளிலும்
ஆலமரத்தின் விழுதிலும்
ஆடிப்பாடித் தெரிந்து
என் பயந்தாங்கொள்ளி மனதை
பயங்காட்டி.....
சதையில்லாத ஒரு எலும்புக்கூட்டை
கண்முன்னே நிறுத்தி....
இதயத் தசையை உருக்கியது.

கடைக்காறன்
சவப்பெட்டி செய்தான்
என் கண்ணில் பட்டுத் தெறித்தது.
காதில் வந்து ஊதியது
தொட்டுத் தடவிப் பார்த்தது.
கடைசியில்
சொறிநாயோடு
சொந்தங் கொண்டாடியது.

அது என்னையும் புணரலாம்
சதைகள் முளைத்து
பேய்கள் கடித்துக்குதறி
என் காதலிக்கும்
சப்பக் கொடுக்கலாம்.

இந்த
கழிசறைக் கற்பனை
எருமையாய் வந்து
என்னைப் போட்டுத்
துவைத்தது.
புலியும் பூனையும்
டைனசோராய்
பிறந்து வந்து
நாம் வசிக்கும்
கிரகத்தையே
மாற்றிவிடுவதாய்
ஆன்மாவில்
இரத்தப்பல்லால் கீறியது.

நாளைய விடியலில்
வானத் துண்டுகள்
வெடித்துவந்து
பூமியில் முளைக்கலாம்...
பூமித் துகள்களும்
வானத்தில் தொங்கலாம்
நிலவு
கறுத்த ஆடையணிந்து
காதலின் கண்களில்
"மோனலிஸா"
ஓவியம் வரையலாம்
கிடங்குகளிலிருந்து
முளைத்தெழும்பிய
எலும்புத் துண்டுகளும்
துள்ளித்தெரிந்து
சத்தியாக்கிரகம் செய்து
நாளைமீதான
நம்பிக்கையை
நூலில் கட்டி
இதயத்தில் கட்டிப்போடலாம்
ஆனால்...
பிரபஞ்சமே சுழன்றுவந்தாலும்
என் உயிரை மட்டும்
காத்துக்கொள்ள முடியுமா?

www.tamilarangam.net

இலங்கைத் தேசிய இனப்பிரச்சனையின் தீர்வின் சாத்தியப்பாடுகளும் தடைகளும்: பேர்கன் கருத்தரங்கு பற்றி சில அவதானிப்புகளும் விமர்சனங்களும்

சமுத்திரன்

# தீர்வும் தடைகளும்




பெப்ரவரி 26ம் திகதி பேர்கன் கிறிஸ்டியன் மிக்கெல்சன் நிலையத்தில் இலங்கையின் தேசிய இனப்பிரச்சனை பற்றி ஒரு முழுநாள் கருத்தரங்கு நடைபெற்றது. இதில் கொழும்பு பல்கலைக்கழகக் கல்விப் பகுதியின் தலைவரான போராசிரியர் எஸ்.சந்திரசேகரன், யு.என்.பி. பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி சரத் அமுனுகம, விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் ஆலோசகர் திரு.ருத்திரகுமாரன், சர்வோதய நிறுவனத்தைச் சார்ந்தவரும், அரசியல் எழுத்தாளருமான திரு.ஜெகான் பெரேரா, நோர்வே உதவி வெளிநாட்டமைச்சர் யான் ஈகலாண்ட் (Jan Egeland), நோர்வேயின் வலதுசாரிக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி எர்ணா சூல்பெர்க் (Erna solberg) ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஏற்கனவே இந்தக் கருத்தரங்கம் பற்றிய செய்தி இலங்கையிலும் நோர்வேயிலும் ஒரு தப்பபிப்பிராயத்தை ஏற்படுத்தியிருந்தது. அதாவது, இலங்கைப் பிரச்சனையில் நோர்வே மத்தியஸ்தம் வகிக்க அல்லது அரசு - விடுதலைப் புலிகள் இடையிலான புதிய பேச்சுவார்த்தைக்கான நிலைமைகளை உருவாக்கும் நோக்கில் இந்தக் கருத்தரங்கம் ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது எனும் ஒரு வதந்தியாகும். இந்தக் கருத்தரங்கிற்குப் பின்னால் அத்தகைய நோக்கமெதுவுமில்லை எனத் தலைமை வகித்த குன்னார் சோர்போ (Gunnar M.Sørbø) ஆரம்பத்திலேயே தெளிவாக்கினார். அப்படியென்றால் இந்த நிகழ்ச்சியின் பிரதான நோக்கம்தான் என்ன?

எனக்குத் தெரிந்தவரை இதன் முக்கிய நோக்கம் இன்றைய இலங்கைச் சூழலில் தேசிய இனப் பிரச்சனையையும் அதன் தீர்வுக்கான சாத்தியப்பாடுகளையும் இரு பக்கத்தவர்களும் எப்படிக் கிரகிக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ளும் ஒரு ஆரம்ப அப்பியாசம்தான் பேர்கன் கருத்தரங்கம். அப்படியென்றால் அரசாங்கத்தின் சார்பில் ஏன் ஒரு பிரதிநிதியும் பங்குபற்றவில்லை என்ற கேள்வி எழுகிறது. அரசாங்கம் பேர்கனுக்கு அழைக்கப்படவில்லை என்றும், அது கருத்தரங்கு அமைப்பாளர் வேண்டுமென்றே செய்த ஒன்றெனும் கருத்தில் ஐலண்ட பத்திரிகையில் அதன் ஒஸ்லோ நிருபர் சிசிர விஜயசிங்ஹ எழுதியிருந்தார். முன்பக்க முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட இந்தச் செய்தியின் விளைவோ என்னவோ கொழும்பில் நோர்வேஜிய ஸ்தானிகராலயத்துக்கு முன்னால் சில பௌத்த பிக்குகளும் பொது சிங்களவரும் அரசாங்கம் அழைக்கப்படாமைக்குத் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். ஆனால் உண்மையில் அரசாங்கத்தை வேண்டுமென்றே கருத்தரங்கு ஒழுங்காளர்கள் தவிர்த்திருக்கிறார்கள் என்பதை நான் நம்பவில்லை. இன்றைய சூழலில் நோர்வே போன்ற நாட்டில் விடுதலைப் புலிகளுடன் ஒரே மேடையில் கருத்தரங்கில் பங்குபற்றுவதை அரசினர் விரும்பாதிருந்திருக்கலாம். அத்தகைய சமிக்ஞையை அரசாங்கம் நோர்வே கருத்தரங்கு அமைப்பாளர்களுக்குக் கொடுத்திருக்கலாம். இது எனது ஊகம் மட்டுமே.

ஆயினும் கருத்தரங்கின் தலைப்புகளும் பொதுவான போக்கும் தீர்வின் சாத்தியப்பாடுகளுக்கும், தடைகளுக்கும் பிரதான முக்கியத்துவம் கொடுத்தன என்றே கருதுகிறேன்.

www.tamilarangam.net

## II

சந்திரசேகரனின் கட்டுரை இன்றைய அரசியல் நிலைமையையும் உள்நாட்டு யுத்தத்தின் விளைவுகளையும் விரிவாக விவரித்ததுடன் அரசின் தீர்வுத் திட்டம் பற்றிய அபிப்பிராய பேதங்களையும் சுட்டிக் காட்டியது. வடகிழக்கு நிலைமைகளை மட்டுமன்றி கொழும்பில் தமிழர்கள் பட்டுவரும் அவதிகளையும் மலையகத் தமிழரின் பிரச்சனைகளையும் சந்திரசேகரன் விவரித்தார். அவரது கட்டுரையின் பிரதி ஒன்றை எனக்குத் தந்துதவியதால் அவருடைய பேச்சில் நேரமின்மை காரணமாகத் தவிர்க்கப்பட்ட தகவல்களையும் என்னால் அறிய முடிந்தது. சந்திரசேகரனின் அடிப்படை நிலைப்பாடு வடகிழக்குத் தமிழருக்குத் திருப்தி தரக்கூடிய அதிகாரப் பகிர்வுடன் மற்றைய பகுதிகளில் (குறிப்பாகக் கொழும்பு, மலையகத்தில்) வாழும் தமிழர்களுக்குச் சிங்கள மக்களுடன் சமமாக வாழும் உரிமையும் எனச் சுருக்கிக் கூறலாம். அரசின் தீர்வுத் திட்டத்தை எதிர்க்கும் தீவிர சிங்கள இனவாதிகள் இலங்கையில் இனப்பிரச்சனை என்று ஒன்று கிடையாது, ஆகவே அதிகாரப் பகிர்வு தேவையில்லை என்றும், சமாதானம் என்பது "தமிழ்ப் பயங்கரவாதத்தை" இராணுவ ரீதியில் அழிப்பதனால் மட்டுமே ஏற்பட முடியும் என்றும் செய்யும் பிரச்சாரத்தினை விமர்சித்த சந்திரசேகரன், அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே பரஸ்பர நம்பிக்கை ஏற்பட்டு சுமுகமான முடிவிற்கு வராதவரை அதிகாரப் பகிர்வு நிஜமாக முடியாது என்றும் கூறினார். இலங்கை இராணுவத்தினதும் விடுதலைப் புலிகளதும் மனித உரிமை மீறல்கள் பற்றியும் குறிப்பிட்ட அவர், வெளிநாட்டு உதவியின்றித் தீர்வும் சமாதானமும் சாத்தியமில்லை என்றார். சந்திரசேகரனின் கட்டுரை இலங்கையை ஒரு பல்லின சமூகமாகப் பார்க்கும் அதேவேளை முஸ்லிம்களின் நிலைமை பற்றி எதுவும் குறிப்பிடாதிருப்பது ஆச்சரியத்துக்குரியது. அவரது கட்டுரையின் சிறப்பு தேசிய இனப் பிரச்சனை வடகிழக்குத் தமிழர்களினது மட்டுமல்ல, மலையகத் தமிழர்களதும் மற்றும் தெற்கில் வாழும் தமிழர்களதும் உரிமைகள் பற்றியதெனும் பரந்த பார்வையெனில் முஸ்லிம்களை அவர் மறந்துவிட்டது அதன் குறைபாடெனலாம். விடுதலைப் புலிகளின் பங்குபற்றல் இல்லாத எந்தத் தீர்வு முயற்சியும் நிலைபெறக்கூடிய தீர்வுக்கும் சமாதானத்துக்கும் வழிவகுக்காது என்பதும் சந்திரசேகரனின் தெளிவான நிலைப்பாடாகும். அத்துடன் வடகிழக்குத் தமிழரின் தனிநாட்டுக் கோரிக்கை தொடர்ச்சியாக சிங்கள இனவாத அரசாங்கங்கள் தமிழர் மீது நடாத்திய ஒடுக்குமுறையின் விளைவாகையால் இந்த ஒடுக்குமுறை அகற்றப்பட்டு நியாயமான அதிகாரப் பகிர்வு நடைமுறைப் படுத்தப்பட்டால் தனிநாட்டுக் கோரிக்கைக்கு ஒரு மாற்றுத் தீர்வு கிடைத்துவிடும் என்பதும் அவருடைய கருத்தாகும். இதுவே அவர் தனிநாட்டுக் கோரிக்கையே இன்றைய கொடிய நிலைமைகளுக்குக் காரணமெனப் பிரச்சாரம் செய்யும் சிங்கள இனவாதிகளுக்குக் கொடுக்கும் பதிலுமெனலாம். ஆகவே வெளிப்படையாக வடகிழக்குத் தமிழரின் தேசியத்துவ அந்தஸ்து பற்றி அவர் குறிப்பிடாவிட்டாலும் அத்தகைய ஒரு எடுகோள் அவருடைய அணுகுமுறையில் உறைந்துள்ளது என்றே கருதுகிறேன்.

## III

அதிகாரப் பகிர்வு பற்றிப் பேசிய சரத் அமுனுகம வட - கிழக்கு இணைப்பு பற்றிய தமிழ்க் கட்சிகளின் திடமான நிலைப்பாடு பற்றிக் குறிப்பிட்ட அதேவேளை தனது கட்சியின் நிலைப்பாடு பற்றிப் பிரஸ்தாபிக்கவில்லை. மத்திய அரசு மட்டத்தில் பல பிரச்சனைகள் தீர்த்து வைக்கப்பட்டதாகவும் - (இதற்கு உதாரணமாகப் பிரஜா உரிமைப் பிரச்சனை, பல்கலைக்கழக அனுமதிப் பிரச்சனை ஆகியவற்றைக் குறிப்பிட்டார்) பிரதேச மட்டப் பிரச்சனைகளே இப்போ அதிகாரப் பகிர்வுக்கூடாகத் தீர்த்து வைக்கப்பட வேண்டியுள்ளன என்றும் கூறினார். ஆனால் இங்கும்கூட அவரது கட்சியின் நழுவல் போக்கினையே அமுனுகம வெளிப்படுத்தினார். இலங்கையை ஒரு ஒற்றையாட்சி அமைப்பாகப் பிரகடனப் படுத்தும் இலங்கை யாப்பின் இரண்டாம் சரத்தை மாற்றியமைக்க முற்படும் இன்றைய அரசாங்கம் முன்வைத்துள்ள தீர்வுத் திட்டம் பற்றி அவரது தனிப்பட்ட கருத்தைக்கூட வெளிப்படுத்த விரும்பாத அமுனுகம தனது கட்சி இதுபற்றி ஆராய்கிறது எனக்கூறி அதிகாரப் பகிர்வின் ஒரு பிரதான அம்சம் பற்றி எதையுமே கூறுவதைச் சாதுரியமாகத் தவிர்த்துக் கொண்டார்.

இன்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் முன்வைத்துள்ள தீர்வுத் திட்டத்தின் அதிமுக்கிய அம்சம், அது யாப்பின் ஒற்றை ஆட்சித் தன்மையை மாற்றி இலங்கையை ஒரு ஒன்றியமாகச் சீர்திருத்த முற்படுவதே என அமுனுகமவிற்கு முன்னர் பேசிய ஜெகான் பெரேரா வாதிட்டார். இந்த மாற்றம் சாத்தியமானால் அதிகாரப் பகிர்வின் பிரதான யாப்பு ரீதியான தடை அகற்றப்படும். அதேபோன்று வேறு சில முக்கிய விடயங்களையும் ஜெகான் பெரேரா தெளிவாக முன்வைத்தார். அவற்றையும் இங்கு குறிப்பிடுதல் தகும்.

1. பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் விடுதலைப் புலிகளை ஒதுக்காது அவர்களுடன் மீண்டும் பேச்சுவார்த்தைக்குப் போகக்கூடிய ஒரு அரசியற் திட்டத்துடன் செயற்பட வேண்டும்.

2. யுத்தத்தின் தீவிரத்தைக் குறைக்கவும் மனிதாபிமானத் தன்மையை அதிகரிக்கவும் யாழ்ப்பாணப் பகுதியில் சாத்தியமான ஒரு சிவில் நிர்வாகம் இயங்கும் நிலைமைகளை உருவாக்கவும் வேண்டும். இதற்கு சர்வதேச உதவியைப் பெறத் தயங்கக்கூடாது.

3. தென்னிலங்கையின் வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் சிங்கள இனவாதப் பிரசாரத்தில் ஈடுபடுவதும் கொழும்புத் தமிழரின் பிரச்சனையாக வடகிழக்கு யுத்தத்தினால் பொதுமக்கள் படும் அவஸ்தைகள் பற்றிச் சரியான

www.tamilarangam.net

தகவல்களைத் தராமலும் இருப்பது சமாதானத்திற்கும் தீர்வுக்கும் பாரிய கெடுதல்களைச் செய்கின்றன.

4. வடகிழக்கிற்கான அதிகாரப் பகிர்வு அரசாங்கத்தின் தீர்வுத் திட்டம் குறிப்பிடும் மற்றைய பிரதேசங்களுக்குக் கிடைக்கக்கூடிய அதிகாரப் பங்கினையும்விட, வேறு விதமான சில விசேட அம்சங்களைக் கொண்டிருக்க வேண்டும். இத்தகைய அசமச்சீரான அதிகாரப் பகிர்வு (குஙகூயயஇஉஏற சஇகஓபஎஉஏஒஜ) வடகிழக்கு மக்களின் இனரீதியான விசேட பிரச்சனைகளை மனதிற் கொண்டு வகுக்கப்படுவதற்கூடாகவே அவர்களின் நம்பிக்கையையும் ஆதரவையும் பெற முடியும்.

அமுனுகம போலல்லாது ஜெகான் பெரேரா அரசியல் ரீதியில் தெளிவான நிலைப்பாட்டினை வெளிப்படுத்தினார். கருத்தரங்கின் பின்னர் அவருடன் உரையாடியபோது இன்னொரு விடயத்தையும் குறிப்பிட்டார். விடுதலைப்புலிகளின் பேச்சாளரான ருத்திரகுமாரன் தமிழர்கள் ஒரு சிறுபான்மை இனமல்ல, அவர்கள் ஒரு தேசியம் எனத் திடமாக முன்வைத்த கருத்தைக் கேட்டபின் வடகிழக்குத் தமிழர்கள் தம்மைப் பற்றிக் கொண்டிருக்கும் சுயகருத்து தாம் சிங்கள மக்களைப் போன்று ஒரு தேசியம் என்பதைத் தான் புரிந்துகொண்டதாகவும் கூறினார்.

ருத்திரகுமாரனின் உரை விடுதலைப் புலிகளது நிலைப்பாட்டை விளக்கியது. அவரது பாணி சமரசம் எதையும் ஏற்காத தன்மையையும் வழமையான தமிழ் இனத் தேசியவாதப் போக்கையும் வெளிப்படுத்தியது. ஆயினும் பின்னர் அசமச்சீரான சமஷ்டி முறையிலமைந்த அதிகாரப் பகிர்வு பற்றியும் பல கருத்துகளை விடுதலைப புலிகளது பிரதிநிதி முன்வைத்தார். அவரது உரை இலங்கையில் சமாதானமும் தீர்வும் கிடைப்பது அவ்வளவு சுலபமில்லை என்ற அபிப்பிராயத்தை ஏற்படுத்திய அதேவேளை விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய அதிகாரப் பகிர்வுத் திட்டம் எத்தகைய தன்மைகளைக் கொண்டிருக்க வேண்டும் என்பதையும் புலப்படுத்தியது. வடகிழக்குத் தமிழர் ஒரு தேசியம் என்பதை உறுதிப்படுத்தத் தகுந்த வகையிலான சமஷ்டி முறை ஒன்றினை விடுதலைப் புலிகளால் ஏற்றுக்கொள்ள முடியும். இதுவே அவர்கள் தனிநாட்டுக் கோரிக்கைக்கு மாற்றாக ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வு. இத்தகைய அடிப்படையில் அவர்கள் பேச்சுவார்த்தைக்குச் சம்மதிக்கலாம்.

அதிகாரப் பகிர்வே தீர்வுக்கு வழி என்ற கருத்து இப்போது பல மட்டங்களில் அங்கீகரிக்கப்படும் அதேவேளை அதற்கு எதிர்ப்பும் பல மட்டங்களில் உண்டென்பதும் உண்மை. இங்கு விடுதலைப் புலிகளின் தமிழ்த் தேசியவாதத்தையும் அவர்களின் அரசியல் நடைமுறையையும் விமர்சித்தலும் அவசியம் என்றே கருதுகிறேன். சென்ற வருடம் விடுதலைப் புலிகள் அமைப்பு அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகளில் இருந்து விலகியதும் யுத்தநிறுத்த உடன்படிக்கையை உடைத்து யுத்தத்தை ஆரம்பித்ததும் உலகறிந்தது. இந்த முடிவு ஏற்பட்டதற்கு இரு பக்கங்களிலும் இருந்த குறைபாடுகளும் காரணம். ஜனாதிபதி உறுதியளித்தபடி பொருளாதாரத் தடை நீக்கம் அமுல் நடத்தப்படவில்லை என்பதும் பேச்சுவார்த்தையில் உயர்மட்ட அரசாங்க அரசியல்வாதிகள் பங்குபற்றவில்லை என்பதும் உண்மை. இக்காரணங்களால் பேச்சுவார்த்தையிலிருந்து விடுதலைப் புலிகள் விலகிக்கொள்ள எடுத்த முடிவில் நியாயமிருக்கலாம். ஆனால் ஏப்ரல் 19ம் திகதி யுத்த நிறுத்தத்தைப் புலிகள் ஒருதலைப்பட்சமாக முறித்தது மாபெரும் அரசியற் தவறென்பதே எனது கருத்து. யுத்தத்தை மீண்டும் தொடக்கிவைத்தது விடுதலைப் புலிகள் எனும் அபிப்பிராயம் சர்வதேச ரீதியில் மிகவும் பலமாகி உள்ளதையும் இங்கு மறந்துவிடக்கூடாது. இலங்கைக்குள்ளேயும் யுத்தநிறுத்த இடைக்காலத்தில் விடுதலைப்புலிகள் தென்பகுதிச் சிங்கள மக்களுடன் ஜனநாயக மற்றும் இடதுசாரி அமைப்புகளுடன் நல்லுறவை உருவாக்க முயற்சிக்காததும் அவர்களின் அரசியற் தவறெனக் கருதுகிறேன். மீண்டும் ஆரம்பித்த யுத்தம் தமிழ் மக்களின் அவலங்களை சொல்லொணா நிலைக்குத் தள்ளிய அதேவேளை விடுதலைப் புலிகளின் அரசியல் தத்துவம் பற்றியும் பல கேள்விகளைக் கிளப்பியுள்ளது.

இலங்கையிலும் வெளிநாடுகளிலும் விடுதலைப் புலிகள் அரசியல் ரீதியில் முன்னெப்போதையும்விடத் தனிமைப்படுத்தப்பட்டிருப்பது ஏன் என்ற கேள்வி எழுவது நியாயமானதே. இதற்கு விடுதலைப் புலிகள் இலங்கை அரசாங்கத்தையோ அல்லது வேறு அமைப்புகளையோ காரணம் காட்ட முற்பட்டால் அதை ஒரு பூரண விளக்கமாக ஏற்க முடியாது. இதற்கான பிரதான விளக்கத்தை, இந்தப் பிரச்சனையில் அக்கறை உடையோர் விடுதலைப் புலிகளின்

ருத்திரகுமாரனின் உரை விடுதலைப் புலிகளது நிலைப்பாட்டை விளக்கியது. அவரது பாணி சமரசம் எதையும் ஏற்காத தன்மையையும் வழமையான தமிழ் இனத் தேசியவாதப் போக்கையும் வெளிப்படுத்தியது. ஆயினும் பின்னர் அசமச்சீரான சமஷ்டி முறையிலமைந்த அதிகாரப் பகிர்வு பற்றியும் பல கருத்துகளை விடுதலைப புலிகளது பிரதிநிதி முன்வைத்தார். அவரது உரை இலங்கையில் சமாதானமும் தீர்வும் கிடைப்பது அவ்வளவு சுலபமில்லை என்ற அபிப்பிராயத்தை ஏற்படுத்திய அதேவேளை விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய அதிகாரப் பகிர்வுத் திட்டம் எத்தகைய தன்மைகளைக் கொண்டிருக்க வேண்டும் என்பதையும் புலப்படுத்தியது.

www.tamilarangam.net

அரசியல் கொள்கையிலும் நடைமுறையிலுமே தேடவேண்டும். இதேபோன்று வடகிழக்கில் தமிழ் - முஸ்லிம் குரோதத் தன்மையின் காரணங்களையும் தேடவேண்டும். இந்தப் பிரச்சனை பற்றிய நியாயமான ஜனநாயக ரீதியான நிலைப்பாடில்லாமல் வடகிழக்கு இணைப்பு தமிழ் பேசும் மக்களின் பிரதேச ரீதியான தனித்துவம் போன்ற அடிப்படைப் பிரச்சனையைத் தீர்க்க முடியும் என நான் கருதவில்லை. இங்கு நாம் நேரடியாக முகம் கொடுக்க வேண்டிய ஒரு அடிப்படைக் கேள்வி இன்று மேலாட்சி செலுத்தும் தமிழ் இனத் தேசியவாதம் பற்றியதாகும்.

தமிழ்த் தேசியம் அரசியல் அதிகார அமைப்புக்களிலிருந்து சிங்கள ஆட்சியினரால் வெளிவாரிப் படுத்தப்பட்டதாலேயே இன்றைய பிரச்சனை உருவாகியது எனக் கூறினார் ருத்திரகுமாரன். உண்மை. ஆனால் அந்தத் தமிழ்த் தேசியத்தின் சார்பில் அவரது இயக்கம் முஸ்லிம்களை கருத்தமைவு ரீதியிலும் பௌதீக ரீதியிலும் வெளிவாரிப் படுத்தியுள்ளது. முஸ்லிம்கள் ஒரு தறிப்பட்ட சமூகம் எனக்கூறும் அவர் வடகிழக்கில் சமத்துவமான தமிழ் - முஸ்லிம் உறவுக்கு எதுவித அடிப்படையையும் உத்தரவாதத்தையும் முன்வைக்கவில்லை. எனது அபிப்பிராயத்தில் இது ஒரு சாதாரண அரசியல் பிரச்சனை அல்ல. இங்குதான் தமிழ் தேசியவாதத்தின் ஒருமுனைவாத இனவாதத் தன்மையைக் காண்கிறோம். 1950களில் இருந்து உருப்பெற்ற இலங்கைத் தமிழ் இனத் தேசியவாதத்தின் ஒரு துரதிர்ஷடவசமான பரிணாமத் தன்மை என்னவெனில் அது தொடர்ச்சியாகக் குறுகிய தமிழ் இனத்துவ மையவாதத்தை உள்வாரிப் படுத்தியதாகும். இது தமிழைப் பேசி தமிழர்களைப் போலவே வடகிழக்கை வாழிடமாகக் கொண்டிருந்த முஸ்லிம்களை வெளிவாரிப்படுத்தி அவர்கள் மத்தியிலிருந்த வகுப்புவாதப் போக்குகளைப் பலப்படுத்த உதவியது. ஆயுதப் போராட்டக் காலகட்டத்தில் தமிழ்த் தேசியவாதம் அதற்கு வித்திட்ட பழைய இனத்துவ மையவாதத்தை மேலும் பலப்படுத்தும் வகையில் பரிணாமம் பெற்றது. தொடர்ந்து வந்த தமிழ் - முஸ்லிம் குரோதங்கள் வடகிழக்கில் இரு சமூகத்தவரின் கூட்டு நலன்களுக்கும் பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தியுள்ளன. இப்போது தமிழர்களும் முஸ்லிம்களும் வகுப்புவாத மயப்படுத்தப்பட்ட சமூகங்கள் ஆகிவிட்டனர். வடகிழக்குத் தமிழர்கள் தமது தேசிய தனித்துவத்தை இறுகிய இனத்துவ மையவாதத்திலிருந்து விடுவித்து முஸ்லிம்களுடன் சமத்துவ சகசீவனம் எனும் கொள்கை அடிப்படையில் வாழ உதவக்கூடிய ஒரு முன்னோக்கிய தனித்துவத்தைத் தேடவேண்டும். தமிழரும் முஸ்லிம்களும் கலந்து வாழும் பகுதிகளில் இத்தகைய ஒரு ஏற்பாடின்றித் தமிழரின் தேசியத்துவம் பற்றி விடுதலைப் புலிகளோ மற்றைய அமைப்புகளோ பேசுவது பயன்தராது என்பதே எனது கருத்து.

அதேபோன்று இலங்கையின் மற்றைய பகுதிகளில் வாழும் தமிழ் பேசும் மக்களின் உரிமைகள் பற்றியும் கவனம் செலுத்த வேண்டும். இத்தகைய ஒரு பரந்த அரசியல் பார்வையின் உதவியுடன் ஈழத் தமிழரின் தேசியத்துவம் மீள்வியாக்கியானம் செய்யப்பட வேண்டும். தமிழரின் அரசியற் பார்வையை மழுங்கவைக்கும் குறுகிய இனத்துவ மையவாதத்திலிருந்து விடுபடுவதும் ஒரு முன்னோக்கிய தனித்துவத்தைத் தேடுவது தமிழரின் அரசியல் கலாச்சார முன்னேற்றத்திற் இன்றியமையாதவை என்பது எனது தாழ்மையான கருத்து இவை பற்றிய விவாதங்கள் தமிழ் பேசும் சமூகத்தில் இடம்பெ வேண்டும்.

இங்கு குறுகிய தமிழ் இனத் தேசியவாதம் பற்றி விமர்சனத்தை முன்வைப்பது அவசியமாயிற்று. போர்க கருத்தரங்கின் ஒரு பொருளாக இது அமையவில்லை. ஆயினு தமிழர் மத்தியில் இன்று முக்கியத்துவம் பெறவேண்டிய ஒ விடயம் என்பதால் அதை இங்கு குறிப்பிட்டேன். சிங்க இனவாதத்தின் பிரதிபிம்பம் போல அமைந்துவிட்ட தமி இனவாதத்தை விமர்சித்து நிராகரித்து ஒரு மாற் தனித்துவத்தையும் அரசியல் கலாச்சாரத்தையும் தேடுவது தமிழரின் கடமை. இதைத் தட்டிக் கழிப்பது பெரிய அரசிய தவறென்பதை நாம் சுட்டிக் காட்டத் தவறக்கூடாது.

## IV

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி முன்வைத்துள்ள தீர்வுத் திட்டத்தின் ஒரு பிரதான குறைபாடு வடகிழக்கு இணைப்புப் பற்றியோ அரசியல் பகிர்வின் பிரதேச வரையறை பற்றியோ எதுவித தெளிவும் இல்லாமை. வடகிழக்கு தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய வாழிடத்தை உள்ளடக்குகிறது என்பதை அங்கீகரிக்கும் வகையில் பிரதேசவரையறை இடம்பெறுதல் அதிகாரப் பகிர்வு தேசிய இனப் பிரச்சனையின் தீர்வாக அமைவதற்கு அவசியம்.

வடகிழக்கு தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாகவும் பல சந்ததிகளாகவும் வாழ்ந்து வரும் பிரதேசம் என்பதை பண்டாரநாயகா - செல்வநாயகம் ஒப்பந்தத்திலிருந்து இந்திய இலங்கை ஒப்பந்தம் வரை அங்கீகரித்துள்ளன. இன்றும் வடகிழக்குப் பிரச்சனையாலேயே அதிகாரப் பரவலாக்கல் திட்டமும் இலங்கை யாப்பினைத் திருத்தும் அவசியமும் பிறந்தன. இந்த யதார்த்தத்தை அரசாங்கம் தயக்கமின்றி ஏற்றுக்கொண்டு எதிர்நோக்க வேண்டும். அதேபோன்று யு.என்.பி.யும் ஏற்கவேண்டும். கடந்த காலத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், யு.என்.பி. ஆகிய இரு கட்சிகளின் தலைமைகளும் இதை ஏற்க முடிந்தால் இப்போது ஏற்றுக்கொள்வதற்கு என்ன தடை? சிறுபான்மையினரான தீவிர சிங்கள இனவாதிகளுக்கு அவ்வளவு தூரம் விட்டுக்கொடுக்க முற்பட்டால் இலங்கை தேசிய இனப்பிரச்சனை தீர்வின்றித் தொடரும்.

போர்கன் கருத்தரங்கில் இந்த விடயங்களை அலசி ஆராயுமளவிற்கு நேரம் இருக்கவில்லை. நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் இந்தக் கருத்தரங்கம் ஒரு ஆரம்ப முயற்சி. அந்த வகையில் அது பயனுள்ளது. ஆனால் ஒரு கருத்தரங்குடன் நின்றுவிடாது இந்த முயற்சியைத் தொடருதல் இலங்கையில் சமாதானத்திற்கும் தீர்விற்கும் உதவும் என நம்பலாம்.

**090396.**

www.tamilarangam.net

# பர்வதங்களும் பாதாளங்களும்

**பொ. கருணாகரமூர்த்தி**
பெர்லின்



துளசிக்கு சூழலில் நடக்கும் அனர்த்தங்களைட்பார்க்கும்போது நிமிடமும் விச்ராந்தியாக இருக்க முடியவில்லை.மனம் அலைக்கழிந்தது.

இவை என்ன இயற்கையின் விகாரங்களா, இல்லை மானிடம் இன்னும் தன் விலங்குச் சுபாவங்களில் இருந்தும் பூரணமாக விடுபடவில்லையா' என்பது புரியாமல் இருந்தது.

நேற்றைய சம்பவத்தின் பின்னர் சாப்பிடக்கூட மனமில்லாமல் இருந்தாள்.அவர்கள் வீடு இருக்கும் றோட்டுக்கு இரண்டு றோட்டுத் தள்ளியே சம்பவம் நடை பெற்றிருந்தும் பெர்லின் மாலைத்தினசரியில் பெரிய பெரிய புகைப்படங்களுடன் செய்தி வந்த பின்னால்தான் அவளுக்கு விடயமே தெரியவந்தது!

ஓ..... நேற்று அம்புலன்ஸ் வண்டிகள் கூவிக்கொண்டு ஒன்றின்பின் ஒன்றாக விரைந்தது இதற்காகத்தானா? துளசிக்கு பத்திரிகைப் போட்டோவில் கனிந்து புன்னகைக்கும் பதினாலு வயது நிறையாத அந்த அழகிய அரபு மலர், அவள் டாயிலெட்டில் குந்தினாலும் கட்டிலில் சாய்ந்தாலும் முன்னால் வந்து அதே மாதிரி புன்னகைத்தாள்.

உருளைக்கிழங்கு சிப்ஸ் இம்பிஸிலும், பழங்கள் காய்கறிக் கடையிலும், பள்ளி செல்லும் பாதையிலும் பூத்து நிற்கும் வசந்த மலர்களில் ஒன்றாக இந்த ஆயிஸாவையும் அவள் கண்டிருக்கலாம். உயிர் கொடுத்த தந்தையாலே உயிர் எடுபடும் கொடிய பிராப்தியுடையவள்' என்று எவர்தான் அறிந்திருக்கமுடியும்?

வ்"திநடைபாதையில் தளத்திற்குக் கற்கள் அடுக்கிக் கொண்டிருந்த மனிதன் பத்திரிகையில் ஷகாட்சியை' விபரிக்கின்றான்.

"பள்ளிசெல்லும் அவசரத்தில் கிறீம் கொக்கோ தடவிய பாணைக்கடித்தபடி முதுகில் புத்தகப் பையுடன் வீட்டைவிட்டு வெளியேறுகிறாள் ஆயிஸா. முன்வாசல் கதவருகில் மறைந்து நின்ற தந்தை திடீரென றிவோல்வருடன் அவள்முன் தோன்றவும் வெலவெலத்துட் போகிறாள்.சும்மா விளையாடுகிறார்கள் என முதலில் நினைத்தேன்."

"பொலிஸிலே என்னடி சொன்னே?" அக்கினித் துண்டங்களாய் வார்த்தைகள்.

மறுகணம்.......பயம்....மரணபயம்.......சர்வநாடியும் ஒடுங்கத்திகைத்து நின்றவள்......அந்த விநாடியில் செய்வதறியாமல்..... பேச குரல் எழாமல் ஓடுகிறாள். அவன் துரத்திப்போய் மீண்டும் அவளை முன் மறித்து றிவோல்வரை அவளின் நெற்றிப் பொட்டுக்கு நீட்டுகிறான்.

**papa.....nein...nein....nein....bitte nicht schieben!**
(பப்பா..வேண்டாம்..வேண்டாம்...வேண்டாம்....சுடவேண்டாம்...)
டுமீல்....டுமீல்....டுமீல்....டுமீல்....டுமீல்....

தலையில் இருந்து மார்புவரை நான்கு துளைகளால் இரத்தம் வடிகிறது. எம்பினாள், சாய்ந்தாள், வீழ்ந்தாள், துடித்தாள்,ஓய்ந்தாள்.புத்தகப்பைகூடக்குண்டுகளால் துளைக்கப்பட்டிருந்தது. பாதி கடித்த பாண் துண்டு அவள் காலடியில் கிடந்தது,ஓரங்கள் குருதியில்

www.tamilarangam.net

நனைந்தபடி.அவன் ஓடத்தொடங்கினான்.கையில் கிடைத்த ஒரு கல்லை எடுத்துக்கொண்டு விரட்டினேன்.திடீரென அவன் நின்றான்.ஏதும் மீதிக்குண்டு இருந்தால் அவன் என்னையும் தீர்த்துவிடலாம் எனப் பயந்தேன்.அவன் நிதானமாக றிவோல்வர் முனையைத் தன் கன்ன மண்டையில் வைத்தான். டிறிக்கரை இயக்கினான் டுமீல்'.....சாய்ந்தான்

விடயத்தின் அவலம்' புரியாமல் பத்திரிகையைத் தன் மகளைவிட்டே வாசிக்க நேர்ந்தமைக்காக மேலும் சஞ்சலப்பட்டாள்.

பதினாலு கோடி உலகங்களுக்கும் சொந்தமான பிரமோதரனே,நாமறியாத உனது மாய உலகம் ஒன்றிலுள்ள விசித்திரப்பழக்கத்தைக் கொண்டு வந்து எமது குடிசைகளில் பரிசோதனை பண்ணுகிறாயா? அல்லது பள்ளிகொண்ட கலக்கத்தில் புத்திகளை இடம்மாறிப் படைத்து விட்டாயா? ஐயனே மனுவின் விதிகளைப் பின்பற்ற வினையும், பல்லாயிரம் வருடங்கள் தார்மீகப் பின்னணி கொண்ட நாகரீகச் சமுதாயம் இது. இங்கே நாம் கொள்ள முடியாதவைகளையும் விகாரங்களையும் விதையாதே,

பிளீஸ்! பாரம்பரியம், சமூகநெறி, சம்பிரதாயம், ஆன்மீக உந்துதல் எல்லாம் ஒரு நவீன சிந்தனையாளனுக்கு அர்த்தமற்றவைகளாகலாம். ஆனால் சிந்தனை செயற்பட வேண்டிய நேரத்தில் தார்மீகமற்று வெறும் உணர்ச்சிகள் செயற்படுதல் மானிடம் பாதாளத்துள் சாயும் அவலம்!

"மாமன் மகளை மணப்பதும்,மச்சாளை மணப்பதுமே திராவிடப் பாரம்பரிய வழக்கமல்ல' என்று கல்லூரி நாட்களில் பட்டிமன்றங்களில் விவாதித்தவள். இரத்தஉறவுக்குள் திருமணக் கலப்புகள் ஏற்படுவது ஆகாது'என்ற விஞ்ஞானமும் அறிந்தவள். விலங்காய், காட்டுமிராண்டிகளாய் வாழ்ந்த நிலையில் இருந்து பல ஆயிரம் வருடங்கள் தேடிக்கொண்ட நாகரீக மானிடத்தின் சீரிய விழுமியங்களின் கொடியை மிக உயர்த்திப் பிடித்தவள்.துளியும் எதிர்பாராத விதத்தில் தோன்றும் பூகம்பங்களையும், மானிடப் பண்பின் விகாரங்களையும் விளங்கமுடியாதவள்.

மனிதசமுதாயமும், பரம்பரை மரபுகளும் மாறிக்கொண்டேயிருக்கும். மானிடத்தின் சீரிய விழுமியங்களின் பரிணாமத்தில் பழையன அழிந்து புதியதிற்கு வழிகாட்டும்.'

சரி, விகாரங்களுக்கு என்ன விளக்கம்? இயல்பானவையா? விகாரபுத்தி உடைய தலைவனைக் கொண்ட குடும்பத்தில் ஒரு ஆண்பிள்ளையாவது இருந்தால் தார்மீக உறவு நூல் வேலிகள் முட்டப்படவோ, சாய்க்கப்படவோ சந்தர்ப்பங்கள் குறைவாக அமையும் என எண்ணினாள். வீட்டுக்குள்ளேயே பாதுகாப்பு அற்று வாழும் இவர்கள்தான் உலகின் முதல் அபலைகள்!

"ஏய் சின்ன ஆயிசா காண்போரை இன்னொரு முறை கவனிக்க வைக்கும்படி செய்த அழகிய அரபு மலரே.... உன் அழகின் ஆகர்ண சக்தி தர்மதேவன் கண்ணயர்ந்த வேளைகளில் எந்த ஒரு மசூதியிலிருந்தேனும் ஷசலவாத்து ஒலி' காதில் வீழாத கணங்களில் தார்மீக உறவுமுறை வேலிகளைத் தகர்த்து வீழ்த்திவிட்டு அதன் சிதிலங்களைத் தலைகீழாகப் பொருத்த முயற்சி செய்ததா?

நீ எங்கள் பக்கத்தில் ஒரு ஆண் குழந்தையாக ஜனனித்திருந்தால் பிதா மரணமாகும் பட்சத்தில் சாஸ்திரமோ- பொய்யோ பிதுர்க்கிரியை யாவும் செய்து நமஸ்கரித்திருக்கக்கூடிய ஒரு மொட்டைத் தானே துப்பாக்கி கொண்டு துளைக்கும் கொடியவிதியின் வரிகளை இன்னும் உன் போல் பதினா மொட்டுக்களின் தந்தைப் பிரகிருதிக்கு எழுதிவைத்தவ யார்?

நீ பள்ளி செல்லப் படியிறங்கிய போதல்ல கிளி அதற்கு முதலே அவனால் நீ கொல்லப் பட்டு விட்டா அந்த மர்மவிலங்கினால் நீ தினம் தினம் தின்னப்பட் இம்சைப்படும் கொடுமையினின்றும் விடுவித்து தன்னிடம் அழைத்துப் போகத்தான் மாயவன் உன்னை போய் போலிஸில் முறையிடு என்றுன் காதில் சொல்லி தைரியமும் தந்தானோ? சரி.........சரி.......முடிந்த அவ்விலங்கை மன்னித்து விடு. இனி மேல் அ யாரையும் கடிக்கப் போவதில்லை. அந்த மாயாவி இறுதியாயிருந்த குண்டையும் நீயே உன் கபாலத்து புதைத்துவிடு என்று அவ்விலங்கின் காதிலூ ஓதிவிட்டான்.

நான் பெற்றெடுக்காத இன்னொரு குழந்தையே உன்னை வாழ்த்துகிறேன். நீ சாந்தி எய்துவதாகுக தேவலோகத்து விதிகள்-நடப்புகள் ஒன்று தெரியவில்லை. மீண்டும் பிறந்து வாழ்வதே உ விதியாயின் என் அப்பாவுக்கு மகளாய் வந்த பிறந்துபார்.தந்தை அன்பை முழுதாய் அனுபவி! நானு உன் சகோதரியாவேன். அப்பாவின் கருணையில் மீண்டு நனைவோம்!

நவீன சமூகத்தில் இடையிடையே தோன்று இவ்வகை அனர்த்தங்கள் மனிதன் அடிப்படையில் விலங்குதான் என்பதைக்கூறும் அனுவாதம **(recaputulation)**? அல்லது கலியுகமுடிவில் பிரமோதர உன் மீள் வருகைக்கான அடையாளங்களா?


முப்பத்தேழு ஆப்பிரேஸன்களிலும் உயி பிழைத்தவனே உன் கருவறையிலிருந்து ஒரு கணமேனும் கண் திற.
என் சந்தேகங்களைத் தீர்த்து வை!
இக்குழந்தையின் வழக்கைப் படித்துப் பார்.
அவளின் சிறு உலகில்-
முதல் நிழல் மரமும்,
பிறர் எவரேனும் சிறுமை செய்ய முனையின் அவர்களை உதைத்து விரட்டவல்ல காவலனும்,
ஒவ்வொரு சிறு பசியிலும், தாகத்திலும், சோர்விலும், தேவையிலும் அணைத்து ஆதரவு தரவேண்டிய தந்தையே நபும்சகத்தனமாய்' தன் அரக்கப் பற்களால் கடித்துக் கடித்து இம்சித்த துன்ப நிகழ்வுகளை அக்குழந்தையின் ஞாபகப் புலன்களிலிருந்து முற்றாகக் கழுவிப் போக்கி விடவல்ல மந்திரத் தைலத்தால் குளிப்பாட்டு!

மீண்டும் மீண்டும் துப்பாக்கிக்குண்டுகள் தீர்க்கப்படும் அவல ஒலி....துளசியின் காதுகளில் ஒலிக்கிறது....... பயமாகவிருந்தது.
தனது ஜெர்மன் வாழ்க்கை பற்றிச் சிந்தித்தாள்.
வாழ்க்கை வெள்ளத்தின் அதி ஆழத்தில் ஆயிஸாவின் விம்பங்கள் அவள் பிள்ளைகளின் மூவரினதும் பிரதிமைகளாய்
ஒன்றாய்.......பலவாய்.......அது உயிர் பிழியப்படும் அவஸ்த்தை.......!
வாழ்வின் ஏமாற்றம் தாங்கஇயலாது அவளுள் அழுதாள்.இரண்டுநாட்கள் அதிதீவிரமாகவே யோசித்தாள். பிள்ளைகள் கூடக்கேட்டார்கள்.

"என்னம்மா.....ஒருமாதிரி இருக்கிறே? ஏதும் சுகமில்லையா உனக்கு?"

"சே...அப்பிடியொன்றுமில்லை......நீங்கள் ஹோம்வேர்க் எல்லாம் செய்யுங்கோ."

www.tamilarangam.net



துளசி தீர்மானமாக ஒருமுடிவுக்கு வந்தாள்.இந்த வைராக்கியம் தனக்கு எப்படி வந்ததென்று அவளுக்கு ஆச்சரியமாகவிருந்தது!

அதுவிடமிருந்து நானும் பிள்ளைகளும் பிரிந்து போய்விட வேண்டியதுதான். தாயகத்தில் சகஜநிலை திரும்பும் வரையில்-பிரான்ஸக்கோ, போலந்துக்கோ போய்விடவேண்டும்.

எல்லோர் வாழ்விலும் எதிர்பாராத சம்பவங்கள் ஏற்படுவதுதான். அவை துளசி வாழ்வில் மிக அதீதமாக. வாழ்வின் விகாரங்களால் (**mutations**) மிகக் குழம்பியதால் எவரிடமும்

எந்த உதவியுமே கேட்டு மண்டியிடாதவள் பாரிஸில் இருக்கும் தன்கல்லூரித் தோழியிடம் நேற்றுப் போனில் யாசித்தாள்.

"சிவமலர்.....இங்கேபார், ஜெர்மனியில் கொஞ்சம் நிம்மதியாய்இருப்பேன் என்றநம்பிக்கையோடுதான் வந்தேன்......என் சந்தோஸங்களுக்குத் திரையாய் இருக்கும் அந்த சைத்தானும் .'.ப்ளைட்டில் என்கூடவே வந்திருக்கென்பது இப்பதான் தெரியுது.......என் விஸயத்தில் கடவுளின் றோல் என்னவென்றும் புரியவில்லை....."(குலுங்கி அழுதாள். பின் சமாளித்துக்கொண்டு பேசினாள்).

"துளசி நல்லாய் மனமுடைந்த போயிருக்கிறாய் கடவுள் கண் திறப்பார்."

"என்றைக்கு அப்பாவின் அருமை தெரியாமல் அவரை நோகடிச்சுப் போட்டு உதாசீனம் பண்ணிவிட்டு அது' க்குப் பின்னால் காலடி எடுத்து வைத்தன் அன்றைக்கு என்னைத் தொட்டது ஷஏழரை நாட்டுச் சனியன்' வருடம் பதினாறாகியும் இன்னும் விட்டுப் போக மாட்டேனென்குது."

"எல்லாம் நல்ல காலம் பிறக்கும்.......கஸ்டங்கள் நெடுகத் தொடராது.என்னைத் தொடருதே....... நான் எதிர்கொள்ளும் கஸ்டங்களும், சோதனைகளும்,விநோதமாயிருக்கே..... இவை எனக்கெனவே விசேடமாக உண்டு பண்ணப்படுவன போலவுமிருக்கு (மீண்டும் அழுகை) அப்பா இருந்தாலாவது அவர் காலடிகளில் போய் விழுந்து விடுவேன்.இனி நானெங்கு போவேன்.?"

பல நாட்கள் கழித்து தோழிகள் இருவரும் ரெலிபோன் யுனிட் ஏறுவதைப் பொருட்படுத்தாது பேசினார்கள்.

"எனக்கு இங்கு பிள்ளைகளை இனி ஒரு நிமிடம் கூட வைத்திருக்க முடியாத இக்கட்டு நிலைமை யொன்று உருவாகிவிட்டது. நான் உடனே அவளவையைப் பாதுகாப்பான ஒரு இடத்திற்கு அனுப்ப வேண்டும்.எனக்கு இப்போதைக்கு உன்னை விட்டால் வேறு புகலிடம் இருப்பதாக தெரியவில்லை.......நீ என்ன சொல்லுகிறாய் சிவமலர்?"

"துளசி நீ உன்னுடைய பிள்ளைகளை எந்த நேரமும் இங்கே அனுப்பலாம்.இது உன்னுடைய வீடு"

"ரொம்ப தாங்ஸடி.....மறுப்புச் சொல்லமாட்டாய் என்ற நம்பிக்கையிருந்த படியால்தான் துணிந்து கேட்டனான்.என்னடா இவள் ஒரு பெரிய பொறுப்பை ஒப்படைக்கிறாளே யென்று பயப்படாதை.நானும் இரண்டொரு மாதத்தில் அங்க வந்து சேருவேன்.எங்களை பதிய வேண்டிய இடத்தில் பதிந்து.... உங்கே கொஞ்சம் கஸ்டமென்று தெரியும்........

ஒரு குச்சுக் கிராமத்தில் என்றாலும் சரி ஒரு வீடு எடுக்க உதவி பண்ணினால் போதும்......பிழைத்துக் கொள்கிறோம் நாங்கள்."

www.tamilarangam.net

"என்ன துளசி அப்படித் திடீரென் ஏற்பட்ட பிரச்சனை.....பெட்டையள் யாரையும் ஷலவ்' பண்றாளவையோ?"

"அப்பிடி யொன்றுமில்லை.............................என்ரை பிள்ளையளுக்குக் காதலின்ரை கஸ்டங்களைப் போதிய அளவு இப்பவே சொல்லி வைத்திருக்கிறேன்........"

"பின்னே என்ன....மனிசன் குடி வெறியென்று ஏதும் அட்டகாசம் பண்றாரோ?"

"அதுவுமில்லை....."

"யாரும் வெள்ளைத் தோல் பின்னால மினக்கெடுறாரோ........இது யாரையும் சபலப்பட வைக்கக் கூடிய நாடுதானே. அப்படியென்றால் போ' என்று கையை விட வேண்டியதுதான். அவளவையாய்த் துரத்திற காலம் தானாய் வரத் தானாய்க் கட்டைக்கு வருவினம்...."

துளசிக்கு ஒரு கணம் எல்லாவற்றையும் இவளிடம் கொட்டிவிடவா' என்றுமிருந்தது.பின் மறுகணம் புத்தியில் இது என் பல்லின் அழுக்கு' இதை என்னதான் உயிர்த் தோழியானாலும் ஒரு மூன்றாமவர் தெரியவரும் போது அப்பிரச்சனை வேறு ஒரு திசையில் பரிணாமம் அடைந்து எதிர்காலத்தில் என் குழந்தைகளுக்கும் வேறு புதிய பிரச்சனைகளை வேறு முகங்களில் உண்டு பண்ணும் என்னும் சூக்குமம்' பட்டது. சமாளித்தாள்.

அது பல நூறு இருக்கு.....ஒன்று இரண்டென்றாலல்லோ போனில் சொல்லி முடித்துவிட.........நான் நேரில் எல்லாம் விபரமாய் சொல்லிறன் சிவமலர்....இப்ப கேளாத....பிளிஸ்
சரி நேரில பேசுவம்.... சார்புறுக்கனில ஒரு நல்ல போடர் செய்யிற பொடியன் இருக்கிறான். ஜெயந்தன் என்று பெயர்......ஷகொன்டாக்' பண்ணுங்கோ...........மறக்காமல் ஐடென்ரிரி கார்ட்டையும் கொடுத்து விட்டுவிடு. அப்ப தான் சீக்கிரம் கார்ட் கிடைக்கும். அவருமிப்ப சோமானில' தானிருக்கிறார். உடன புதிய ஏற்பாடு செய்வர். அங்கிருந்து புறப்படிற தேதியைத் தீர்மானம் பண்ணினாப் போல போன் பண்ணன்.

துளசியின் அப்பா **survey suprentendent** ஆகப் பணியாற்றியவர்.வீட்டில் துளசியும் உத்தியோகம் பார்த்துத்தான் ஆகவேண்டுமென்ற எந்த நிர்ப்பந்தமுமில்லை. சும்மா விளையாட்டாக க.பொ.த.உயர்தரம் படித்துக்கொண்டிருக்கும் போது ரீச்சர் வேலைக்கு மனுப் போட்டாள்.தன் படிப்பைக் குழப்பவென்றே தன்னுள் பசாசு ஒன்று புகுந்து தன்னை வேலைக்கு மனுப்போட வைத்ததாக இப்போது எண்ணுகிறாள்.வேலை கிடைத்ததும் படிப்பைத் தொடர்வதா இல்லை வேலையை தொடர்வதா என்ற மனப் போராட்டம் வந்த போது படிப்பு எதற்கு வேலைக்கே என்று அப்பசாசு ஓதியது.அவள் அழகையும் புத்தி சாதுர்யத்தையும் பார்த்துப் பல இடங்களிலிருந்தும் பல வகை உத்தியோக மாப்பிள்ளைகளுக்கும் பெண் கேட்டார்கள். எல்லாவற்றையும் நிராகரித்தாள்.கொழும்பில் ஒரு பிரபலமான கொன்வென்ட் பள்ளியில் அப்பொயிண்ட்மென்ட் கிடைத்தபோது மகிழத்தான் செய்தாள்.

ஒரு சிறுமிக்கு உரிய குதூகலத்துடன் அப்பாவின் நண்பர் குடும்பம் இருந்த வீட்டில் ஒரு அறையை வாடகைக்கு வைத்துக்கொண்டு பள்ளிக்கு போய் வந்து கொண்டிருந்தாள்.

அக்காலங்களில் கூடத் தன் வாழ்க்கையை இன்ன திசையில் தான் கொண்டு செல்லவேண்டு மென்ற தீர்க்கமான கொள்கையோ திட்டங்களோ எதுவும் வைத்திருக்கவில்லை.ஒரு பேதையாகவே இருந்தாள்.இல்லாவிடின் எச் அன்ட் சி மில்லில் மாறு கண்ணுடனும் சமச்சீரற்ற வாயுடனும் டெஸ்பாட்ச் கிளார்க்காயிருந்த ஒரு சாமானியத்திலும் சாமானியன் காந்தர்வருபனாகத் தெரிந்திருக்க மாட்டான்!

தமிழிச்சி என்ற தென்பா இல்லை உள்ளே போயிருந்த பியர்' கொடுத்த தைரியமோ முதற் சந்திப்பில் ஹலோ' என்றான். இவளுள் இருந்த பிசாசும் பதிலுக்கு ஒரு சிநேகமான புன்னகையை அணியச் சொல்லியது. அவள் ஒரு சாண் எடுத்து வைக்க அவன் ஒரு பாகம் எடுத்து வைத்து முன்னேறினான். யாரையுமே நின்று நிதானித்து இன்னுமொருதரம் கவனிக்க வைக்கும் உடல் வாகும் சோபையும் அவனுக்கு.

தேனீயாக வளைய வந்தான். விகாரமகா தேவி பார்க்கிலும், அமெரிக்கா ஹவுஸ் லைப்ரறியிலும், வெள்ளவத்தைக் கடற்கரையிலும் ஒழுங்காகச் சந்தித்தார்கள்.

ஊரிலும் புகைந்தது. அப்பா கூப்பிட்டு விசாரித்தார்.லீவில் ஊருக்குப் போயிருந்த போது வீட்டில் ஒரு நாள் எல்லாரும் தூங்கிய பின் அவள் தலையைக் கோதியபடியாக இதமான மொழிகளில் புத்திமதிகள் சொன்னார்.அவள் நினைத்திருந்தால் அவனை அப்பாவுக்குப் பிடிக்கவில்லை என்பதைக் காரணம் காட்டித் துறந்திருக்கலாம்.

நுவர-எலியாவுக்கு பிக்னிக் போவோம் அங்கே உறவினர் வீட்டில் தங்கலாம் வா' என்று அழைத்துப் போய் உறவினர் அவசர அலுவலாய் கண்டிக்குப் போய்விட்டாராம் டுரிஸ்ட் ஹோட்டலில் தங்கலாம்' என நிர்ப்பந்தித்த போது துறந்திருக்கலாம்.

நடு இரவில் கடுங் குளிரில் கடைசி பஸ் எடுத்து நானு ஓயா வந்து ரயில்வே ஸ்டேசன் மரபெஞ்சில் ஒரு ஸ்வெட்டர் கூட இல்லாமல் விடியும்வரை நடுங்கியபோது துறந்திருக்கலாம்.

அவன் தன் கத்தோலிக்க திருச்சபை'யை துறக்க முடியாது என்று பிடிவாதம் பிடித்த போது துறந்திருக்கலாம்.

இதையே சாக்காக வைத்து அவளைப் பார்க்காமலேயே இரண்டு மாதங்கள் இருந்த போது போகட்டும் பயல்' என்று காய் வெட்டி இருக்கலாம். நானே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்கிறேன் கண்ணாளா சினம் தணிந்து எனை ஏற்பீர்' என்று அந்த சைததான்தானே கூட்டிச் சென்றது?

அப்பாவையே எதிர்த்துச் சண்டை போட வைத்தது. உங்களுக்கு இஸ்டமில்லை என்றால் அவர் தொடர்பை விட்டு விடுகிறேனப்பா' என்று சொன்ன வார்த்தையை மறுதலிக்க வைத்தது.

சமயங்களில் தேவாங்கைப் போல அவன் சதா ஒருவகைச்சோகத்தால் தோய்ந்திருப்பதாகப்படும். மற்றவர்களுடன் கல கலப்பாக சிரித்துப்பேசி அவள் கண்டதில்லை. தன் மேல் காதல் வசப் பட்டதால்தன்னை இழக்க வேண்டி வந்து விடுமோ என்ற ஏக்கத்தால் அப்படி இருக்கின்றான் என்று' சமாதானம் செய்து கொண்டாள். நடப்புலக நிகழ்வுகளில் அக்கறையோ,வாசிக்கும் பழக்கமோ, இலக்கிய ரசனையோ,இசைரசனையோ இல்லாத ஒரு பிரகிருதியுடன் புத்தி மழுங்கி பெற்றவர் பதைத்துப் போகும்படி ஒரு இரவில் பெட்டியைத் தூக்கிக் கொண்டு ஓடிப்போய் விட அந்தப் பிசாசு புத்தி சொன்னது.

பரதேசம் போன திருடர்களைப் போல பரிச்சயமே இல்லாத ஓர் ஊரில் ரிஜிஸ்ரார் ஒபீசில் அந்நியர்கள் முன்னிலையில் சாட்சிகளாக அவள் என்றுமே முகங்காணாத இருவர் இவள் என் பெரியப்பா மகள்' எனப் பொய்க் கையெழுத்துப் போடப் பதிவுத் திருமணம் செய்து கொண்ட போது மனதுள் ஒரு கணம்

www.tamilarangam.net


# நோர்வேத் தமிழ்ச் சிறுகதைத் தொகுப்பு

1989ல் நோர்வேயில் வாழும் தமிழ்க் கவிஞர்களது கவிதைகளைத் தொகுத்துத் துருவச்சுவடுகள் கவிதைத் தொகுதி சுவடுகள் பதிப்பகத்தால் வெளிக்கொணரப்பட்டபோது அது ஐரோப்பாவின் முதன்முதல் தமிழ்க் கவிதைத் தொகுதி ஆகியது.

இதேவரிசையில் நோர்வேயில் வாழும் தமிழ்ச் சிறுகதை எழுத்தாளரது கதைகளை, எழுத்தாளர்களது ஆதரவுடன் வெளிக்கொணரச் சுவடுகள் பதிப்பகம் உத்தேசித்துள்ளது.

நோர்வேயில் வாழும் தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர்கள் அனைவரையும் தம்முடன் தொடர்பு கொள்ளச் சுவடுகள் பதிப்பகம் வேண்டுகிறது.

**Suvadugal Pathippagam, Herslebs gt43, 0578 Oslo.**


சுருக்'கென்றது.

சுற்றமும் நட்பும் அறியாமல் வேற்றுலகத்தில் நடந்தது போன்ற திருமணத்தின் பின் மயக்கங்கள் தீர்ந்து போனபின்-

திருமணத்திற்கும், ஹனிமூனுக்கும் வீட்டைச் சில நாட்கள் கொடுத்து உதவிய அவனின் உறவோ அந்த மனிதர்களின் உக்கிரான அறையில் ஒரு காகித அட்டைப் பெட்டியுள் அட்டைகள் இல்லாது மூலைகள் சுருண்டு பழுப்பு ஏறிய ஆனந்த விகடனையும், பி.டி.சாமி மாயாவியின் ஐம்பது பைசா மர்ம நாவல்களையும், பழைய பத்திரிகைகளையும் அட்சரம் விடாது படித்து தீர்த்த பின்-அழகியல் பற்றியோ, வேறேதும் நுண்கலைபற்றியோ, சரி பைபிளைப்பற்றியோ வேண்டாம்,இளையராஜாபற்றியோ பொழுது போக்காகக்கூட,மேலெழுந்தவாரியாகவேனும் அவனுடன் பேசமுடியாதென்று தெரிந்த போது துளசி பெரிய தப்பொன்றைப் பண்ணி விட்டோமென்று' முதன் முதலில் பயந்தாள்!

அவன் மீது காதல் பிறந்த அந்த அவலக் கணத்தில்' தான் ஒரு சிறு பசாசின் முழு ஆளுகைக்கு உட்பட்டிருந்தது போல உணர்ந்தாள்! எல்லாவற்றையும் பிய்த்து உதறிவிட்டு ஓடி வந்து அப்பாவைக் கட்டிக் கொண்டு கதற வேணும் போல இருந்தது.தன்னை மீண்டும் கன்னியாக்கி -அப்பாவின் கைகளிலேயே கொடுத்து விடக்கூடிய - ஒரு தேவதை வானத்திலிருந்து வராதா' என ஏங்கினாள்.

அப்பா என்னை மன்னித்துவிடுங்கள். பெரிய மனிசியைப்போல விதி என்னும் மாயக்குரங்கு என் வாழ்விலும் விளையாடிவிட்டது என்பேன். உங்கள் காவலில் அணைப்பில் தூங்க மறுத்த ஒரு இரவில் ஒரு ஓநாய் என்னைத் தூக்கி வந்து விட்டது. எல்லா அப்பாமார்களும் இப்படித்தான் காதலை எதிர்ப்பார்கள் என்றெண்ணி உங்களை அவமதித்தேன். என் மேல், என் சந்தோஸங்கள் மேல் அக்கறை கொண்டு எனக்கு அறிவுரைகள் கூறக் கூடிய ஒரே ஆத்மா நீங்கள் தானே என்பதை உணராமல் உங்கள் புத்திமதிகளை ஒரு குரங்கைப் போல புறங்கையால் தட்டி விட்டேன்.

அவள் கடந்து வந்த பாதை கொட்டும் மழையில் வைப்பர்கள்' இயங்காத காரின் கண்ணாடியினூடே தெரிவது போன்று அருகலாகத் தெரிந்தது.

பாற் பற்களைக்கூட சிறு செப்பினுள் பாதுகாத்து வைத்திருந்த பாசமிக்க தந்தையே....உங்களை ஷநான் வாழ்ந்ததிற்கு ஒரு காரணமிருந்தது-அது என் மக துளசி. அவள் என்னைப் பிரிந்த அன்றே நான் இறந்து விட்டேன்' என்று சொல்ல வைத்த நான் எவ்வளவு கொடுமைக்காரி! அப்பா! இறைவன் மூன்று வெள்ளாட்டுக் குட்டிகளை எனக்குத் தந்துள்ளான். அவர்களைச் சீராக வளர்த்து செம்மையான வாழ்வை அமைத்துக் கொடுப்பதன் மூலம் உங்களுக்கு நான் செய்த துரோகத்திற்குப் பிராயச்சித்தம்' தேடிக் கொள்வேன் என்ற நம்பிக்கையுடன் ஜெர்மனி புறப்படும் என்னையும் என் குட்டிகளையும் ஆசிர்வதியுங்கள்.!

ஜெர்மனி வாழ்வு சில வேளைகளில் ஜோராகத்தானுள்ளது.சில வேளைகளில் சகிக்க வேண்டியுள்ளது.பிள்ளைகள் மூவருமே கவனமாகப் படிக்கிறார்கள்.சந்தோசமாகவுள்ளது.
தமிழைப் போலவே சரளமாக ஆங்கிலமும் ஜெர்மனும் பேசுகிறார்கள் சந்தோசமாகவுள்ளது.

அடுத்தடுத்துப் பூத்துக் குலுங்கி அழகாகவேயுள்ளனர். பூப்பானதும் உடலில் யௌவனம் உண்டு பண்ணும் 'ஹோர்மோன்கள்' புதிதாய் சுரந்து குதித்துக் குதித்து ஓடுமாமே? என் குட்டிகளிலும் அவை ஏகத்திற்குக் குதிக்கின்றன போலும்.! இருவரும் சோபையில் ஒருவரை ஒருவர் விஞ்சிவிடுவதாவேஇருக்கின்றனர். இளையவளும்

இவர்களுடன் போட்டியில் விரைவில் கலந்து கொள்வாள்!அப்போது இன்னும் அதிகமாக நெருப்பை மடியில் கட்டிக் கொள்வேனோ?

மனதைச் சபலிக்க வைக்கும் முத்தங்கள், **excitation** தரக்கூடிய தழுவல்கள் உரசல்கள் கலந்துள்ள டிவி படங்கள் பார்க்கின்றனர். இரவில் பதினொன்றுக்கு மேல் **RTL PLUS** ம் பார்ப்பார்களோ? அச்சமாயிருக்கு! இங்குள்ள சில இரண்டுங் கெட்டான் வயதில் உணர்ச்சி உத்வேகத்தால் தடுமாறும் பேதைகள் தம் போல இரட்டிப்பு வயதான ஆப்கானிஸ்தான் காரனுடனும், சீக்கியனுடனும், மூன்று பிள்ளை பெற்ற அரபுக்காரனுடனும் அவசர முடிவெடுத்து ஓடிப் போகுதுகள்.!

கர்ப்பமாகி அவர்கள் திரும்பி வருவதைப் பார்த்துப் பதைக்கும் பெற்றோர்களை பார்க்க முடிவதில்லை. பரிதாபமாயிருக்கு!

பள்ளித் தோழர்களால் கர்ப்பமாகும் மாணவிகளின் எண்ணிக்கை அதிரிக்கின்றது. அதிர்ச்சியாகவுள்ளது! சமூகநலன் பகுதியினரே உங்கள் பிள்ளைகளின் நண்பர்களை கவனியுங்கள் விழிப்பாயிருங்கள் என பெற்றோரை எச்சரிக்கும்படி நிலமை!

ஊரிலுள்ள இளவட்டங்கள் கண்ணெல்லாம் என் வீட்டு ஜன்னலைப் படருகின்றன.

"அக்கா சிலோன் மாப் இருக்கா?"

"அக்கா நீல நூல் இருக்கா?"

"அக்கா என் கோட்டுக்கு தெறி தைச்சுத் தாரீங்களா?"

"அக்கா இந்த காற்சட்டைக் காலைக் கொஞ்சம் நறுக்கி மடித்துத் தைத்துத் தர முடியுமா?"

"அக்கா பேர்த் டே கேக் பண்ணித் தாரீங்களா?"

சேர்ச்சுக்கோ, கோவிலுக்கோ போக வெளிக்கிட்டால் எங்களுக்கு முதலே அவர்கள் ஆஜராகிவிடுகிறார்கள். வளைய வருகிறார்கள். இது சர்வதேச பெற்றோர் பிரச்சனைதான். எனினும் எக்ஸ்ரா கிளாஸ் போகும் பிள்ளை ஒழுங்காய் வீடு வந்து சேருமா? யாரும் கடத்தி விடுவார்களா? அச்சமாயிருக்கு!

**excursion** போக அனுமதிக்கலாமா? போதை மருந்து பழக்கத்துக்கு ஆளாகிவிடுவார்களோ?

என் குட்டிகளைச் சூழவுள்ள உலகம் பற்றிப் பயமாயிருக்கு!

"என்னங்க ஏன் இப்படி உங்களுக்குப் புத்தி போகுது?"

"என்ன சொல்லுறாய்?"

"நுகேகொட பஸ்சில யாரோ ஆபிஸ் போற சிங்களத்தி குடையைத் தூக்கி அடிக்க வந்தாளாமே?.........உங்க வயசுக்கும் நம்ம கௌரவத்திற்கும் இதெல்லாம் சரிதானா?"

"எந்த நாய் சொன்னது?"

"உங்களையும் என்னையும் தெரிந்த ஒரு நாயென்று வையுங்களேன்......."

"தெரிஞ்சுப் போச்சில்ல.......பிறகென்ன கேள்வி?"

"உங்களுக்கும் பெண் பிள்ளைகள் இருக்கில்ல......யாராவது ஒருத்தன் பஸ்ஸில அவங்கள் இடுப்பைத் தடவினான் என்றால் உங்களுக்குச் சம்மதமா?"

என்ன அகங்காரமாய் பதில் சொன்னான்.

"அது ஏற்கனவே நான் பார்த்த கேஸ்தான்.......அன்றைக்கு அவள் புருசன் கூட நிற்கிறது தெரியாமல் கையை வைச்சிட்டேனா கொஞ்சம் கோவப்பட்ட மாதிரி நடிச்சாள்...... அவ்வளவுதான்.........."

"இவ்வளவு அலட்சியமாய் பதில் சொல்றீங்களே.....பெண்ணென்றால் அவ்வளவுக்கு இளக்காரமாய்ப் போச்சா...?"

**"No...never...you are the great!but you see this is my life style,that`s all!**

"நீ எந்த எந்த மூலையில எல்லாம் ஒளிகிறாயென்று நான் என்றாவது வேவு பார்த்தேனா?"

அபச்சாரம் பேசாதையுங்கோ.....மனுசருக்கென்று ஒரு உயர்வான வாழ்க்கை நெறியிருக்கு........

தனது சிறுமையை இல்லையென்றாக்க அல்லது சாதாரணமாக்கஇன்னொருத்தயை அபாண்டமாகப் பழி சொல்லும் சிறுமை.

சரி அவளும் இளசுதான்......கொஞ்சம்லோ ப்'பாய் உடுத்தியிருந்தாளென்று தானிருக்கட்டுமே......உடனே அவளுடலில் கையை வைக்கத் துணிகின்ற ரௌடித்தனமும் அயோக்கியத்தனமும் கொண்டவனா நீ?

இதைக் கண்டுபிடிக்க எனக்கு ஏன் இவ்வளவு காலம் சென்றது?

"மக்களைப் போல்வர் மாக்கள்' என்பதாலா?

ஒரு கயமையிலிருந்துதான் இன்னொரு கயமை பிறக்கிறது.

அதிலிருந்து இன்னொன்று. கயமை மிகப் பெரிய பரிணாமம் கொள்ளும்போது சிறுமையிலும் சிறுமை கொள்ளும் மனிதம் தன்னை உணராதிருக்கிறது! மரணத்திலும் ஒரு கிறிஸ்தவனாகவே இறப்பேன் என்று சங்கற்பம் செய்தானே........

பைபிளிலில் வரும் எந்த ஒரு பாத்திரமாவது இவன் செய்கைகளை,நடத்தைகளை நியாயம் என்று சொல்லுமா?

அந்த ஐந்தே முக்கால் பிரகிருதியின் சுயரூபம் ஏன் என்னால் முன்பே காணமுடியவில்லை?

அடே இந்த உம்மணா மூஞ்சி பயலுக்கு எப்படி ஷமயில்' போல் ஒரு பெண் கிடைத்தாள்?

பாரு பயலுக்கு அடித்த குரு சந்திரயோகத்தை......!'

திருமணத்தின் பின் என் காது படவே பேசிக்கொண்டார்கள்.

துளசி சின்ன வயதில் தம்பிமார்களுடனும் தோழிகளுடனும் பள்ளியிலிருந்து வீடு திரும்பும்போது சாரி சாரியாக செம்மறி யாட்டு மந்தைகளை ஓட்டி வருவார்கள். ஆசாரித்திடல் வீரவாணி நாலாங்காளித் தரவைகளில் அவைகளை மேயவிட்ட பின்னால் அந்திரானைக் கலட்டிகளினூடு ஓட்டி வந்து வெட்டுக் குளத்தில் தண்ணீர் காட்டுவார்கள். பின் றோட்டுக்குக் குறுக்காக ஓட்டிச்சென்று வாழைத் தோட்டங்களிலும், விதைப்புக்கான வயல்களிலும் பட்டியிட்டுக் கட்டுவார்கள். உயிர் கொண்ட சலவை செய்த வெள்ளைத் துணிக் குவியல்கள் போல - பஞ்சுப் பொதிகள் போல ஒவ்வொன்றும் துள்ளிக் குதிக்கும் விளையாடும். ஒன்றில் ஒன்று தாவும். பட்டியின் ஒவ்வொரு ஆட்டிற்கும் மற்றைய ஆடுகள் உறவுதான்.!

தாயுண்டு,தந்தையுண்டு,அண்ணன்,தங்கையுண்டு மைத்துனன் மைத்துனி அத்தனையுமுண்டு. அவற்றின் விளையாட்டுக்கள் விதிமுறைகள் எதுவும் அற்று இருக்கும். உறவு முறை பற்றி பிரக்ஞையில்லாதவை. பாவம் அவை விலங்குகள்.!

நாடு விட்டு நாடு வந்த பின்னராவது அது' கொஞ்சம் மாறியிருக்கும் என நம்பினாள் எல்லோரையும் போலவே வேலைக்கு போகிறது வருகிறது. ஒரு மாவோ தொப்பி - ஏதோ தீவிரமாக சிந்திப்பவன் போல ஒரு பாவனை. இயல்பில் கல கலப்பாகவே இருக்கத் தெரியாது. எப்போதாவது சிரித்தாலும் இப்போது அருவருப்பாகவிருக்கிறது. பைத்தியம் போல தரையைப் பார்த்தபடி வரும் போகும்.

துளசி ஒரு மயக்கம் தோய்ந்த கணத்தில்

www.tamilarangam.net

ண்ணாடி அறையினுள் ஒரு அப்பாவிப் பறவை ழைந்ததைப் போல அது' உடன் பந்தமுண்டு ண்ணும் மாயக் கூண்டினுள் புகுந்து விட்டாள். துவரை அதினின்றும் வெளியேறும் வழி தெரியாமல் ல்லாச்சுவரிலும் முட்டி மோதி நொந்து வீழ டிந்ததே தவிர விடுதலை அடைய டியவில்லை.பாரிஸ் போக துளசி ஏற்பாடு பண்ணிய ார் சார்புறுக்கனில் இருந்து வந்துவிட்டது. ட்டிப்போகின்றவரை உள்ளே கூப்பிட்டு சாப்பாடு காடுத்து உபசரித்தாள்.அது வேலையால் 5 மணிக்கு டு திரும்புமுன் தன் குழந்தைகள் மூவரையும் ட்டிலிருந்து அனுப்பிவிடவேண்டுமென்று அவசரமவசரமாக வெளிப்படுத்தினாள்.அவள் லைவாரிவிட, அவர்களும் பயணத்திற்கு சௌகரியமான உடைகளை அணிந்து கொண்டார்கள்.அலுமாரி மேலிருந்த மூன்று சூட்கேஸ்களையும் இறக்கி திறந்து வைத்துவிட்டு பிள்ளைகளின் உடுப்புகள் அனைத்தையும் அலுமாரிகளிலிருந்து எடுத்துத் திணித்தாள்.பிள்ளைகளை பிரிந்திருக்கப் போகும் எண்ணம் மனதில் வெற்றிடத்தை உண்டுபண்ண கண்களில் நீர் வந்து முட்டியது.

போடர் செய்யும் இளைஞனும் சொன்னான். பெல்ஜியம் விவசாயிகளுக்கான போடரினூடு பெல்ஜியம் நுழைந்து பிரான்ஸ் போடரினுள் நுழைய இங்கிருந்து ஐந்து மணிக்குள்ளாகப் புறப்பட்டால்தான் சரியாகவிருக்குமாம். அவளும் "அது' வந்து ரகளை ஏதும் பண்ண முதல் புறப்படவேண்டுமென்று கொண்டு போக வேண்டிய ஒவ்வொரு பொருளாகப் பொறுக்கி எடுத்து அவசரமாகத் தயார்படுத்தினாள்.துளசி தன் செல்வங்களின் பிரான்ஸ் வாழ்வும் அடுப்பிலிருந்து நெருப்புக்காய்'மாறி விடாதிருக்க வேண்டுமென்று செல்வச்சந்நிதி முருகனையும், மடுமாதாவையும் வேண்டினாள்.

எல்லோருமாக சூட்கேஸ்களை எடுத்துக்கொண்டு கீழே இறங்கினர். பிள்ளைகள் காரினுள் ஏற முன் ஒவ்வொருவரையும் கட்டி முத்தமிட்டாள்: பிள்ளைகள் அழுதனர்.

'அழ வேண்டாம் கண்ணுகளா...........இதோ இன்னும் இரண்டு மாசத்துள் நானும் பாரீஸ் வந்திடுவேனே.............அழுகை எதற்கு?' மென்மையாக அவர்களை கடிந்து கொண்டாள்.இப்போது துளசி கலங்கவில்லை. மிகத் தெளிவாகவிருந்தாள்.

மூத்த மகளின் காதுகளில் இரகசியமாக சொன்னாள்.


'சிவமலர் ஆன்டி ஒன்றுங் குடைய மாட்டாள்.....கேட்டாள் என்றால் சொல்லு......... அப்பாவோட அம்மாவுக்கு ஒத்துப்போக முடியவில்லை............கருத்து மோதல்களுடன் வாழுறது கஸ்டமாயிருக்கு..........இன்னும் அங்கே **neonazi** தொந்தரவும் தாங்க முடியாமலிருக்கு. நாங்களிருக்கிற **straze** யில்அவர்களின் ஆபிஸ் ஒன்று கூடத் திறந்திருக்கிறார்கள்.......அவர்களால் எந்நேரமும் ஆபத்து நேரலாம் எனப்பயமாயிருக்கு.....அதனாலதான் பிரான்ஸ்சுக்கு வாறதெனத் தீர்மானம் பண்ணினோம்."

திடீரென துளசியின் புத்தியில் மின்னல் போல் ஒரு எண்ணம்'உதித்தது. நீ இன்னமும் அந்த ஓநாய் மனிதனுக்காகப் பரிவு கொள்கிறாய். உங்கள் அனைவரின் திடீர்ப் பிரிவிலும் அவன் சித்தசுவாதீனம் இழந்து விடுவானோ, உயிரை மாய்த்து விடுவானோ என்று பயப்படுகிறாய்.!அது தேவையில்லாதது.ஒவ்வொருஆத்மாவும் அதனதன் கன்மங்களுக்கேற்பவே காரியங்கள் பண்ணும்.நீ இப்போது தேர்ந்தெடுத்துக் கொண்ட பாதை சரியானது.தயங்காதே உன் குழந்தைகளுடன் இப்போதே நீயும் புறப்படு!

டிரைவர் ஆசனத்தில் ஏறி அமர்ந்து விட்ட இளைஞனிடம் சொன்னாள்.'தம்பி ஒரு நிமிடம் பொறும;"

வீட்டினுள் சென்றாள்.இருந்த இன்னுமொரு சூட்கேஸினுள் தன் எல்லா உடுப்புகளையும் வைத்தாள்.சுவரில் இருந்த அப்பாவின் படத்தையும் தன் பாஸ்போட்டையும் எடுத்துக் கொண்டாள்.மேசையில் ஷஅது'க்கு சிறு ஷகுறிப்பு' எழுதி வைத்தாள்.

உமது **life style** ல் எனக்கும் குழந்தைகளுக்கும் உடன்பாடில்லை.எமது வழி வேறு.அதனால் அவ் வழியே செல்கிறோம். தேடவோ தொடரவோ வேண்டாம்.ஆண்டவன் உம்மை இரட்சிக்கட்டும்.' துளசி தன் குஞ்சுகளுடன் புதிய பாதையில் பயணத்தைத் தொடர சூட்கேசுடன் ஒவ்வொரு படியாக நிதானமாக இறங்கி வந்தாள்.



## நினைவுகூரல்

கடந்த வருடப் பிற்பகுதியில் தமிழ் இலக்கிய உலகம் சில முக்கிய படைப்பாளிகளை இழந்தது தமிழில் தீவிர எழுத்துகளைப் பரவலாக்கிய சுபமங்களாவின் ஆசிரியர் கோமல் சுவாமிநாதன், ஈழத்திலும் தரமான எழுத்துகளுடன் சஞ்சிகை ஒன்றை வெற்றிகரமாக நடாத்த முடியும் என நிறுவிய சிரித்திரன் சுந்தர், உழைக்கும் மக்களின் குரலாகத் தன்னை இனங்காட்டிய சமர் ஆசிரியர் டானியல் அன்ரனி, தரமான பல கதைகளால் ஈழத்துத் தமிழ் இலக்கியம் தலைநிமிரச் செய்த எஸ்.அகஸ்தியர், சந்தையாகிப் போன இலங்கை வானொலியிலும் தனது தனித்துவத்தை நிலைநாட்டிய பல்கலை வேந்தர் சில்லையூர் செல்வராஜன் ஆகியோர் இயற்கையின் அழைப்பை ஏற்றனர்.

இவர்களது நல்ல பணிகளை நினைவுகூர்வதும், அப்பணிகளில் அவர்களது நனவுகளைக் கனவாக்குவதுமே, இறவாது எஞ்சியிருக்கும் எம் எல்லோருக்குமான கடன் இவர்களைச் சுவடுகள் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கிறது.

www.tamilarangam.net

ஓட்டமாவடி அறபாத்

# தொப்புள் அறுந்த புண்

நேற்றுமுதல்
ஒரு கவிதையாகிலும்
எழுதினேனில்லை.

விரித்த சிறகிலோர்
அடர்ந்த கவிதையொன்றேனும்
எழுதியிருக்கலாம்
அந்தப் புறா படத்தில்.

இன்றுதான்
என் சுவரிலிருந்து
அதை கிழித்து வீசினேன்.

தெய்வீக மந்திரமாய்
எல்லாச் சனங்களும்
அதன் பெயரை துதித்தனர்.

துருப்பிடித்தன
சில உதடுகள்
புறாவினை நொந்தமைக்காய்!

என்ன வடிவான புறா
என் படுக்கையறையிலும்
வரவேற்பறையிலும்
கண்ணாடி சட்டங்களுக்குள்
சிறகினை பரப்பி, கண்சிமிட்டிற்று.

வெண்மை இறகிலிருந்து
சமாதானம் ஒழுகுமென்ற
கனவுகள் மீதே துயின்றிருந்தேன்
இக்கணம்வரை!

நிலாவில் மூழ்கியது போல்
நித்திரைக் கண்ணை
சிலுப்பிக் கொள்கையில்
என்னெதிரே முறுவலிக்கும்
அப்புறா!

தேவகிரீடமாய்
மழமழப்பான -
அதன் இரைப்பையில்
இருப்பதாய்ச் சொன்னார்கள்
அந்தச் சமாதானம்.

கொடுவிச் சாகும்
பனிக் காற்றிலும்,
கருகியதோர் கோடையிலுமாய்
அதன் சொண்டு விரியுமென்று
விழித்துக் கிடந்தனர் சனங்கள்!

கும்மிருட்டிலோர்
இரத்தப் பிரகடனமாய்
புறாச் சொண்டு அசைந்திற்று
இப்படி -
"எனக்கு வேண்டும் நரமாமிசம்
அவசரமாய் கொண்டு வாருங்கள்"

நேற்றுமுதல் ஒரு கவிதையேனும்
எழுதினேனில்லை
அந்தப் புறா பேசியதிலிருந்து.

# கவிவண்ணனின் மூன்று கவிதைகள்



## மதுரை வாழ்க

மதுரையைப் பார்க்க மாயாண்டிக்கும் ஆசை.
சாகுமுன் வெளிஉலகைப் பார்க்கும் சபலம்
உள்ளுக்குள் துளிர்விடும்.
எத்தனை நாட்கள்
பட்டிக்காட்டில் குந்தியிருப்பது?
காசி ராமேஸ்வரம் போய் வந்தால்
லேசில் கிட்டும் மோட்சம் என்று
வேசி வெள்ளையம்மாள் சொன்னது
ஞாபகம் வந்தது.
ஓசியில் கூப்பிடுறான்
அம்மாசி மவன் "அன்புத் தம்பி"
"காசு செலவு ஏதும் இல்லை,
வழியில் தஞ்சாவூர் புதுக்கோட்டை,
மதுரையில் அம்மா தரிசனம்
கண்கொள்ளா காட்சி
சும்மா வராது தாத்தா,
சோறு பிரியாணி வேளாவேளைக்கு,
கூட்டத்தோடு போய்வருவது
குஷியாயிருக்கும்"
"உடம்பு பயணச் சுமை தாங்காதே
வேற ஏதாச்சும் உண்டா"
"உண்டு, உண்டு போற வழியில
கடைகள் பல சந்துபொந்தில்"
"அதுவும் ஓசிதானே"
"கொஞ்சம் முடிஞ்சிக்கிட்டு வாயேன்"
"எங்கேடா போவேன்
எளவெடுத்தவனே"
"கோவிக்காதே
நானே பாத்துக்கறேன்"
"மவராசி வாழ்க
மதுரை வாழ்க".

## போரும் அமைதியும்

நீலவண்ணத் திரையில்
நிழல் படியும், திடீரென
சிவப்புச் சிதறல்கள்
தூரிகை தொட்டது மனித ரத்தம்.
அக்னி முட்டையிடும்
அலுமினிய நாரைகள்
வானில் வட்டமிட
பச்சை மண்ணில்
சாம்பல் மேடுகள்...
அன்னை மடியில்
அணைந்த விளக்குகள்...
உலக ஓவியம் கறைபடியும்
மீண்டும் மீண்டும்.
சாத்தான்களோ
குளிர் அறைகளில்,
கோபக் குரைப்பில்;
செத்து மடிவதோ
ஊதிய உயிர்கள்;
சண்டையை விரும்பும் சனாதிபதிகளை
இனி
பந்தயத் திடலில் மோதவிடுவோம்
செத்தவன் நாடு தோற்றது
பிழைத்தவன் நாடு வென்றது.

## விதை

காணாமல் போன கவிதையைக்
கூடையில்
குப்பை மேட்டில்
தேடி
மறைவை உணர்ந்து,
பிறப்பித்தவன்
வள்
வர் களைத்
தேட
அவர்களும்
தொலைவில் கரைந்து போனார்.
கண்வழி நுழைந்து
கிளர்ந்து வளர்ந்து
கைவிரல் வழியே
வழிந்த க
விதை
இல்லாமல்
நான் மட்டுமே
தனியாய்
இன்று

www.tamilarangam.net

*mottaker:/ to*

SAMAR
87, RUE DE COLOMBES
92600, ASNIERES SURSEINE
FRANCE

C POST




ROMSÅS A 07.08.96 OSLO

**Av sender : (From)**
***Norway Tamil Culturel Centre***
**Address:**
***Suvadugal,***
***Herslebs gt43,***
***0578 Oslo,***
***NORWAY***

**SUVADUGAL,**
**A Tamil monthly from Norway**
Estd: Sept.1988

**Bank account**: 16075213062
SparebankenNOR

ISSN: 0804 - 5712

**Editorial Group**: Thuruvapalagar

Price: 25NKr
Subscription: 300NKr/ 12 issues

**Published by**:
Norway Tamil Culturel Centre
**Address:**
Suvadugal,
Herslebs gt43,
0578 Oslo,
NORWAY

சுவடுகள்,
தமிழ் மாத இதழ்
ஸ்தாபிதம்: புரட்டாதி 1988

வங்கிக் கணக்கிலக்கம்: 16075213062
ஸ்பாரபாங்கன் நூார்

ஆசிரியர் குழு:
துருவபாலகர்

தனிப்பிரதி விலை: 25 குறோணர்கள்
சந்தா:
பன்னிரு இதழ்களுக்கு 300 குறோணர்கள்

வெளியீடு:
நோர்வே தமிழ்க் கலாசார மையம்
முகவரி:
சுவடுகள்,
ஹேர்சிலெப்ஸ் காதா 43,
0578 ஒஸ்லோ,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்